# கன்னியாகுமரி மாவட்டம்

## பல்துறை வளர்ச்சிப் பணிகள்


7-12-1990.

கன்னியாகுமரி மாவட்டப்

## பல்துறை வளர்ச்சிப் பணிகள்

# சிறப்பு மலர்

## 7-12-1980



மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

நாகர்கோவில்

Collected in the collector's Office, Kanniyakumari. R. Sinivasam. 27.12.80


# அறிமுகம்

257/91

'வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று பனம்பாரனாராலும், 'தொடியோள் பௌவம்' என்று இளங்கோவடிகளாலும், 'நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவஞ்செய் குமரி' என்று பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியாலும் பாராட்டப் பட்டதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான கன்னியாகுமரி மாவட்டம், முன்னாள் திரு கொச்சி மாநிலத்தில் இருந்து பிரிந்து, தமிழ் நாட்டுடன் இணைந்து ஏறத்தாழ 24 ஆண்டு கள் ஆகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியில் முக்கடல்களால் சூழப்பட்டு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களைத் தாங்கி இலங்கும் இம்மாவட்டம், பல்வேறு தனிச் சிறப்புக்களையு டைய மாவட்டமாகும். உருவில் சிறியதேயாயினும், இயற்கை யெழிலிலும், மழை வளத்திலும், கல்வி வளர்ச்சியிலும், ஏனைய மாவட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் மாவட்டம் இக்குமரி மாவட்டமாகும்.

7-12-1980-ம் தேதியன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் புதிய கட்டிடம், மாண்புமிகு தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர்அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்க ளால் திறக்கப்படவிருக்கிறது. இதனையொட்டி, இம்மாவட்டத் தைச் சேர்ந்த பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணி களைக் கோடிட்டுக்காட்டும் சிறப்பு மலராக இது வெளியிடப் படுகிறது. இந்த மலர் கடந்த காலச் சாதனைகளைக் கண்டறி வதற்கும், எதிர்காலத்தில் இம்மாவட்டம் மென்மேலும் தன் ஆக்கப்பணிகளை விரிவு படுத்துவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அ. அப்துல் அஜீஸ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி.



தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர்
மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம்
அவர்கள்

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கநம்பர் |
|---|---|---|
| 1 | நிலவரி, ஆயம் | 1—4 |
| 2 | கிராம நிறுவனம் | 4 |
| 3 | நில ஒப்படை | 5 |
| 4 | குத்தகைப் பாட்டம் | 6 |
| 5 | நில எடுப்பு | 7 |
| 6 | நிலச் சீர்திருத்தம் | 8—10 |
| 7 | குடியிருப்பு | 11 |
| 8 | பாசனவளம் | 12—13 |
| 9 | முதியோர் உதவித் தொகை | 14—15 |
| 10 | விடுதலைப் போராட்ட வீரர்கள் உதவித் தொகை | 16—17 |
| 11 | அகதிகள் மறு வாழ்வு | 18—19 |
| 12 | கட்டிடங்கள் | 20 |
| 13 | கடன் நிவாரணம் | 21 |
| 14 | உப்பு நிலங்கள் | 22 |
| 15 | வேளாண்மை வருமானவரி | 23—24 |
| 16 | நில அளவை | 25—26 |
| 17 | உணவுப்பொருள் வழங்கல் | 27—35 |
| 18 | அரிசன நலம் | 36—40 |
| 19 | பிற்பட்டோர் நலம் | 41—46 |
| 20 | பூமிதானம் | 47—49 |
| 21 | ஊரக வளர்ச்சி | 50—53 |
| 22 | விவசாயம் | 53—72 |
| 23 | வனத்துறை | 72—74 |
| 24 | பொதுப்பணித்துறை | 75—77 |
| 25 | நெடுஞ்சாலைகள் | 78—79 |
| 26 | கதர் திட்டம் | 80— |
| 27 | மருத்துவத்துறை | 80—83 |
| 28 | கல்வித்துறை | 83 |
| 29 | சமூக நலத்துறை | 84 |
| 30 | கால்நடை பராமரிப்பு | 84 |
| 31 | கூட்டுறவுத்துறை | 85 |
| 32 | பதிவுத்துறை | 85 |
| 33 | மீன்துறை | 86 |
| 34 | முன்னாள் இராணுவவீரர் நலத்துறை | 87 |
| 35 | வேலைவாய்ப்புத் துறை | 88 |
| 36 | மின்துறை | 89 |
| 37 | இந்து அறநிலையத்துறை | 90 |
| 38 | நகராட்சிகள் | 91—94 |

# நிலவரி வசூல்

1—11—1956-ம் நாளில் திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தின் தென்கோடியிலுள்ள தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய 4 வட்டங்களும் தமிழ் நாட்டுடன் இணைந்து கன்னியாகுமரி மாவட்டம் என்னும் பெயரோடு தனி மாவட்டமாகியது,

1964-ம் வருடத்தில் மறு நிலவரித்திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு, திரு-கொச்சி அரசால் வசூலிக்கப்பட்ட நிலத்தீர்வை (அடிப்படை வரி) தான் வசூலிக்கப்பட்டு வந்தது. நிலத்தின்வளம், உற்பத்தித்திறன் இவைகளைக் கணக்கிலெடுக்காமல் எல்லா நிலங்களுக்கும் அடிப்படை வரியாக ஏக்கருக்கு ரூ. 2-00 வசூலிக்கப்பட்டது. அதில் நஞ்சை நிலத்திற்கு ரூ. 2-00 நீர்வரியாகவும், புஞ்சை நிலத்தில் அரசு பாசன வசதி பெறும் நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ. 7-00-ம் நீர் வரியாக வசூலிக்கப்பட்டு வந்தது.

1964-ஆம் வருட தமிழ்நாடு மாற்றப்பட்ட பகுதி ரயத்துவாரி நிலவரித் திட்டச்சட்டப்படி, கன்னியாகுமரி மாவட்டத்திலும் நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்டு 1381-ம் பசலி வருடம் முதல் தமிழ்நாட்டின் இதர பகுதியில் வசூலிப்பது போன்று மண்வளத்தைத் தரம் பிரித்து நிலவரி வசூலித்தும் பாசன வசதியை அனுசரித்து நீர்வரி வசூலிக்கப்பட்டும் கிராமக் கணக்குகள் பராமரிக்கப்பட்டும் வருகிறது. மண்வளம், பாசன வசதி இவற்றைப் பொறுத்து நஞ்சை நிலத்திற்கு அதிகப்படி அளவு ஏக்கருக்கு ரூ 15-1?-ம் குறைந்த அளவு ரூ. 2-75-ம் புஞ்சை நிலத்திற்கு அதிக அளவு ரூ. 2-81-ம் குறைந்த அளவு ரூ. 0-25-ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1384-ம் பசலி முதல் கூடுதல் தீர்வை, கூடுதல் நீர்வரி, தனித்தீர்வை, தனி நீர்வரி முதலியனவும், வணிகப்பயிர்வரியும் வசூலிக்கப்பட்டு வந்தது. அரசினர் ஆணைக்கிணங்க 13?-ம் பசலியிலிருந்து வணிகப் பயிர்வரி வசூல் நிறுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு ஆணை எண். 2541 (வருவாய்த்துறை) நாள்: 1—11—1980-ம் படி வணிகப் பயிர்வரி, தனித்தீர்வை, தனி நீர்வரி முதலிய வரியினங்களைப் பின்வலித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி நிலுவை கேட்பில், தனித் தீர்வை, தனி நீர்வரி பற்றிய தொகை ரூ. 14,32,979,11 குமரி மாவட்டத்தில் குறைவு செய்யப்பட்டுள்ளது.

எனவே தற்போது விவசாயிகளிடமிருந்து நிலவரி, நீர்வரி, கூடுதல் தீர்வை, கூடுதல் நீர்வரி மட்டுமே வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நிலையில் கேட்பு வசூல் நிலுவை அறிக்கை கீழே தரப்படுகிறது.

நிலுவை

| கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 18,49, 268.97 | 14,32,979.11 | 4,16,289.86 |

நிலுவைத் தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வரி வசூலிப்பதில் குறிப்பிடத் தக்க சிக்கல்கள் ஏதும் இல்லை.

## கடன்கள்

1956—ம் வருடம் இம்மாவட்டம் முன்னாள் திரு-கொச்சி மாநிலத்திலிருந்து பிரிந்து தமிழ் நாட்டுடன் இணைந்தது. விவசாய மேம்பாட்டிற்காக 'தக்காவி' கடன் சட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கடனுதவியளிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தை மேம்படுத்துதல், புதுக் கிணறுகள், வெட்டுதல் குழல் கிணறுகள் தோண்டுதல், மண்வளப்பாதுகாப்பு செய்தல் கொக்கோ மற்றும் தென்னை நட்டு பயிர் செய்தல், எண்ணெய்ப்பொறி வாங்குதல், மரக்கறித் தோட்டமிடுதல் இரசாயன உரம் வாங்குதல் போன்ற பல திட்டத்தின் கீழ் விவசாய பெருங்குடி மக்களுக்கு கடனுதவி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடன்கள் வருவாய்த்துறை அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், மற்றும் விவசாயத்துறை அதிகாரிகளால் விவசாயிகளுக்கு விவசாய மேம்பாட்டிற்காக கொடுக்கப்பட்டவையாகும்.

விவசாயிகளின் நல்வாழ்விற்காக, அவர்களுக்கு நிவாரணமளிக்கும் நோக்கத்துடன் அரசாணை எண் 1167, வருவாய்த்துறை, நாள்: 27-5-1979-ல் ஒரு ஆணையை அரசு பிறப்பித்தது. இந்த அரசு ஆணையின்படி இந்த மாவட்டத்தில் மொத்தம் ரூ. 13.63,640.20 கடன் தள்ளுபடி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நிவாரணமளிக்கப்பட்டது. இதன்மூலம் 5,393 பேர் பயனடைந்தார்கள். சலுகையளிக்கப்பட்ட தொகையின் விபரம் பின்வருமாறு:

| கடன் திட்டத்தின் பெயர் | தள்ளுபடி செய்யப் பட்ட தொகை ரூ. | பயனடைந்தவர்கள் |
|---|---|---|
| 1. நிலமேம்பாட்டு விவசாய கடன் | 658431.77 | 4002 |
| 2. மண்வள பாதுகாப்பு கடன் | 643443.55 | 451 |
| 3. தென்னை மேம்பாட்டு கடன் | 17557.40 | 40 |
| 4. தோட்டமிடுவதற்கு கொடுத்துள்ள கடன் | 27045.09 | 87 |
| 5. கொக்கோ செடி பயிர் செய்வதற்கு கொடுத்துள்ள கடன் | 6385.76 | 9 |
| 6. பூச்சி மருந்து தூவுவதற்கு கொடுத்த கடன் | 10776 63 | 804 |
| மொத்தம் | 13.63,6-0.20 | 5,393 |

மேலும், விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக எண் 1679, வருவாய்த்துறை, நாள்: 9-7-1980-ல் அரசு மீண்டும் ஒரு ஆணைபிறப்பித்தது. இந்த ஆணையின்படி ரூ. 16,87'067.91 தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் மூலம் 1157 விவசாயிகள் இம்மாவட்டத்தில் பயனடைந்தார்கள். இந்த அரசாணைப்படி சலுகையளிக்கப்பட்டதின் முழு விவரம் பின்வருமாறு:

| கடன் திட்டத்தின் பெயர் | தள்ளுபடி செய்யப் பட்ட தொகை ரூ. | பை. | பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 1, மண்வள பாதுகாப்பு கடன் | 1479185 | 01 | 591 |
| 1. கொக்கோ செடி பயிர் செய்தல் | 6308 | 28 | 7 |
| 3. தென்னை பயிர் செய்தல் | 164755 | 54 | 93 |
| 4, தோட்டமிடுதல் | 30578 | 09 | 51 |
| 5. பூச்சி மருந்து தெளித்தல் | 6240 | 99 | 905 |
| மொத்தம் | 1687067 | 91 | 1557 |

விவசாயிகளுக்கு சலுகையளித்துள்ள கடன் தொகைகள் போக 12 08,000.98 ரூபாய் இன்றும் வசூலிக்கப்பட இருக்கிறது. இந்தத் தொகை மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைக்கு உட்படாததும், வசூல் செய்யத்தக்கதுமாகிய கடன் தொகையாகும்.

## ஆயப்பிரிவு

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1971-72 1972-73 ஆகியவருடங்களில் கள்மற்றும்சாராயக் கடைகளும் 1973-74-ல் சாராயக் கடைகள் மட்டும் ஏலத்தில் விடப்பட்டது. மேற்படி கடைகளை ஏலத்தில் பிடித்தவர்கள் அரசுக்குசெலுத்த வேண்டிய குத்தகை தொகையை செலுத்தாமல் நிலுவை ஆகிய தொகையில் இதுவரை வசூல் செய்ததும், தள்ளுபடி செய்ததும் போக ரூபாய் 8,31,200.34 தற்பொழுது நிலுவையில் உள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:-

| குத்தகை தொகை | வட்டி | அபராதம் | மொத்தம் |
|---|---|---|---|
| 520651.03 | 304310.87 | 6238.44 | 831200.34 |

மேற்படி நிலுவையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு பல கட்டத்தில் உள்ளது.

அதன் விபரம்

| | |
|---|---|
| வழக்குகளில் உட்பட்ட தொகை | 2.76,522.85 |
| உரிமை விடுதல் நடவடிக்கையில் உட்பட்டது. | 1,38,795 61 |
| தள்ளுபடி | 1,43,954 03 |
| இதர முறைகளில் உட்பட்டது | 1,57.603.78 |
| பிற வட்டங்களில் வசூல் நடவடிக்கையில் உட்பட்டது | 1.14,324.07 |
| | 8,31,200.34 |



கன்னியாகுமரி மாவட்டத்தில் 30—11—'80 வரை மொத்தம் 1322 மது அருந்த அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளது. வட்டம் வாரியாக வழங்கப்பட்ட அனுமதி சீட்டுவிபரம்:

| | | |
|---|---|---|
| அகஸ்தீஸ்வரம்வட்டம் | .... | 751 |
| தோவாளை வட்டம் | .... | 93 |
| கல்குளம் வட்டம் | .... | 337 |
| விளவங்கோடு வட்டம் | .... | 141 |
| | ... | 1322 |

கன்னியாகுமரி மாவட்டத்தில் மது அருந்த அனுமதி சீட்டு வைத்துள்ளவர்களுக்கு மது விற்பனை செய்ய நாகர்கோவிலில் ஒரு கடை மட்டுமே உள்ளது. மேற்படி மது விற்பனை செயயும் உரிமை கன்னியாகுமரி மாவட்ட உபயோகிப்போர் கூட்டுறவு மொதத விற்பனை சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மார்த்தாண்டம், தக்கலை, குளச்சல் ஆகிய இடங்களில் மது விற்பனை செய்ய உரிமம் கோரி கல்குளம் விளவங்கோடு வட்ட கூட்டுறவு விற்பனை சங்க தனி அதிகாரி விண்ணப்பித்து வருவாய் வாரியத்திற்கு சிபாரிசு செய்து அனுப்பபட்டுள்ளது. திங்கள் சந்தையில் மது விற்பனை செய்ய உரிமம் கோரி நெய்யூர் மேக்கன்கரை கூட்டுறவு சங்க பண்டகசாலைத் தலைவர் விண்ணப்பித்து விசாரணையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1955 மற்றும் தமிழ்நாடு ஸ்பிரிட் விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின விவரம்:

### 1. 'டி எல் 1' உரிமம்:

தரங்குறைந்த சாராவி (Denatured Spirit) மொத்த விற்பனை உரிமம் இம்மாவட்டத்தி லுள்ள பகவதி கூட்டுறவுப் பேரங்காடி என்ற கூட்டுறவு நிறுவனத்திற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தார் திருச்சியிலுள்ள வடிபக்கத்திலிருந்து நேரடியாகப் பெறுகின்றனர்.

### 'டி. எல் 4' உரிமம்:

தரங்குறைந்த சாராவி மது விற்பனை நிலயங்களுக்கு வழங்கப்படும் உரிமம். இந்த உரிமமும் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கே கொடுக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கூட்டுறவு நிலையங்களுக்கு மட்டும் இவ்வுரிமம் வழங்கப்பட்டுள்ளன.

1) பகவதி பேரங்காடி, நாகர்கோவில்.
2) சிறிய பேரங்காடி. மார்த்தாண்டம்.
3) திருவிதாங்கோடு கூட்டுறவு பண்டகசாலை, திருவிதாங்கோடு.

### 'டி, எல் 4' உரிமம்:

இந்த உரிமம் மருத்துவமனைகள் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் இவைகளிலுள்ள ஆய்வுக் கூடங்களில் பயன்படுத்தத் தேவையான தரங்குறைந்த சாராவி கூட்டுறவு பண்டகசாலையிலிருந்து பெறுவதற்கான உரிமம். இம்மாவட்டத்தில் இந்த உரிமம் 13 வழங்கப்பட்டுள்ளது.

### 'டி. எல் 8' உரிமம்:

வார்னிஷ் பெறுவதற்கான உரிமம்—இந்த உரிமமும் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள மூன்று கூட்டுறவு நிறுவனங்களுக்கும் 'டி. எல் 8' உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

1) பகவதி கூட்டுறவு பேரங்காடி, நாகர்கோவில்
2) சிறிய பேரங்காடி, மார்த்தாண்டம்
3) திருவிதாங்கோடு கூட்டுறவு பண்டகசாலை, திருவிதாங்கோடு.

## II. தமிழ்நாடு தெளிந்த சாராவி (Rectified Spirit) விதிகள் 1959

### ஆர். எல். உரிமம்:

தெளிந்த சாராவி, மருத்வமனை, கல்லூரிகளிலுள்ள சோதனைக் கூடங்களில் பயனபடுத்தப்படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகள், கல்லூரிகள் இவைகளுக்கு 10 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## III. தமிழ்நாடு தயார் செய்யப்பட்ட மருந்துகள் விதிகள் 1932 (Manufactured Drugs Rules. 1932)

இந்த உரிமம் 'எம் 1' உரிமம் என வழங்கப்படுகிறது. மருந்துகள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்ய இந்த உரிமம் பயன்படுகிறது. இம்மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள திருவாளர்கள் திரவியம் & கோ என்ற மருந்து விற்பனையாளர்களுக்கு மட்டும் இந்த உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

### 'எம் 2' உரிமம்:

மருந்து விற்பனையாளர்களுக்கு இந்த உரிமம் வழங்கப்படுகிறது. (Drugs Stores)

தயார் செய்து மருத்துவர்களின் ஆலோசனையின் படி விற்பனை செய்ய இந்த உரிமம் அளிக்கப் படுகிறது. இந்த மாவட்டத்தில் இந்த உரிமம் ஏழு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### IV. மருந்துக்களும் ஒப்பனைப் பொருட்களும் விதிகள் 1956

ஆயுர்வேதத்தில் தேர்ச்சிபெற்ற மருத்துவர் களுக்கு இந்த உரிமம் வழங்கப்படுகிறது. அவர்கள் அரிஷ்டம் மற்றும் ஆசவங்கள் பெரிய அளவில் தயார் செய்து விற்பனை செய்கின் றனர். இந்த உரிமம் இம்மாவட்டத்தில் ஆறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**எல் 3 உரிமம்:**

இந்த உரிமமும் ஆயுர்வேத மருத்துவர் களுக்கு அளிக்கப்படுகிறது. இவர்கள் தங்க ளிடம் மருத்துவம்பெற வரும் நோயாளிகளுக்கும் அரிஷ்ட ஆசவங்கள் சிறிய அளவில் தயார் செய்து வழங்க இந்த உரிமம் வழங்கப்பட் டுள்ளது. இம்மாவட்டத்தில் 17 ஆயுர்வேத மருத்துவர்களுக்கு இந்த உரிமம் வழங்கப் பட்டுள்ளது.

### V. தமிழ்நாடு அபின் (Opium) விதிகள் 1959

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் இம்மாவட்டத்தில் 38 நபர்களுக்கு அபின் வாங்கி உபயோகிக்க உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. வருவாய் வாரிய உத்தரவு எண். 5333/79—I நாள். 24—10—79-ன்படி புதிதாக ஒருவருக்கும் இப்போது உரிமம் வழங்கப்படவில்லை.

### VI. மருந்துக்களும் ஒப்பனைப் பொருட்களும் பதிவுச் சான்றிதழ்கள்

அரசு ஆணை எண. 3031

உள்துறை நாள்: 1—11—'58

மேலே குறிப்பிட்ட அரசு ஆணையின்படி மருந்து வியாபாரிகள் கட்டுப்படுத்தப்பட்ட கட் டுப்பாடற்ற டானிக் மருந்துகள் வெளி மாநிலங் களில் இருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படவேண்டிய உரிமம். இந்த உரிமம் இம்மாவட்டத்தில் 48 மருந்து கடைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

# கிராம நிருவனம்

கன்னியாகுமரி மாவட்டம் 1—11—1956-ல் திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டுடன் இணைந்தபோது திரு-கொச்சிப் பாணி கிராம அலுவலர்களும் மாற்றலாகி வந்நார்கள். அங்ஙனம் வந்தவர்கள் முழுநேர அரசு அலுவலர்களாகும். அவ்வலுவலகர் களின் பதவிப் பெயர், ஊதிய ஏற்ற முறை முதலியன கீழே தரப்படுகிறது.

**1. கிராம அலுவலர்:**

இவர்தான் கிராம நிர்வாகத்தின் தலைமை அலுவலர் (ரூ. 295-5-315-10-475)

**2. கிராம உதவியாளர் :**

இவர் கிராம அதிகாரிக்கு கணக்குகள் பராமரிப்பதில் உதவியாளராக இயங்குகிறார். (ரூ. 280-5-320-10.450)

**3. கிராம பணியாள் :**

இப்பணி அடிப்படை ஊழியா பதவிக்கு நிகரானது (ரூ. 250-5-330-10.400)

தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் 44 கிராம அதிகாரிகளும் 36 கிராம உதவி யாளர்களும் 103 கிராமப் பணியாளர்களும் பணியிலிருக்கின்றனர்.

1970-ம் வருட கிராம அலுவலர்களுக்கான பணி விதிகள் 1973-ம் வருடத்தில்தான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப் பட்டது. 1956 முதல் 1973 வரையுள்ள காலக் கட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட அன்றைய ஆட்சித் தலைவர்கள் தற்காலிக கிராம உதவி யாளர்களை நியமித்துள்ளார்கள். அவர்களின் பணிகளை ஒழுங்கு செய்வதற்காக கன்னியா குமரி மாவட்ட கிராம அலுவலர் பணி தனி விதிகள் அரசு ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது.

1973-ம் வருடத்திற்குப் பிறகு 1970-ம் வருட பணி விதிகளின்படி பகுதிநேர கிராம முன்சீப், கிராம கர்ணம், கிராம பணியாளர், கிராம காவலர் முதலியோர் நியமிக்கப்பட்டு 14—10—1980-ம் தேதிவரை பணியாற்றினர். பகுதிநேர கிராம அலுவலர் பணி ஒழிப்பு அவசரச்சட்டப்படி 14-11-1980-ல்46 முன்சீப்புகள் 51 கர்ணங்கள் பணியிலிருந்து பிரித்து விடப்பட்டுள்ளார்கள். தற்போது 44 கிராமங் களில் கிராம அதிகாரிகள் பொறுப்பிலிருப்ப தால் மீதமுள்ள 37 கிராமங்களுக்கும் புதிய விதிகளின்படி கிராம ஆட்சி அலுவலர் பதவி களில் நியமனம் செய்ய அரசு ஆணைக்காக செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

# நில ஒப்படை

கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசு ஆணை எண் எம். எஸ். 2814 வருவாய் தேதி 23-9-1971-ன் படி 25-9-1971-ம் தேதி முதல். அரசு நிலங்களை ஒப்படை செய்வது சம்பந்த மான வருவாய் வாரிய நிலையான உத்தரவு அமுலுக்கு வந்தது. 13-12-1972-ம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்ட திருவாங்கூர் கொச்சின் குத்தகைப்பாட்டம் சட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில மிக முக்கியமான அரசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. 13-12-1972-ம் தேதி முதல் திருவாங்கூர் கொச்சின் குத்தகைப்பாட்டம் சட்டம் தள்ளு படி செய்யப்பட்டு, அரசு நிலங்களை ஒப்படை செய்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அரசு நிலங்களை ஒப்படை செய்வதற்கான வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்த இரண்டு தனி யூனிட்கள் 22-12-1972-ம் தேதி முதல் நியமனம் செய்யப்பட்டது. ஒவ்வொரு யூனிட்டிலும் ஒரு வட்ட ஆட்சியர், ஒரு உதவி யாளர், இரண்டு தனி வருவாய் ஆய்வாளர்கள் (உதவியாளர் அந்தஸ்து) மூன்று அடிப்படை ஊழியர்கள் பணி புரிந்துள்ளார்கள். இந்த இரண்டு யூனிட்டுகளில் விளவங்கோடு தாலு காவில் உள்ள ஒரு யூனிட் மட்டும் அரசு ஆணை எண் 270 வருவாய் நாள்; 8-2-80-ன் படி 31-12-79-ம தேதியோடு பணிக்காலம் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள ஒரு யூனிட் 31-12-1979-ம் தேதிக்கு பிறகு கல்குளம் தாலுகாவில் செயல்பட்டு வருகிறது. எல்லாத் தாலுக்காக்களிலும் உள்ள நில ஒப்படை வேலைகளை சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சி யாளர்கள் கவனித்து வருகிறார்கள்.

தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்கள் தவிர, நிலமில்லாத 'ஏழை மக்களால் ஆக்கிரமித்து அனுபவிக்கப்பட்டுவரும், தீர்வை ஏற்படாத தரிசு நிலங்களும் இதர வகை புறம்போக்கு நிலங்களும் ஒப்படை செய்வதற்கு மீதியாக உள்ளன. இந்த நிலங்களை தீர்வை ஏற்பட்ட தரிசாக தரம் மாற்றி ஒப்படை செய்யலாம். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வட்ட ஆட்சி யாளரையோ அல்லது துணை வட்ட ஆட்சி யாளரையோ பொறுப்பேற்று சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை பார்வையிட்டு அவைகளை தீர்வை ஏற்பட்ட தரிசாக தரம் மாற்றி தகுதி வாய்ந்த நபர்களுக்கு நில ஒப் படை செய்வதற்கான வேலைகளை செய் வதற்கு வருவாய் வாரியம் தனது நே. மு. க. பி. 1. 394/எ/நாள்: 16-7-80-ல் அறிவுரை வழங்கியுள்ளது இதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒப்படை செய்ய வேண்டிய சாகுபடிக்கு லாயக்கான மொத்த நிலங்களின் விஸ்தீரணம் 2313.20.35 ஹெக்டர். மேற்கூறிய அதிகப்படியான விஸ்தீரணம் கொண்ட நிலங்களை ஒப்படை செய்வதற்கான வேலைகள் சம்பந்தப்பட்ட தாலுகா வட்ட ஆட்சியாளர்கள் தங்களது அன்றாட வேலை களுடன் கவனிக்க இயலாது எனவும். ஒவ் வொரு தாலுகாவிற்கும் ஒரு தனி வட்ட ஆட்சி யாளர், ஒரு உதவியாளர் இரண்டு தனி வருவாய் ஆய்வாளர்கள் (உதவியாளர் அந்தஸ்து) ஒரு துணை நில அளவர், மூன்று அடிப்படை ஊழியர்கள் கொண்ட ஒரு யூனிட் தனித்தனியே நியமனம் செய்ய வேண்டுமென வும் இவ்வலுவலக எல் 3. 142580/79 நாள்: 6-9-1980-ம் தேதிய கடிதத்தில் அரசுக்கு வருவாய் வாரியம் மூலம் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை நில ஒப்படை வழங்கியதற்கான புள்ளி விவரங்கள்**

| வ. எண். | வட்டங்களின் பெயர் | நில ஒப்படை செய்ய வேண்டிய மொத்த விஸ்தீரணம் | இதுவரை பட்டா வழங்கியது | பட்டா வழங்கிய மொத்த விஸ்தீரணம் | பட்டா வழங்க வேண்டிய மொத்த விஸ்தீரணம் |
|---|---|---|---|---|---|
| 1. | அகஸ்தீஸ்வரம் | 279.56.50 | 2245 | 145.54.50 | 134.02.00 |
| 2. | தோவாளை | 697.34 25 | 2635 | 242.66.25 | 454.68.00 |
| 3. | கல்குளம் | 2702.57.16 | 5580 | 1694.58.21 | 1007.98 95 |
| 4. | விளவங்கோடு | 2633.93 15 | 5170 | 1917 41.75 | 716.51.40 |
| | | 6313.41.06 | 15630 | 4000.20.71 | 2313.20.35 |

**கன்னியகுமாரி மாவட்டத்தில் இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கியதற்கான புள்ளி விவரங்கள்**

| மாவட்டம் | ஒழுங்கு செய்யப் படவேண்டிய வீட்டுமனைகள் ஆக்கிரமிபபுக்களின் எண்ணிக்கை | | ஒழுங்கு செய்யப் பட்டு இதுவரை வழங்கிய வீட்டு மனைப் பட்டாக் களின் எண்ணிக்கை | | ஒழுங்கு செய்யப் படவேண்டிய வீட்டுமனை ஆக்கிரமிப்புகள் | |
|---|---|---|---|---|---|---|
| | நத்தம் புறம்போக்கு | இதர வகை புறம்போக்கு | நத்தம் புறம்போக்கு | இதர வகை புறம்போக்கு | நத்தம் புறம்போக்கு | இதரவகை புறம்போக்கு |
| கன்னியாகுமரி | 3,135 | 5,621 | 3,013 | 21 | 122 | 5,600 |

# குத்தகைப் பாட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களைக் குத்தகைக்கு கொடுத்தல்

திருவாங்கூர் கொச்சின் குத்தகைப்பாட்டம் சட்டத்தின் கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் வன இலாகாவைச் சார்ந்த நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. இதன் அடிப்படையில் 61 பெரிய எஸ்டேட் உரிமையாளர்களும் மற்றும் நிலமில்லாத பல ஏழைகளும் அரசு நிலங்களைக் குத்தகையாக எடுத்து அனுபவித்து வந்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 13—12—1972-ம தேதி முதல் திருவாங்கூர் கொச்சின் குத்தகைப் பாட்டம் சட்டம் தள்ளுபடி செய்யப்பட்டு. அரசு நிலங்களை ஒப்படை செய்வதற்கு வருவாய் வாரியத்தின் நிலையான உத்தரவு அமுலுக்கு வந்தது. மேலும் அரசு ஆணை எண் 947 (வருவாய்த் துறை) நாள்: 2 3—73-ன் படி குத்தகைப் பாட்டத்தில் உள்ள நிலங்களை ஒழுங்கு படுத்தி அவைகளை ஒப்படை செய்வதற்கான உத்தரவு அரசு பிறப்பித்துள்ளது. அதன்படி ஏற்கனவே குத்தகை பாட்டத்தின் கீழ் அனுபவித்து வரும் நிலமில்லாத ஏழைகளுக்கு நில ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய அரசு ஆணை எண். 947 (வருவாய்த் துறை) நாள்: 2—3—1972-ன் படி 61 பெரிய எஸ்டேட் உரிமையாளர்களுக்கு குத்தகைப் பாட்டத்தில் உள்ள நிலங்களை ஒப்படை செய்ய தகுதி இல்லாததால் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குத்தகைப் பாட்டத்தில் உள்ள 61 பெரிய எஸ்டேட் உரிமையாளர்களில் 23 நபர்கள் வன இலாகாவைச் சார்ந்த நிலங்களையும் 38 நபர்கள் வருவாய்த்துறையைச் சார்ந்த நிலங்களையும் அனுபவித்து வருகிறார்கள். குத்தகைப் பாட்டத்தின் கீழ், வருவாய்த் துறையைச் சார்ந்த நிலங்களுக்கு தகுதிவாய்ந்த எல்லா நபர்களுக்கும் 204 39.5 ஹெக்டர் நிலம் குத்தகை விடுவதற்கு 49 பிரேரேபணைகள் வருவாய் வாரியத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் வன இலாகாவைச் சார்ந்த நிலங்கள் பெரும்பாலும் ஆட்சேபகரமானதால் அவைகளைக் காலி செய்ய மாவட்ட வன அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

| | | |
|---|---|---|
| குத்தகைப் பாட்டத்தின் கீழ் அரசு புறமபோக்கு மற்றும் வன இலாகாவைச் சேர்ந்த நிலங்களை அனுபவித்து வரும் பெரிய எஸ்டேட் உரிமையாளர்களின மொதத எண்ணிக்கை | — | 61 |
| வன இலாகாவைச் சேர்ந்த நிலங்களை அனுபவித்து வரும் எஸ்டேட் உரிமையாளர்களின் எண்ணிக்கை | — | 23 |
| வருவாய்த்துறையைச் சேர்ந்த நிலங்களை அனுபவித்து வரும் எஸ்டேட் உரிமையாளர்களின் எண்ணிக்கை | — | 38 |
| வருவாய் துறையைச் சேர்ந்த நிலங்களை குத்தகையாக பெறுவதற்கு தகுதி வாய்ந்த எஸ்டேட் உரிமையாளர்களின் எண்ணிக்கை | — | 31 |

(204.39.50 ஹெக்டர் நிலம் குத்தகை வழங்குவதற்கு49 பிரேரேணைகள் வருவாய் வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கீழ்க்காணும் காரணங்களால் குத்தகை பெறுவதற்கு தகுதியில்லாத எஸ்டேட் உரிமையாளர்களின் எண்ணிக்கை | — | 6 |
| 1. ஏற்கனவே நில ஒப்படை செய்யப்பட்டது | — | 2 |
| 2. சிவில் வழக்குகளில் சம்பந்தப்பட்ட்து. | — | 1 |
| 3. நடபாதையாக இருப்பதினால் குத்தகைக்கு விட லாயக்கில்லை என தீர்மானிக்கப் பட்டது: | — | 2 |
| 4. இரட்டிப்பானது | — | 1 |
| | | 6 |



## நில எடுப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவனந்த ரம்-நாகர்கோவில் மற்றும் திருநெல்வேலி அகல இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு 1972-ல் ஒப்புதல் வழங்கியது. இருப்புப்பாதை அமைக்கத் தேவையான நிலங்களை நிலமெடுப்பு செய்வதற்காக 972-ம் ஆண்டு நவம்பர் திங்களில் தமிழ்நாடு அரசு ஒரு துணை ஆட்சியரையும் இதர பணியாளர்களையும் நியமித்தது. மேற்படி திட்டத்தை மேலும் விரைவு படுத்த 1—6 – 1974 முதல் மேலும் ஒரு கூடுதல் துணை ஆட்சியரையும் இதர பணியாளர்களையும் தமிழ்நாடு அரசு நியமித்தது.

ஏறத்தாழ 170 கிலோ மீட்டர் தூரமுள்ள அகல இருப்புப் பாதையில் 65 கிலோ மீட்டர் தூரம் கன்னியாகுமரி மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. 830 ஏக்கர் நிலமெடுப்பு செய்து இருப்புப் பாதைத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்காக ரூ. 1,65,48,552/- ஈட்டுத் தொகையாக நில உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 94 94. 398 ஏக்கர் புறம்போக்கு பூமியை இரயில்வே துறைக்கு நிலவிலை வசூலிக்காமல் விட்டுக்கொடுக்க அரசு, ஆணை எண் 32 (வருவாய்த்துறை) —1 78-ல் ஆணையிட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் முதற்கட்டமாக திருவனந்தபுரம்-நாகர்கோவில் கன்னியாகுமரி அகல இருப்புப் பாதை 13—1—1979-ம் நாளன்று திறக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி-கன்னியாகுமரி அகல இரயில் பாதை வேலையும் முடிவடைந்து, வெள்ளோ ஓட்டம் விடப்பட்டு போக்குவரவிற்கு திறந்து விடத் தயாரான நிலையில் உள்ளது.

## நில எடுப்பு (பொது)

—x—

இரயில்வே நிலமெடுப்பு தவிர மணவாளக் குறிச்சி மணல் கம்பெனிக்காக ஏறத்தாழ 85 ஏக்கர் நிலமெடுக்க ஓர் தனி வட்டாட்சியரையும் இதர ஊழியர்களையும் அரசு நியமித்துள்ளது. மேலும் அரசு மருத்துவமனையை விரிவு படுத்துவதற்கும், காவல் நிலையம், குடியிருப்பு, பாலம், பள்ளிக்கூடம் அமைப்பதற்கும், கால் வாய், ரோடு முதலியவை விரிவுபடுத்துவதற்கும் தேவையான நிலங்களை எடுப்பது சம்பந்தமாக 92 கோப்புகளில் துணை ஆட்சியரும், கோட்ட ஆட்சித்தலைவரும், வட்ட ஆட்சியர்களும் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் விவசாய மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கிணங்க பழையாற்றின் குறுக்கே ரூ. 1.5 லட்சம் செலவில் குமரி அணை கட்டும் திட்டத்திற்கு நிலமெடுக்க தமிழக அரசு உத்தரவிட்டிருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இதுபோல் தோவாளை வட்டத்தில் 'தடவையாறு' நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நிலமெடுக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# நில சீர்திருத்தம்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனுமதி பெற்ற அதிகாரியின் அலுவலகம் 1962-ம் வருடம் அக்டோபர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றது. கன்னியாகுமரி மாவட்டம் திருநெல்வேலி அனுமதி பெற்ற அதிகாரியின் ஆளுகைக்குட்பட்டது.

2) (அ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டம் 52/61ன் படி, 93 நிலச் சுவான்தார்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அவற்றில் 85 பேர்களின் மீதான நடவடிக்கைகள், அவர்கள் உச்சவரமபுக்குட்பட்டு நிலங்கள் 6—4—60ல் வைத்திருந்ததால், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 4 நிலச்சுவான் தார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு, உபரியாக எடுக்கப்பட்ட நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்கு பங்கீடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 நிலச்சுவான்தார்கள், உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளதால், அவர்கள் சம்பந்தப் பட்ட கோப்புகள் பைசலாகாமல், நிலுவையிலுள்ளன.

**ஆ. தமிழ்நாடு நிலச்சீர்திருத்த திருத்தச் சட்டம் 17/70**

இச்சட்டத்தின் கீழ் 249 நிலச்சுவான தார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 219 பேர்கள் மீதான நடவடிக்கை அவர்கள் உச்சவரம்புக்குட்பட்டு நிலங்கள் 15.2.70ல் வைத்திருந்ததால், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 7 நிலச் சுவான்தார்கள் சம்பந்தப் பட்ட கோப்புகள் பைசல் செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து உபரியாக எடுக்கப்பட்ட, நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்குப் பங்கீடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2? கோப்புகள் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் பலதரப்பட்ட நடவடிக்கைகளின் கீழ் தேங்கியுள்ளன.

**இ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்த மூன்றாவது திருத்திய சட்டம் 37/72**

இச்சட்டத்தின் கீழ் 4 பொது ஸ்தாபனங்களின மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அழகிய பாண்டியபுரம் கிருத்துவ மடத்தின்மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது மீதமுள்ள 3 கோப்புகளில், இரண்டு கோப்புகள் உயர்நீதிமன்ற தடை உத்தரவு வரப் பெற்றதால், மேல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு கோப்பில், இறுதிப் பட்டியல் பிரசுரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**3. உபரி நிலம் ஒதுக்கீடு செய்தல்.**

(அ) கீழ்கண்ட நபர்களிடம் 15.00 ஏக்கர் பரிமாண அளவுக்கு மேல் உபரி நிலங்கள் இருப்பதாகக் கருதி அரசு பொறுப்பில் உபரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**சட்டம் பிரிவு 58/61**

1. எம். ஆர். 1. 2 (எச்) திரு உசேன் பிள்ளை
2. ,, 6 (ஏ) ,, அச்சுதன் தம்பி
3. ,, 19 (எஸ்) ,, சுப்பிரமணிய அய்யர்
4. ,, 4 (டி) ,, மாதவன் தம்பி

**சட்டப்பிரிவு 17/70**

1. எம். ஆர். 1. 2 (எஸ்) திரு தாணுநாத அய்யர்
2. ,, 1 (எஸ்) ,, சுப்பிரமணிய அய்யர்
3. ,, 5 (கே) ,, காந்திமதி அம்மாள்
4. ,, 2 (எச்) ,, கோலப்ப பிள்ளை
5. ,, 1 (ஜி) திருமதி தாயம்மாள்
6. ,, 16 (எஸ்) திரு சுப்பிரமணிய கோனார்
7. ,, 3 (எஸ்) ,, எஸ் சுந்தரராஜன்

ஆ) மேற்கண்ட நபர்களிடம் அரசு பொறுப்பில் உபரியாக அறிவிக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு நில ஒப்படை வழங்கப்பட்டுள்ளது.



| வ. எண். | விவரம் | சட்டம் 58/61 ஏக்கர் | சட்டம் 17/70 ஏக்கர் | மொத்தம் ஏக்கர் |
|---|---|---|---|---|
| 1. | நில ஒப்படை செய்ய தகுதியான நிலங்கள் பரப்பு | 113.00 | 18.00 | 131.00 |
| 2. | நில ஒப்படை செய்யப் பட்ட விஸ்தீரணம் | 113.00 | 9 00 | 122.00 |
| 3. | ஒப்படை செய்யப்பட வேண்டிய பாக்கி நிலங்கள் | ,, | 9.00 | 9.00 |

இ) ஒப்படை செய்யப்பட வேண்டிய பாக்கி நிலங்கள் கீழ்க்கண்ட இரண்டு கிராமங்களில் உள்ளது.

1. எம். ஆர். 4 204 (ஏ) கன் ஆளூர் கிராமம் 2.00 புஞ்சை
2. ,, 204 (பி) கன் தீண்டகரை கிராமம் 7.00 ,,

9.00

(ஈ) மேற்கண்ட இரண்டு கிராமங்களில் அரசு ஆணை எண். 1776 (ரெவின்யூ) தேதி 21—7—80 பிரகாரம் உபரியாக அறிவிக்கப் பட்டது. இது சம்பந்தமான 18 (1) விளம்பரம் தமிழ்நாடு அரசு பதிவு இதழில் 10—9—80 பிரசுரம் செய்யப்பட்டது. இரண்டு கிராமங்களில் ஒப்படை மனுக்கள் பெறும் வகையில் நமுனா 'பி' அறிவிப்பு கிராமங்களில் 3—11-80ல் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி நமுனாவின் காலவரம்பு 2—12-80ல்முடிவடைகிறது. இந்தக் காலவரம்பில் போதிய ஒப்படை மனுக்கள் பெற்று நில ஒப்படை ஆணை பிறப்பிக்கப்படும்.

**(2) மேற்கண்ட 122.00 ஏக்கர் உபரி நிலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒப்படை செய்யப்பட்டதற்கான விபரம்**

| வ. எண் | விபரம் | தாழ்த்தபபட்டவர்கள் | | இதர நபர்கள | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒப்படை தார்கள் | விஸ்தீ ரணம் | ஒப்படை தார்கள் | விஸ்தீ ரணம் | ஒப்படை தார்கள் | விஸ்தீ ரணம் |
| 1. | தகுதி (1) | ... | ... | 7 | 10.00 | 7 | 10.00 |
| 2 | தகுதி (4) | 6 | 21.00 | 14 | 56.00 | 20 | 77.00 |
| 3. | தகுதி (6) | 9 | 15.00 | 11 | 20.00 | 20 | 35 00 |
| | ஆக மொத்தம் | 15 | 86.00 | 32 | 86.00 | 47 | 122.00 |

**4) நிலக்கிரைய வசூல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுநாள்வரை நில ஒப்படை செய்ததில் நிலக்கிரையம் வசூல் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு பாக்கியுள்ளது.

| | டிமாண்டு | வசூல் | பாக்கி |
|---|---|---|---|
| **முன் பாக்கி** | | | |
| அகஸ்தீஸ்வரம் | | | |
| தாலுகா | 1160.16 | 481.05 | 679.11 |
| **நடப்பு பாக்கி** | | | |
| அகஸ்தீஸ்வரம் | | | |
| தாலுகா | 2,090.05 | 20112.16 | 977.89 |
| தோவாளை தாலுகா | 11869.78 | 1238.78 | 10631.00 |

5) **குத்தகை நிர்ணயம்**

அரசு பொறுப்பில் உபரியாக அறிவிக்கப் பட்ட நிலங்களில் குத்தகை நிர்ணயம் செய்யப் பட்டு கீழ்க்கண்டவாறு பாக்கியுள்ளது.

| | கேட்பு ரூ. | பை | வசூல் ரூ. | பை. | பாக்கி ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|
| கன்னியாகுமாரி மாவட்டம் | 313893 | 38 | 211763 | 05 | 102130 | 23* |

* குறிப்பு: குத்தகை பாக்கியில் ரூ. 60455.00 கோர்ட் நடவடிக்கையின் காரண மாக தடை உத்தரவில் இருந்துவருகிறது. எஞ்சியுள்ள குத்தகை பாக்கி ரூ. 41675.23 ஐ வசூல் செய்ய தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.



# தமிழ் நாடு குடியிருப்புதாரர் உரிமைப் பாதுகாப்புச் சட்டம்

1971-ம் வருடத்திய தமிழ்நாடு குடியிருப்பு தாரர் (உரிமை உறுதி செய்தல்) சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அரசு ஆணை எண். 1948 (வருவாய்துறை) நாள்: 19.4.1972-ன் படியும், அரசு ஆணை எண் 1245 (வருவாய் துறை) நாள்: 18-6-77-ன் படியும் விரிவு செய் யப்பட்டது. அத்துடன் 1976-ஆம் வருடத்திய தமிழ்நாடு கைவினைஞர்களுக்கு குடியிருப்பு உரிமை உறுதிபடுத்தும் சட்டம் 19-10-1976-ஆம் நாளிலிருந்து இம்மாவட்டத் தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குடியிருப்புதாரர்கள் பற்றிய விவரங்கள், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களால் சேகரிக்கப் பட்டு, கோட்டாட்சி அலுவலர்களுக்கு பட்டா வழங்கும் பொருட்டு பரிந்துரைகளுடன் அனுப்பப்படுகின்றன. அப்பரிந்துரைகள் மீது கோட்டாட்சி அலுவலர்கள் தக்க விசாரணைகள் மேற்கொண்டு இறுதி ஆணை பிறப்பிக்கிறார் கள். கோட்டாட்சி அலுவலர்களின் ஆணை மீது மேல்முறையீடு செய்யப்படும் சீராய்வு மனுக் கள்மீது மாவட்ட ஆட்சியரால் அவ்வப்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ஆணைகள் வழங்கப்படுகிறது.

மேற்படி சட்டங்களின் மூலம் இம்மாவட் டத்தில் கீழ்க்குறிப்பிடும் ஏழைகள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | பட்டியல் சாதியினர் | 178 |
| 2. | பிற்பட்டோர் | 287 |
| 3. | ஏனையோர் | 282 |
| | மொத்தம் | 747 |

குடியிருப்பு உரிமைகள் உறுதிப்படுத்துதல் சம்பந்தப்பட்ட மேற்படி சட்டங்களை இம் மாவட்டத்தில் தீவிரமாக அமல்படுத்தும் பொருட்டு வட்டாட்சியர்கள் மற்றும் கோட்- டாட்சி அலுவலர்களுக்கு அடிக்கடி அறிவுரைகள் வழங்கப்பட்டு குடியிருப்புப் பட்டா வழங்கும் பணியின் முன்னேற்றம் கண்காணிக்கபட்டு வருகிறது.

# பாசன வளம்

இந்திய துணைக்கண்டத்தின் தென் கோடியில் முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நில அமைப்பினைக் கொண்டு விளங்கும் கன்னியாகுமரி மாவட்டம் வடகிழக்கு, தென் மேற்கு ஆகிய இரு பருவக் காற்றுகளாலும் மழை பெறும் பேறு பெற்றது. பருவ மழை தவறும் காலங்களில் வேளாண்மைக்கு இடையூறு ஏற்படாத முறையில் பாசனத்தினை அளித்திட கீழே குறிப்பிடப்படும் பெரிய பாசனத்திட்டங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

## 1. கோதையாறு திட்டம்:

கோதையாற்றின் குறுக்கே பேச்சிப்பாறை அணையும, பரளியாற்றின் குறுக்கே பெருஞ்சாணி அணையும் கட்டி, இவ்விரு அணைகளிலுமிருந்து தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படும் முறையில் அமைக்கப்பட்ட இத்திட்டம் கோதையாறு பாசனத்திட்டம் எனப்படும். பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் கோதையாறு இடதுகரை கால்வாய் வழியாகப் புத்தன் அணைக்கட்டுக்குக் கொண்டு வரப்படுகிறது. இதுபோன்று பெருஞ்சாணி அணையிலுள்ள தண்ணீர் புத்தன் அணைக்கட்டில் சென்று சேர்கிறது. பின்னர் அங்கிருந்து அந்நீர் தோவாளைச் சானல, அனந்தனார்ச் சானல், பத்மனாபபுரம் புத்தனார் சரகம், நாஞ்சல் நாடு புத்தனார்சானல் (பழையாறு அடங்க) ஆகிய சானல்கள் வழியாக கல்குளம் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் சுமார் 59,000 ஏக்கர் நிலங்களுக்கு இருபோகப் பயிருக்கு நிரந்தரப் பாசன வசதி அளித்துவருகிறது.

முதலாவது குறைந்த காலப்பயிர் கன்னிப் பயிரென்றும், இரண்டாவது நீண்டகாலப் பயிர் கும்பப்பயிரென்றும் இம்மாவட்டத்தில் அழைக்கப்படுகின்றது.

## 2. நெய்யாறு திட்டம்:

கேரள மாநிலத்திலுள்ள நெய்யாறு எனும் ஆற்றின் குறுக்கே செப்பிலாமூடு என்கின்ற இடததில் நெய்யாறு பாசனத்திட்டத்திற்காக ஒரு அணை கட்டப்பட்டு, அதன் இரு பக்கமும் இரண்டு கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில புனரமைப்பின் காரணமாக இடதுகரைக் கால்வாயின் பாசன நிலங்களில் ஒரு பகுதி தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டது. அதனால் இடது கரை கால்வாயில் 24/2–80 எனும் இடத்திலிருந்து தமிழ்நாடு அரசால் [கன்னியாகுமரிக் கிளைக்கால்வாய் வெட்டப்பட்டது. இவ்வேலை கேரளமும் தமிழகமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி கன்னியாகுமரிக்கிளைக்கால்வாய்க்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் விடவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டு வேலை 1959-ல் தொடங்கி 1963–ல் முடிவுற்றது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 3404 ஏக்கர் நிலங்களுக்கு இருபோகப் பயிருக்கு தற்போது நிரந்தர பாசன வசதி கிடைத்துள்ளது.

## 3. திற்பரப்பு சிற்றணை திட்டம்:

இம்மாவட்டத்தில் குலசேகரம் எனும் இடத்தில் 5–வது மைலில் திற்பரப்பில் கோதையாற்றின் குறுக்கே இச்சிற்றணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து திற்பரப்பு இடதுகரை கால்வாய் என்றும், வலதுகரை கால்வாய் என்றும் இரு பிரிவுகள் பிரிந்து செல்கின்றன. இடதுகரை கால்வாய் சுமார் 401 ஏக்கருக்கும் வலது கரை கால்வாய் சுமார் 483 ஏக்கருக்கும் பாசன வசதி அளிக்கிறது.

## 4. அருவிக்கரை சிற்றணை திட்டம்:

இம்மாவட்டத்தில் திருவட்டார் எனும் ஊரிலுள்ள பரளியாற்றின் கீழ்க்கோடியில் அவ்வாற்றின் குறுக்கே முன்னாள் திரு-கொச்சி அரசு ஒரு சிற்றணை கட்டியுள்ளது. இந்த அணைக்கட்டு பெருஞ்சாணி நீர்த்தேக்கத்தில் இருந்து 8 மைல் தூரத்திலுள்ளது. இச்சிற்றணையின்கீழ் பரளியாறு கோதையாறுடன் சேர்ந்து முடிவில் தாம்பிரபரணி ஆறாக மாறி கடலில் கலக்கின்றது. இச்சிற்றணையிலிருந்து அருவிக்கரை இடது கரை கால்வாய் வலது கரை கால்வாய் என இரு கால்வாய்கள் பிரிந்து செல்கின்றன, அவை முறையே 527 ஏக்கர், 127 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்றன.

## 5. சிற்றாறு பட்டணங்கால் திட்டம்:

சிற்றாறு அணை 1. விளவங்கோடு வட்டத்தில் காசிமலை அரசு வனத்தில் எட்டக்காணிக்கும், வண்டிபிலா காணிக்கும் அருகில் கடல் மட்டத்திற்கு மேல் 2000 அடி உயரத்தில் உற்பத்தியாகி 7 மைல் ஓடி, பேச்சிப்பாறை அணையிலிருந்து 3 மைல் தூரம் கீழ்ப்பாகத்தில் கோதையாற்றில் சேர்கின்றது. கோதையாற்றில் இந்த ஆறு சேரும் இடத்திற்கு ஒரு மைல் மேற்கு ஒரு மண் அணை 73 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

சிற்றாறு 2. கேரள மாநிலத்திற்குட்பட்ட நெய்யாற்றின்கரை தாலுகாவிலுள்ள கல்மலை அரசு வனத்தில் கடல் மட்டத்திற்குமேல் சுமார் 2300 அடி உயரத்தில் உற்பத்தியாகி கோதையாற்றில் சேர்கிறது. இந்த ஆறு கோதையாற்றில் சேர்வதற்கு $2\frac{1}{4}$ மைல் தூரத்தில் சிற்றாறு அணை 2 சுமார் 82 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கல்குளம் விளவங்கோடு வட்டாரங்களில் சுமார் 15,000 ஏக்கர் இருபோகச் சாகுபடிக்கும் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் 17000 ஏக்கர் ஒருபோகச் சாகுபடிக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.



கோதையாறு, பட்டணங்கால் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் மழை இல்லாதிருந்தால் ஜூன் முதல் தேதியிலிருந்து பெப்ரவரி 28–ம் தேதிவரை விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடப்படும்.

சிற்றாறு பட்டணங்கால் பாசனத்திட்டத்தின் கீழ் 8625 ஏக்கரும், நெய்யாறு பாசனத்திட்டத்தின் கீழ் 3453 ஏக்கரும் இருபோக பாசன வசதி பெற்றுள்ளன. மேலும் நிலக் கால்வாய்கள் அமைப்பதின் மூலம் சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தில் 3313 ஏக்கருக்கும், நெய்யாறு பாசனத்திட்டத்தில் 284 ஏக்கருக்கும் நிரந்தர பாசன வசதி செய்து கொடுக்கலாம்.

நெல் சாகுபடிதான் இம்மாவட்டத்தில் முக்கியமெனினும் தென்னை, முந்திரி மரச்சீனி, ரப்பர், பாக்கு, காப்பி, தேயிலை, கிராம்பு போன்ற வணிகப்பயிர்களும் ஏராளமாகப் பயிர் செய்யப்படுகின்றன. பிற மாவட்டங்களில் கிடைக்காத மட்டி, செவ்வாழை, ரசகதலி, பூங்கதலி போன்ற பலவகை வாழைப் பழங்களும் இம்மாவட்டத்தில் ஏராளமாகப் பயிராகின்றன. இந்த மாவட்டத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு மேற்குறித்த ஐந்து பாசனத்திட்டங்கள் தான் பெரிதும் உதவுகின்றன எனில் அது மிகையாகாது.

# முதியோர் உதவித் தொகை திட்டம்

## 1. முதியோர் உதவித் தொகை:-

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் 22-1-1962ம் நாளிட்ட ஆணை எண 73ன் படி முதியோர் உதவித் தொகை திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட. உடல் உழைத்து காலங்கழிக்க திறமையற்று, ஆதரவு இல்லாத ஏழை வயோதியர்களுக்கு வட்டாட்சியர் களுடைய பரிந்துரையின் அடிப்படையில். மாதந் தோறும் ரூ. 25/- உதவித் தொகை வழங்கிட சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர்/ துணை ஆட்சியர் ஆணை பிறப்பிக்கிறார். இந்த உதவித் தொகை அரசு செலவில் மணியார்டர் வழியாக உதவித் தொகை பெறும் நபர்களுக்கு சம்பந்தப் பட்ட வட்டாட்சியர்கள் அனுப்பிவருகின்றனர்.

இம்மாவட்டத்திற்கு ஏற்கெனவே அனு மதிககப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2055 ஆகும. 28-7-1979-ம் நாளிட்ட அரசு ஆணை எண். 1062ன்படி இம்மாவட்டத்திற்குகூடுதலாக 250 இடங்கள் அனுமதக்கப்பட்டுள்ளன. ராஜாக்கமங்கலம, அகஸ்தீஸ்வரம். திருந்தங்கோடு கிள்ளியூர் முஞ்சிறை ஆகிய ஊராட்சி ஒன்றியங் களில் தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் 11-9-1980-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 700 ன் படி 102 புதிய இடங்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன. தறபோது இம்மாவட்டத்தில் அனுமதிக்கப் படட நபர்களின் எண்ணிக்கை 2407 ஆகும்.

## 2. ஆதரவற்ற விதவை உதவித் தொகை:-

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் 27-5-1975-ம நாளிட்ட ஆணை எண் 507ன் படி கணவனை இழந்த கைம் பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ. 25 வழங்கபபட்டு வருகிறது. மேறபடி உதவித் தொகை பெறுவதற்கான வயது வரம்பு 45 வயதிலிருந்து 40 வயதாக 27-4-1979ம் நாளிட்ட அரசு ஆணை எண. 391-ல் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஏற்கெனவே இம்மாவட்டத்திற்கு அனு மதிக்கப்பட்ட ஆதரவற்ற விதவை உதவித் தொகை பெறும் நபர்களின் எண்ணிக்கை 300 27-4-78ந் தேதிய அரசு ஆணை எண். 391 ன் படி 150 இடங்களும், 26-12-79ந் தேதிய அரசு ஆணை எண். 1650 ன் படி 150 இடங்களும் கூடுதலாக அனுமதிக்கப பட்டுள்ளன. மேலும், தன்னிறைவுத்திட்டதின் கீழ் இம்மாவட்டத் திற்கு 77இடங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன நாளது தேதியில் இம்மாவட்டத்தில் ஆதரவற்ற விதவை உதவித் தொகைக்கு அனுமதிக்கப் பட்ட நபர்களின எண்ணிக்கை 677 ஆகும்.

## 3. உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை:-

உடல் ஊனமுற்று, ஆதரவற்ற ஏழை அநாதைகளுக்கு நிதித் துறையின் 27-5-1975ம் நாளிட்ட ஆணை எண். 507ம் படி மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ. 25 சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களால் வழங்கப் பட்டு வருகிறது. இந்த உதவித்தொகை பெற தகுதியுள்ள நபர்களுக்கு வயதுவரம்பு 45 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோர் களின் ஊனம எந்நிலையில் உள்ளது என்பதை மதிப்பிட சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர்/துணை ஆட்சியர் தலைவராகவும், வட்டார அரசு மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் உறுப்பினர்களாகவும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் செயலாளராகவும் கொண்ட ஒரு குழு நேரடித் தேர்வு நடத்தி, தகுதியினை நிர்ணயம் செய்கிறது. இக் குழுவின் பரிநதுரையின் படியும், வட்டாட்சியரின் அறிக்கையின படியும் கோட்டாட்சியர்/துணை ஆட்சியர் உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை வழங்க அங்கீகாரம் வழங்குகிறார். மேலும் மேறபடி குழுவின் பரிந்துரையின் படி உடல் ஊனமுற்ற நபருக்கு உதவித் தொகை வழங்க நிர்ணயிக்கபபட்ட வயது தடையாக இருந்தால், கோட்டாட்சியரின் பரிந்துரையின் மீது மாவட்டாட்சியர் அவர்கள் வயது வரம் பினைத் தளர்த்தி ஆணையிடுகிறார். பின்னர் கோட்டாட்சியர் உதவித் தொகை வழங்க ஆணை பிறப்பிக்கிறார்.

ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 300 ஆகும் தற்போது தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் கூடுதலாக 21 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே நாளது தேதியில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 321 ஆகும்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை, ஆதரவற்ற விதவை உதவித் தொகை மற்றும் உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர் விபரம் வட்டம் வாரியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வட்டத்தின் பெயர். | முதியோர் உதவித் தொகை | ஆதரவற்ற விதவை உதவித் தொகை. | உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | மொத்தம். |
|---|---|---|---|---|
| தோவாளை | 200 | 120 | 35 | 355 |
| அகஸ்தீஸ்வரம் | 800 | 170 | 75 | 1045 |
| கல்குளம் | 682 | 182 | 71 | 935 |
| விளவங்கோடு | 725 | 205 | 140 | 1070 |
| மொத்தம் | 2407 | 677 | 321 | 3405 |

அவ்வப்போது காலியாகும் இடங்களுக்கு, வட்டாட்சியர்களின பரிந்துரையுடன் வரும் அறிக்கைகளை கோட்டாட்சியர்/துணைஆட்சியர் பரிசீலனை செய்து, உதவித் தொகை பெற புதிய நபர்களுக்கு உத்தரவு வழங்கி, காலியிடங் கள் நிரப்பபபட்டு வருகின்றன.

மேலும், உதவித் தொகை பெறும் நபர் களுக்கு நிதித்துறையின் 18-7-1979ம் நாளிட்ட ஆணைஎண் 995- ன் படி ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15-ம் நாள் சுதந்திர தினத்தன்று, மற்றும் பொங்கல் தினத்தன்றும் நபர் ஒன்றுக்கு வேட்டி அல்லது சேலை இனாமாக அளிக்கப் பட்டு வருகின்றது. தற்போது, உதவித் தொகை பெறுவோர்க்கு 1-11-80 முதல் நபர் ஒன்றுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி இனாமாக வழங்கப் பட்டு வருகிறது.

# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த தியாகிகளின் குடும்பங்களுக்கும், சிறை சென்று தண்டனை பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் இந்திய தேசிய சேவைப் படையில் பணி புரிந்த நபர்களுக்கும் அவர்களது தேச சேவையைப் பாராட்டும் வகையில் மத்திய அரசும், தமிழ்நாடு அரசும், மாத ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றன.

## தமிழ்நாடு அரசு உதவித்தொகை திட்டம்

தமிழ்நாடு அரசு, சுதந்திரப் போராட்ட வீரர்களுககு மாத ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை, 1-10-1966-ஆம நாள் முதல் அமுல்படுத்தி வருகிறது, இத்திட்டம் "தமிழ்நாடு சுதந்திர போராட்ட வீரர்கள் உதவித் தொகை திட்டம்" என அழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் நபர்கள கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்கவேண்டும்.

1) தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு குறைந்தபட்சம் ஒரு மாத கால சிறைத தண்டனை, அல்லது காவல் கைதியாக இருந்திருக்க வேண்டும். இதற்கான அததாட்சியாக சிறை சான்றிதழ் அலலது தன்னுடன் சிறையில் இருநத முன்னாள் நாடாளுமன்ற அல்லது சட்டமனற உறுப்பினரின் சான்றிதழ் பெற்றிருககவேண்டும்.

2) மாத வருமானம் ரூ. 125/-க்கு மேல் இருக்கக்கூடாது. இதில் மத்திய அரசின் உதவித தொகையோ, அல்லது குடும்பத்தில் உள்ள இதர வருமானமோ அடங்காது.

3) சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்கள், அவாகள் இறந்திருந்தால் அவர்களது மனைவிகள அல்லது குழந்தைகள்—ஆகியோர் இத்திட்டத்தின கீழ் பயனபெறத் தகுதி உள்ளவர்கள். ஆண் குழநதைக்கு 18-வயது வரையிலும், பெண குழநதைககு 21 வயது வரையிலும் உதவித்தொகை வழங்கப்படும்.

## மாதாந்திர உதவித்தொகையின் அளவு:

மாநில அரசின் உதவித்தொகை மட்டும் பெற்றுவரும் நபர்களுக்கு மாதம் ரூ. 100 வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மத்திய அரசு உதவித்தொகை பெற்று வரும் நபர்களுக்கு மாநில அரசு உதவித்தொகை மாதம் ரூ. 75/-வீதம் வழங்கப்படுகிறது.

### பயனடைந்த நபர்கள்:

மாநில் அரசு உதவித்தொகை அனுமதிக்கப்பட்டு, இதுவரை பயன்பெற்றுவரும் நபர்களின் எண்ணிக்கை 30 ஆகும்.

## மத்திய அரசு உதவித்தொகை திட்டம்:

மத்திய அரசின், சுதந்திரப் போராட்ட வீரர் உதவித்தொகை திட்டம், 15—8—1972 முதல அமுல் படுததப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது "சுதந்திர தசைனிக் சம்மன் உதவித்தொகை திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் நபர்கள் கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்கவேண்டும்.

1. தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, குறைந்த பட்சம் 6 மாதம் சிறைசென்றிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர், மலை சாதியினா மற்றும் பெண்களுக்கு சிறைத் தண்டனைக்காலம் மூன்று மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

2. வருமான வரம்பு வருடத்திற்கு ரூ. 5000/-க்கு மேல் இருக்கக்கூடாதுஎன இதுவரை இருந்து வந்தது. தற்போது 1—8—80 முதல இவ் வருமான வரம்பு நீக்கப்பட்டுவிட்டது.

3. சிறைத்தண்டனை அனுபவித்ததற்கு அத்தாட்சியாக, சிறைச் சானறிதழ் அல்லது தன்னுடன் சக சிறை கைதிகளாக இருந்த முன்னாள் அல்லது தற்போதுள்ள நாடாளுமனற அல்லது சட்டமன்ற உறுபபினாகளிடம் சானறிதழ் பெற்றிருக்கவேண்டும்.

## மாதாந்திர உதவித் தொகையின் அளவு

மத்திய அரசின் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு 1-8-80 முதல மாதம் ரூ. 300/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன சுதந்திரப்போராட்ட வீரர்களின மனைவிமார்களுக்கு மாதம் ரூ.200/ம் அவர்களன் திருமணமாகாத ஒவ்வொரு பெண் குழந்தைகளுக்கும் மாதம் ரூ. 50-ம் ஆக மொத்தததில மாதம ரூ. 300/-க்குள்ளாக உதவித் தொகை வழங்கப்படுகிறது.



### பயனடைந்த நபர்கள்:

மத்திய அரசின் திட்டத்தின் கீழ் இதுவரை 41 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களில் 12 நபர்கள் மாநில அரசு உதவித்தொகையும் பெற்று வருகின்றனர்.

## தாமிரப் பத்திரம் வழங்கும் திட்டம்:

தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைத்தண்டனை அனுபவித்து, உதவித் தொகை பெறுவதற்கு தகுதி பெற்று, ஆனால் வருமான வரம்பின் காரணமாக உதவித்தொகை பெற இயலாதவர்களுக்கு, அவர்களின் தேச சேவையைப் பாராட்டும் விதத்தில் "தாமிரப் பத்திரம்" என்ற பெயரில் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை இம்மாவட்டத்தில் மொத்தம் 42 நபர்களுக்கு தாமிரப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## பட்டயம் வழங்கும் திட்டம்:

தாமிரப்பத்திரம் போன்று, சுதந்திரப் போராட்ட வீரர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் "பட்டயம்" வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை மொத்தம் 27 நபர்களுக்கு பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

### பொது:

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு தாமிரப் பத்திரம் வழங்கும் திட்டம் 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நிறுத்திவைக்கப்பட்டது. மீண்டும் இத்திட்டம் 1980 ஜூலை முதல் புதுப்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

# அகதிகள் மறுவாழ்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து வரப்பெற்ற அகதிகள் குடியமர்த்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுவரை 541 அகதி குடும்பங்கள் இம்மாவட்டத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் கீழ்க்கண்ட மறுவாழ்வுத்திட்டங்களின் கீழ் அமர்த்தப்பட்டு உதவி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

## கூட்டுறவு நூற்பு ஆலை, ஆரல்வாய் மொழி,

இந்நூற்பு ஆலையில் மொத்தம் 150 பேர் வேலை கொடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 116 அகதிகள் எற்கனவே பயிற்சி முடிந்து டி ஆலையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 34 அகதிகள் தற்போது டி ஆலையில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். டி நூற்பு ஆலையில் மத்திய அரசு அகதி ஒருவருக்கு ரூ 15.000 வீதமும், மாநில அரசு ஒட்டு மொத்தமாக ரூ 36, 60. 000/-யும தங்களது பங்காக முதலீடு செய்துள்ளன.

2. அகதி குடும்பங்களில் 34 பேருக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ 250/– வீதம் குடிசைப் பணம் வழங்கப்பட்டுள்ளது. 78 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கு முதல் தவணையாக ரூ. 600/-ம் இரண்டாவது முன்றாவது தவணைகளாக ரூ. 2100/-ம் வழங்கப்பட்டுவிட்டது. கடைசி தவணையாக ரூ 1200/- வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி ஆலையில் பயிற்சிபெறும் அகதிகளுக்கு பயிற்சிக் காலத்தில் ரூ 97–50 வீதம் உதவித் தொகையும் மற்றும் பராமரிப்புத் தொகையும் வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் அகதிகள் நிரந்தர பணியாளர்களாக பணியில் அமர்த்தப்படுகின்றார்கள்.

மத்திய அரசு கடித எண் 4 (27) 79 நாள் 5—10—79-இன் படி மேலும் 2. 25 லட்சம் ருபாயை டி ஆலையில் முதலீடு செய்துள்ளது அதன்படி 34 பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

## ஈத்தாமொழி கயிறு உற்பத்தி பிரிவு:

மேற்படி கயிறு உற்பத்தி பிரிவில் 25 இலங்கை அகதிகள் அமர்த்தப்பட்டனர். டி 25 அகதிகளும் 6 மாதகாலம் பயிற்சி பெற்று நிரந்தரமாக டி கயிறு உற்பத்தி நிலையத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு தலா ரூ 82. 50 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கயிற்றின் அடிப்படையிலேயே சம்பளம் வழங்கப் பட்டது, குறைந்த அனுபவத்துடன் உள்ளூர் பணியாளர்களுடன் இவர்களால் போட்டியிட இயலாததால் மிகக் குறைந்த அளவே ஊதியம் ஈட்ட முடிந்தது. எனவே அனைவரும் இந்த வேலையை விட்டுச் சென்று விட்டனர்.

## அகதிகளுக்கு மீன்பிடி பயிற்சி:

குளச்சல் மீன்துறை உதவி இயக்குநரின் கீழ் 3 அகதிகள் மீன்பிடி பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு பயிற்சிக்காலம் 10 மாதம். இப்பயிற்சிக் காலத்தில் தலா ரூ 85/- உதவித் தொகையாகவும், ரூ 15/- வீட்டு வாடகையாகவும் வழங்கப் படுகிறது.

## தென் பிராந்திய ரயில் வேபாதை அமைப்புப்பணி

திருவனந்தபுரம் கன்னியாகுமரி ரயில்வே பணியில் 1976 வரை 47 அகதிகள் கூலித் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டனர். 1979-ல் மேலும் 14 குடும்பங்கள் அமர்த்தப்பட்டனர். ஆனால் தற்போது 32 பேர்களே இப்பணியில் உள்ளனர். மற்றவர்கள் இந்த வேலையை விட்டுச்சென்று விட்டனர். 32 பேர்களில் 27 அகதிகளுக்கு வீடு கட்ட தலா ரூ 2100/– வீதம் முதல் தவணை வீட்டுக் கடன் வழங்கப் பட்டுள்ளது. இராண்டாவது தவணை கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அரசு ரப்பர் தோட்டங்களில் அகதிகள்:

அரசு ரப்பர் தோட்டங்களில் இதுவரை 213 அகதி குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இக்குடும்பங்களிலிருந்துமொத்தம் 412 பேர் அரசு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்து வருகின்றனர். இது தவிர, 5 பேர் அரசு ஊழியர் அந்தஸ்தில் பணிபுரிந்து வருகின்றனர். தோட்டங்களில் குடியமர்த்திய அகதிகளில் 19 இலங்கை அகதிகளுக்கு மொத்தம் ரூ 38, 000/–மும் (1978–79 ல்) 37 பர்மா அகதிகளுக்கு ரூ 1.03, 000/- மும் வணிகக் கடனாக வழங்கப்படடுள்ளது. பர்மா அகதிகளாக 39 பேர் இம்மாவட்டத்தில் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.



இவைகளல்லாமல் அரசு ஆணை எண் 126 (வனத்துறை) நாள் 19—2—1979ன் படி குமரி மாவட்டத்தில் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் கைவடப்பட்ட 300 ஏக்கர் சிபில்ட் தேயிலை தோட்டத்தை சீர் செய்து புதிய தேயிலை எஸ்டேட் தொடங்குவதற்கான திட்டப்பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற குமரி மாவட்டத்தில் தேவையான வழி வகைகள் உள்ளன, என்பதால் இந்தத்திட்டத்தை செயல் படுத்தி அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் அரசின் சீரிய கவனத்தில் உள்ளது.

## அகதிகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு நிதி மற்றும் வேலை வாய்ப்பு உதவிகளின் சுருக்கம்

| | எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| **1. கூட்டுறவு நூற்பு ஆலை** | | |
| *1. வீட்டுக்கடன்* | | |
| 1. முதல் தவணை | 78 | 46,800.00 |
| 2. இரண்டாம் தவணை | 78 | 1,61,700.00 |
| 3. மூன்றாம் தவணை | 78 | 1,61,700.00 |
| மொத்தம் | | 3,70,200.00 |
| *2. குடிசைப்பணம்* | 84 | 21,000.00 |
| **2. அரசு ரப்பர் தோட்டம்** | | |
| *1. வணிகக் கடன்* | | |
| 1. இலங்கை அகதிகள் | 19 | 38,000.00 |
| 2. பர்மா அகதிகள் | 37 | 1,03,000.00 |
| **3. தென் பிராந்திய ரயில்வே** | | |
| *1. வீட்டுக் கடன்* | 27 | 56,700.00 |

## இம்மாவட்டத்தின் பல்வேறு திட்டங்களின்கீழ் அமர்த்தப்பட்டுள்ள அகதிகளின் விபரம்

| இலங்கை அகதிகள் | குடும்பங்கள் அல்லது நபர்கள் |
|---|---|
| 1. ஆரல்வாய்மொழி கூட்டுறவு நூற்பு ஆலையில் பணியாற்றுபவர்கள் | 150 |
| 2: அரசு ரப்பர் தோட்டங்களில் பணி புரிபவர்கள் | 213 |
| 3. ஈத்தாமொழி கயிறு தொழிற்சாலை மூலம் பயிற்சி அடைந்தவர்கள் | 25 |
| 4. குளச்சல் மீன்பிடி பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி பெற்றவர் | 3 |
| 5. தென் பிராந்திய ரயில்வே நாகர்கோவில் | 61 |
| 6. மாவட்டத்தில் பரவலாக உள்ளவர்கள் | 50 |
| **4. பர்மா அகதிகள்** ரப்பர் தோட்டங்களிலும் மற்றுமுள்ளவர்களும் | 39 |
| மொத்தம் | 541 |

# கட்டிடங்கள்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளைவிற்குள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்காக இரட்டைமாடிக் கட்டிடம் கட்ட அரசாணை எண். 947 வருவாய்த்துறை நாள்: 22-4-1978-இன் படி ரூ. 16.33 லட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இரட்டை மாடிக்கட்டிடம் கட்டப்பட்டு அலுவலகம் இயங்க தயாரான நிலையில் உள்ளது.

இம்மாவட்டத்தில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் இதரத் துறை அலுவலகங்களையும் அரசுக் கட்டிடத்திற்கு மாற்றப்படல் வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு தற்பொழுது கட்டப் பட்டுள்ள கட்டிடத்தின் மேல், மேலும் இரண்டு மாடிகள் கூடுதலாக கட்ட நிர்வாகப்பொறியரை கேட்கப் பட்டது. அவரது கடித எண் 849 எஸ். இ. நாள்: 18—10—1979-ன் படி ரூ. 22.44 லட்சம் ரூபாய்க்கான மதிப்பீடு தயார் செய்து மேற்பார்வை பொறியாளர் வழியாக சென்னை முதன்மைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது, மேலும் இரண்டு மாடிகள் கட்ட, முதன்மைப் பொறியாளர் கேட்டுள்ள விபரங்கள் அன்னாருக்கு அனுப்பப்பட்டு அரசு ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ள கேட்கப் பட்டுள்ளது.

## வருவாய் ஆய்வாளர்கள் குடியிருப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்பு மற்றும் அலுவலகக்கட்டிடங்கள் கட்டும் திட்டத்தின்கீழ் 1978-79-ஆம் ஆண்டிற்கும் 1978-ஆம் ஆண்டில் ஐந்து குடியிருப்புகளுக்கும் 1979-80-ஆம்வருடத்திற்கு1979-ஆம்ஆண்டில் நான்கு குடியிருப்புக்களுக்கும், 1980-81-ஆம் வருடத்திற்கு 1980-ஆம் ஆண்டில் மூன்று குடியிருப்புக்களுக்கும் முறையே அரசாணை 1607 (வீடுகள் மற்றும் நகர்புற அபிவிருத்தி) துறை நாள்: 27-11-1978, அரசாணை 1492 (வீடுகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி) துறை நாள்: 1—8—79 மற்றும் அரசாணை எண். 2032 வருவாய்த்துறை நாள்: 29—8—80-இன் படியும் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 1978-79 மற்றும் 1979-80-க்கான குடியிருப்பு வீடுகள் அனைத்தும் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன 1980-81-க்கான குடியிருப்பு வீடுகள் கட்ட பொதுப்பணித்துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## வருவாய்த்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புக்கள்

அரசாணை எண். 913 (வீடு மற்றும் நகர்புற அபிவிருத்திதுறை நாள்: 17—7—1980)-இன் படி கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் கோட்டாட்சித் தலைவருக்கும், தலைமையிடத்து வட்டாட்சியாளர்கள் தோவாளை மற்றும் கல்குளம் ஆகியோருக்கும் குடியிருப்பு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்கள் கட்ட வீட்டு வசதி வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கிராமச் சாவடிகள்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980-81 - ஆம் ஆண்டிற்கு இரண்டு இடங்களில் கிராமச் சாவடிகள் கட்டும் பொருட்டு அரசாணை எண். 2467 வருவாய் துறை நாள்; 28—10—80-ன் படி இம்மாவட்டத்திற்கு ரூ. 25000/- அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்ட பொதுப்பணித் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



# தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம்

தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் 13/1980-ன் படி ஆண்டு ஒன்றுக்கு ரூ 4800/-ம் அதற்குக் குறைவான வருமானம் உள்ள நில மற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு விவசாயிகள் அவர் பட்ட கடன்களிலிருந்து நிவாரணம் பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன இச்சட்டத்தின்படி தகுதியுடையவர்கள் அனைவரும் பயன் பெறத் தக்கவகையில், மனுச் செய்யும் முறை மற்றும் அணுகும் அதிகாரி மற்றும் மனுச் செய்ய வேண்டிய கால வரையறை பற்றியும் தினசரிச்செய்தித்தாள்கள், மற்றும் அலுவலக விளம்பரப் பலகைகள் மூலம் மக்களுக்கு விளம்பரப்படுத்தப்பட்டது.

மேற்படி சட்டத்தின்படி இம்மாவட்டத்தில் மனுச் செய்து கொள்ளக் கடைசி நாள்: 18-11-1980-ன் படி 1944 மனுக்கள் வரப்பெற்று அதில் 272 மனுதாரர்கள் ரூ 1,31,506/- மதிப்புக் கடன் நிவாரணம் அடைந்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் இன்னும் 1672 கடன் நிவாரண மனுக்களின்மீது ஆய்வுசெய்துஆணை வழங்கப்படவுள்ளன.

கடன் நிவாரணச் சட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து உடனுக்குடன் மக்களுக்கு நிவாரணம் பெறச் செய்வதற்காகத் தனிவட்ட ஆட்சியர்களும் உதவியாளர்களும் நியமிக்கப் பட்டிருந்தார்கள். ஒரு கோட்டத்திற்கு 500 மனுக்களுக்குக் குறைவாக இருந்தால் அக் கோட்டத்திற்கு தனி அதிகாரிகள் தேவையில்லை என்ற அரசின் கருத்துப்படி இம்மாவட்டத்தில் அச்சமயம் மனுக்கள் குறைவாக இருந்ததால் இம்மாவட்டத்தில் நியமிக்கப்பட்டிருந்த இரண்டு தனி வட்ட ஆட்சியர்களும் உதவியாளர்களும் நீக்கப்பட்டுவிட்டார்கள். தற்சமயம் 1672 மனுக்கள் இருப்பதால் தனி அலுவலர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# அரசு உப்பு நிலங்களின் குத்தகை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான உப்பு நிலங்களில் உப்பு உற்பத்தி செய்யும் உரிமை திருவிதாங்கூர் உப்புச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றது. உப்பு நிலங்களின் குத்தகை அனுமதி மாநில அரசினாலும், உப்பு உற்பத்தி செய்ய வழங்கும் உரிமம் மத்திய அரசினாலும் வழங்கப்பட்டு வருகிறது. உப்பு உற்பத்தி செய்யும்பொருட்டு உப்பு நிலங்களைக் குத்தகைக்கு விடுவது சம்பந்தமாக தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் விதிமுறைகளை மாற்றி அமைத்து புதிதாகச் சட்டம் ஒன்று இயற்றும் பொருட்டு, சட்டமுன்மொழிவொன்று அரசின் பரிசீலனையிலுள்ளது. உப்பளங்களின் குத்தகைதாரர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30/- குத்தகைப்பணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 127 உப்பள உரிமம்தாரர்கள் உள்ளனர். குத்தகைக்கு விடப்பட்டுள்ள உப்பு நிலங்களின் மொத்தப் பரப்பு ஏறத்தாழ 1030 ஏக்கர் ஆகும்.



# வேளாண்மை வருமான வரி

கன்னியாகுமரி மாவட்டம் 1956-நவம்பர் 11-ல் தாய்த் தமிழகத்துடன் இணைந்தது என்றாலும் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம் 1955, 1972-ல் தான் இம்மாவட்டத்தில் அமுலபடுத்தப்பட்டது. அதுகாறும் கேரள வேளாணமை வருமானவரிச் சட்டங்கள் நடப்பில் இருந்தன. அதன் பின்னர் தமிழ்நாடு சட்டங்களை விரிவு படுத்தும் வகையில், அதற்கென 1972 வரிவிதிப்பு என்ற புதிய சட்டம் இயற்றப்பட்டது,

வேளாண்மை வரி விதிப்பு சட்டத்தின்கீழ், ஒவ்வொராண்டும் 20 தரமான ஏக்கருக்குமேல் விவசாய நிலம் வைத்திருப்பவர் அந்த நிலத்திலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் மொத்த விவசாய வருமானததைக் கணக்கிட்டு நிகர வருமானத்திற்கு வரி விதிப்பு செய்யப்படுகிறது. வரிவிதிப்பு ஆணடு ஏப்ரல் முதல்தேதியிலிருந்து 31 மார்ச் முடிய எனினும அதற்கு முந்திய ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மார்ச் 31 முடிய கிடைத்த வருமானம்தான கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். எனவே இவ்விலாகாவில வரிவிதிப்பு ஆண்டு, வருமானததைக்கணக்கிடும் ஆண்டு என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன. வருமான அடிப்படையில் (Income Basis) வரி கணக்கிடப்படடு வந்தாலும் இணகக முறை எனப் புதியதொரு அமைப்பின்படி ஒருவரின் மொத்த தரமான ஏக்கரை அவர் முநதிய ஆண்டு சாகுபடி செய்த பயிர்களின் அடிப்படையில் கணக்கிட்டு அதன்படியும் வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்த முறை இணக்க முறை (Composition) எனப்படும். இணக்க முறை அடிப்படையில் வரி விதிப்புச் செய்தல் சுலபமானதாகும். ஆனால் இவ்வடிப்படையில் 100 தரமான ஏக்கர் வரை தோட்டப் பயிர் வைத்திருப்பவர் மட்டுமே பயனடைய முடியும். தோட்டப் பயிர் அல்லாத நிலம் வைத்திருபபவர்களுக்கு இத்தகைய 100 ஏக்கர் என உச்ச வரம்பு கிடையாது.

கீழ்க் குறிப்பிட்ட பயிர்கள் தோட்டப் பயிர்களைச் சார்ந்தனவாகும்,

1. ரப்பர்
2. தேயிலை
3. கமுகு (பாக்கு)
4. காப்பி
5. ஏலம்
6. கிராம்ப

இதர எல்லாப் பயிர்களும் தோட்டப் பயிர் அல்லாத இனத்தைச் சேர்ந்தனவாகும்,

தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி சட்டத்தில் 1979-ல் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி ஆண்டொன்றுக்கு ரூ, 10,000/- வரை மட்டுமே நிலத்திலிருந்து வருமானம் பெறுபவர் வரி செலுத்தவேண்டியதில்லை. ரூ. 10,000/-க்கு மேல வருமானம் பெறுபவர் கீழ்க்கணடவாறு வரி விதிப்புக்கு உட்படுவார்.

| | | |
|---|---|---|
| முதல் ரூ. 8000 வரை விவசாய வருமானம் பெறுபவர் | | வரி இல்லை. |
| அடுத்த ரூ. 7,000-க்கு | ஒருரூபாய்க்கு | 25 பைசா வீதம் |
| அடுத்த ரூ. 5,000-க்கு | ,, | 30 ,, |
| அடுத்த ரூ. 5,000-க்கு | ,, | 35 ,, |
| அடுதத ரூ. 5,000-கு | ,, | 45 ,, |
| அடுத்த ரூ. 20,000-க்கு | ,, | 55 ,, |
| அடுத்த ரூ. 50,000-த்கு | ,, | 60 ,, |
| மீதி வருமவருமானத்திற்கு | ,, | 65 ,, |

இந்த அடிப்படை, கம்பெனி விஷயத்தில் பொருந்தாது. கம்பெனிகள் ரூபாய்க்கு 65 பைசா என்ற கூடுதல் வரிவிதிப்புக்கு உட்படும்.

இணக்க முறையில் அடியிற்குறிப்பிட்ட விதத்தில் வரிவிதிப்பு செய்யப்படுகிறது.

| | பரப்பு | தர ஏக்கர் 1-க்கு வரி வீதம் |
|---|---|---|
| 1, | முதல் 20 தர ஏக்கர் வரை | இல்லை |
| 2. | அடுத்த 5 ஏக்கர் வரை | ரூ, 15 வீதம் |
| 3. | அடுத்த 5 தர ஏக்கர் வரை | ரூ. 20 வீதம் |
| 4, | அடுத்த 5 தர ஏக்கர் வரை | ரூ. 30 வீதம் |
| 5. | அடுத்த் 5 ஏக்கர் வரை | ரூ. 40 வீதம் |
| 6. | அடுத்த 10 ஏக்கர் வரை | ரூ. 50 வீதம் |
| 7. | அடுதத 10 தர ஏக்கர் | ரூ. 60 வீதம் |
| 8. | அடுத்த 10 தர ஏக்கர் வரை | ரூ. 70 வீதம் |
| 9. | அடுதத 10 தர ஏக்கர் வரை | ரூ- 80 வீதம் |
| 10. | எஞ்சி வரும் தர ஏக்கர்களுக்கு | ரூ. 100 வீதம் |

**நிர்வாக முறை:**

இம்மாவட்டத்தில் இரண்டு வேளாண்மை வருமான வரி அலுவலாகள் துணை ஆட்சியர் அந்தஸ்தில் பணியாற்றி வருகிறாகள். அவர்கள் முறையே அலுவலர் 1, 2 என பதவி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இம்மாவட்டத்தில் நான்கு தாலுகாக்கள் உள்ளன. அகஸ்தீஸ்வரம் விளவங்கோடு தாலுகாக்கள் அலுவவர் 1-ன் அதிகார வரம்பிலும் கல்குளம்,

தேரவாளே தாலுக்காக்கள் அலுவலர் 2-ன் அதிகார வரம்பிலும் உள்ளன. இரண்டு அலுவலர்களின் தலைமையில்லமும் நாகர்கோவிலில் தான் உள்ளது.

இதுபோல் வட்டாட்சியர் அந்தஸ்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியிலும்; தென்காசியிலும் இரண்டு அலுவலர்கள் பணியாற்றி வருகிருர்கள். மேற்குறிப்பிட்ட அனைத்து வேளாண்மை வருமான வரி அலுவலர்களுக்கும் நாகர்கோவிலில் உள்ள வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர் (மாவட்ட வருவாய் அதிகாரி அந்தஸ்தில்) நேரடி கவனிப்பில் பணி புரிகின்றனர்.

**வரி விதிப்பு:**

20 தரமான ஏக்கருக்கு மேல் நிலமுடைய நிலச்சொந்தக்காரர்கள் தம் வருமானம் பற்றிய அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் ஜுன் திங்கள் முதல் தேதிக்குள் வேளாண்மை வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்ய வேண்டும் அதுபோல் இணக்கமுறைக்கு விருப்பமுள்ளவர்கள் ஜுன் திங்கள் 15-ம் தேதிக்குள் குறிப்பிட்ட படிவத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விண்ணப்பம் வரப்பெற்றவுடன் வரி விதிப்புக்குட்பட்ட அவர்களின் கணக்குகளைக் கொண்டு வரச் செய்து விசாரணைகள் நடத்தி கணக்குகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தலப் பார்வைக்குப்பின் அவர்களின் வருமானம் நிர்ணயம் செய்யப்படும். அதன் பின்னர் மேலே விவரித்தவாறு வரி விதிக்கப்படும். வரிவிதிப்புத் தொகையை வரி விதிப்புக்கு உட்பட்ட நபர் உத்திரவு கிடைத்த 21 நாட்களில் அரசுக்கு செலுத்திட வேண்டும்.

இதுகாறும் வரி வசூல் வேலையை அந்தந்த வட்டாட்சியர்கள் கவனித்து வந்தார். ஆனல் இப்போது வசூல் வேலையையும் வருவாய் வசூல் சட்டத்தின கீழ் வேளாண்மைவருமான வரி அதிகாரிகளே செய்ய வேண்டும் என அரசு உத்திரவிட்டுள்ளபடியால் இவ்வாண்டு முதல் வசூல் வேலையையும் வேளாண்மை வருமான வரி அதிகாரிகளே கவனித்து வருகிருர்கள்.

1972-ல் வேளாண்மை வருமான வரிச் சட்டத்தில் இந்த அரசு செய்த திருத்தம் நிமித்தம், 20 தரமான ஏக்கர் வரையில் நிலம் வைத்திருக்கும் சிறு நில சொந்தக்காரர்கள் வரி செலுத்த வேண்டியது இல்லை. அதுபோல், ரூ. 10,000/-வரை நிகர விவசாய வருமானம் பெறுபவரும் வரி செலுத்த வேண்டாம். இந்த உத்திரவிளுல் பலர் பயனடைந்துள்ளனர். இது இந்த அரசின் சாதனைகளில் மற்றுமொரு மைல் கல் என்ருல் மிகையாகாது.

தன் ஆண்டில் விவசாய வருமான வரியின் மொத்த கேட்பு ரூ. 64,59,765.75 ஆகும். இதில் ரூ. 37,43102.10 வசூலாகியுள்ளது. பாக்கிதொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.



# நில அளவை மற்றும் பதிவுறுக்கள்

## பாகம் 1

முன்னுள் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக கேரள மாநிலத்தோடு இணைந்திருந்த இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் 1-11-1956ல் தமிழ் நாட்டோடு இணைக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் நான்கு வட்டங்களும், நான்கு நகரங்களும், 81 வருவாய் கிராமங்களும் 18 பிர்க்காக்களும் உள்ளன. அவைகளின் விபரம் பின்வருமாறு:

| | வட்டம் | கிராமங்களின் எண்ணிக்கை | பிர்க்காக்களின் எண்ணிக்கை | நில அளவை செய்யப்பட்ட விஸ்தீர்ணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | ச. மைல் | ச. கி. மீட்டர் |
| 1. | அகஸ்தீஸ்வரம் | 20 | 4 | 103.99 | 269.33 |
| 2 | கோவாளை | 13 | 3 | 73.52 | 190.41 |
| 3. | கல்குளம் | 25 | 6 | 153.11 | 396.54 |
| 4. | விளவங்கோடு | 23 | 5 | 122.08 | 316.18 |
| 5. | ஒதுக்கப்பட்ட வனங்கள் | — | — | 192.80 | 499.35 |
| | மொத்தம் | 81 | 18 | 645.50 | 1671.81 |

கன்னியாகுமரி மாவட்டப் பகுதி அனைத்தும் திருவிதாங்கூர் கொச்சி அரசாங்கத்தால் பல ஆண்டுகளுக்கு முன் நில அளவை செய்யப்பட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த அடிப்படையில் நில அளவைப பராமரிப்புப் பணியை மேற்கொள்ள 1-11-1956க்குப் பின் இம்மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நில அளவு துணை ஆய்வாளர் ஒருவரும், வரைவாளர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டனர். பின இம்மாவட்டத்தில் தமிழ் நாடு நில அளவு 1923ம வருடம் சட்டம் 8 ன படி நில அளவு செய்யப்பட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்று அரசு விரும்பி அரசு ஆணை எண 2780 (வருவாய்த்துறை) நாள் 1-8-58ன்படி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு வட்டங்களும் நான்கு நகரங்களிலும் மறு நில அளவை செய்ய உத்தரவிடப்பட்டது. அதன்படி நவம்பர் 58 முதல் இம்மாவட்டத்தில் மறு நிலை அளவைப் பணி 1172.46 ச. கி. மீட்டர்) ஆரம்பிக்கப்பட்டன. 1-11-1958 முதல 31-10-1962 முடிய இம்மாவட்டம் ஒரே ஒரு மறு நில அளவை அலுவலகத்தால் மட்டும கவனிக்கப்பட்டு வந்தது இநதப் பணியை துரிதமாக முடிக்கும் பொருட்டு அரசு ஆணை 3032 (வருவாய்த்துறை) நாள் 20-9-1962ல் இரண்டாவது மறு நில அளவைக் குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டத்திலுள்ள புலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புலப்பணி பெரும் பகுதி முடிவடைந்து விட்டமையால் 1-1-1966ல இரண்டு அலுவலகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன. அனைத்து புல வேலையும் முடிவடைந்து விட்டது, பினனர் நில அளவை சட்ட விதிகளின்படி நில உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கி, குறைகளை விசாரித்து. திருத்தப் பணிகள் நடைபெற்றன. எல்லா வட்டங்களின் புலப் பணிகள் முடிவடைந்ததும் ஆவணங்கள் நிலவரிதிட்ட அலுவலகத்திற்கு அவ்வப்போது வழங்கப்பட்டதால் நிலவரித்திட்டப் பணியும், மறு நில அளவுப்பணியும் இணைந்து நடைபெற்றது.

தமிழ்நாடு நில அளவைப் பதிவேடுகள் துறை 1-3-1968ல் புனரமைக்கப்பட்டது. அதன் அடிப்படையில கன்னியாகுமரி மாவட்ட நில அளவைப் பணிகள் அனைத்தும் மாவட்ட நில அளவை அலுவலகம் மூலம நடைபெற்று வருகின்றது.

புல அளவைப் பணியும், ஆவணங்கள் திருத்தப் பணிகளும் முடிந்து, மறு நில அளவை ஆவணங்கள் சட்ட ரீதியாக்கப்பட்டு 1923 ம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை விதி 8-வது சட்டம் 13வது பிரிவின கீழ் நில அளவை சட்ட ரீதியாக்கப்பட்டதாக அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வட்டங்கள் வாரியாக நில அளவை முடிவாக்கப்பட்டு அறிவிப்பு வழங்கப்பட்ட கடைசி தேதி வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | அகஸ்தீஸ்வரம் | : | 16—11—1976 |
| 2. | தோவாளை | : | 16—2—1976 |
| 3. | கல்குளம் | : | 16—3—1978 |
| 4, | விளவங்கோடு | : | 16—3—1978 |

இந்த மாவட்டத்திலுள்ள மொத்தம் 81 கிராமங்களில் 72 கிராமங்களுக்கான கிராமப்படம் தயார் செய்து அச்சிட்டு வெளியிட சென்னை மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதியுள்ள 9 கிராமங்களுக்கான கிராமப்படங்கள தமிழ்நாடு கேரள மாநில எல்கைகளில் நில வித்தியாசங்களைத் திருத்தம் செய்து நிர்ணயம் செய்த பின்பு சென்னை மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

இங்கிருந்து அச்சிட்டு வெளியிட அனுப்பப்பட்ட 72 கிராமப் படங்களில் 56 கிராமப்படங்கள் அச்சிட்டு, சென்னை மத்திய நில அளவை அலுவலகத்துலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன எஞ்சிய கிராமப் படங்கள் பெறுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மறு நில அளவை முடிந்து ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு எல்லா வட்ட, கிராம அலுவலகங்களுக்கும் ஆவணங்கள் வழங்கப்பட்டு கிராம அலுவலர்கள், பராமரிப்பு நில அளவர்கள், வட்டாட்சியர்கள் மூலமாக நில அளவைப் பராமரிப்புப் பணிகள் பின்வரும் தேதிகளில் ஆரம்பிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | அகஸ்தீஸ்வரம் | 1—4—1977 |
| 2. | தோவாளை | 1—4—1977 |
| 3. | கல்குளம் | 1—4—1978 |
| 4. | விளவங்கோடு | 1—5—1978 |

இந்த நான்கு வட்டங்களிலுள்ள 18 பிர்க்காக்களிலும் பராமரிப்பு நில அளவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூலமாக பராமரிப்பு நில அளவைப்பணி செயல்பட்டு வருகிறது. இவர்களது பணியை மேற்பார்வை செய்வதற்கு வட்டத்துணை அளவர்கள் கோட்ட தலைமை அளவர்கள் ஆகியோரும் பணியாற்றி வருகிறார்கள். மாவட்ட அளவு ஆய்வாளர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோர் நில அளவை மற்றும் பதிவுறுக்களை மேற்பார்வை செய்து பணியாற்றி வருகிறார்கள். வருவாய் வாரிய உத்தரவு பி. பி. 235 தேதி 29 4—1968 படி உதவி இயக்குநர் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளராகப் பணியாற்றி நில அளவை மற்றும் பதிவுறுக்கள் சம்பந்தமான அனைத்து பணிகளையும் கவனித்து வருகிருர்

தவிர இம்மாவட்டத்திலுள்ள நகரங்களின் (நாகர்கோவில், பத்மநாபபுரம். குழித்துறை, குளச்சல்) நில அளவைப் பணி முடிவுற்று, நில அளவை விதிகளின்கீழ் சட்ட ரீதியாக்கப்பட்டு விளம்பரம் வெளியிடப்பட்டு விட்டன. இவைகளுக்குரிய ஆவணங்கள் விரைவில் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அச்சிட்டு வெளியிட அனுப்பப்பட உள்ளது.

## பாகம் 2

மறு நில அளவை முடிவடைந்து நில அளவை ஆவணங்கள் வட்டம் மற்றும் கிராம அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ரயில்வே பாதை அமைப்புக்கும், அரிஜன நலத்துறைக்கும் தேவையான நில ஆர்ஜிதப் பணிக்கு நில அளவை உட்பிரிவு புலப்பணிகளை இத்துறை மேற்கொண்டது. நிலமற்ற ஏழைகளுக்கு நில ஒப்படை செய்யும் பொருட்டு அவ்வப்போது தேவையான உட்பிரிவுகளை நில அளவை செய்து ஒப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ள தனி வட்டாட்சியருக்கு உதவியாக இரண்டு நில அளவர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

மேலும் தும்பா ராக்கெட்டு நிலையத்தாருக்கு மத்திய அரசு சார்பில் தேவைப்பட்ட புதிய தளம் ஒன்று (Llquid Testing Facility) அமைக்க மகேந்திரகிரி வனப்பகுதியில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குத் தேவையான நில அளவைப் பணிகளை அரசு உத்தரவு வந்தவுடன் இத்துறை மேற்கொள்ள இருக்கிறது.



# உணவுப்பொருள் வழங்கல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போதைய மக்கள் தொகை சுமார் 15 லட்சம் ஆகும். இம்மாவட்டத்தில் 290390 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள விலை மற்றும் அளவுப்படி அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை, மைதா, ரவை முதலிய அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் 427 விற்பனைக் கடைகள் மாவட்டத்தின் எல்லாப் பகுதியிலும் அமைந்து பொருட்களை வழங்கி வருகின்றன. (வாணிபக் கழகக் கடைகள் 88, கூட்டுறவு சங்கக்கடைகள் 339). தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தக் கொள் முதல் விற்பனையாளராக பணியாற்றி எல்லா விற்பனைக் கடைகளுக்கும் பொருள்களை வழங்கி வருகின்றது. மண்ணெண்ணெய், 8 தனியார் மொத்த வியாபாரிகளின் மூலம் சில்லரை விற்பனைக்கடைகளுக்கு வழங்கப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது

தமிழ்நாடு அரசின் சலுகை விலையில் காவல்துறையினருக்கு உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 1011 நபர்களுக்கு பொருள்கள் வழங்கப்படுகின்றன. முதியோர், விதவை மற்றும் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோருக்கு இலவச அரிசி வழங்கும் திடடததின்கீழ் 3002 நபர்களுக்கு வாரந்தோறும் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

கள்ள மார்க்கெட், பதுக்கல், மொத்த வியாபாரம் மற்றும் சில்லரை வியாபாரங்களில் உள்ள முறைகேடுகள் ஆகியவற்றை கண்டறிந்து வழக்குத்தொடர குற்றப்புலனாய்வுத்துறை (குடிமைப் பொருள்) ஆய்வாளர் ஒருவரின் கீழ் ஒரு காவல்துறைப் பிரிவு இயங்கி வருகின்றது.

# தமிழ்நாடு
# நுகர் பொருள் வாணிபக் கழகம்
## கன்னியாகுமரி மண்டலம்

தமிழ்நாடு முழுவதிலும் பொதுஜன வினியோக முறை அடிப்படையில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலும் மிகவும் திறமையாக செயல்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் பங்கு ஏற்று சீரிய முறையில் செயலாற்றி வருகிறது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 1-7-1972-ல் ஆரம்பிக்கப்பட்டது.

2. குமரிமாவட்டத்தின் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகம் 1-1-1973-லிருந்து செயல்படத் துவங்கியது.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கன்னியாகுமரி மண்டலம் துணைக் கலெக்டர் தகுதியில மண்டல மேலாளர் (டெபுட்டி கலெக்டர்) அவர்கள் தலைமையில் 333 பணியாளர்களைக் கொண்டு கோணத்தில் கழகச் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மண்டல மேலாளருக்கு அலுவலகப் பிரிவில் தாசில்தார் தகுதியில் ஒரு உதவி மேலாளரும், வர்த்தகத்தைக் கவனிக்க ஒரு உதவி மேலாளரும், அலுவலகக் கணக்குப் பிரிவில் இள நிலை கணக்கு அலுவலர் தகுதியில் ஒரு துணை மேலாளரும், நிர்வாகத்தில் துணை புரிந்து வருகின்றனர். இதைத்தவிர பொதுஜன விநியோகத்தில் செயல்படும் சில்லறைக் கடைகளைக் கண்காணிக்க இரண்டு உதவி மேலாளர்களும நாகர்கோவில் மற்றும் குழித்துறையை மையமாகக் கொண்டு இயங்கி வருகிறார்கள். குமரி மண்டலத்தில் அத்தியாவசியப் பொருட்களை சேமித்து வைத்திருக்கும் 5 முக்கிய கிட்டங்கிகள் உதவி தர ஆய்வாளர் பொறுப்பில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் 86 சில்லறை விற்பனைக்கடைகளும், ஒவ்வொரு பட்டியல் எழுத்தர் பொறுப்பில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 'அமுதம் சிறப்பு அங்காடி" உதவி மேலாளர் (வர்த்தகம்) கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 5 முக்கிய கிட்டங்கிகளையும், 11 துணைக் கிட்டங்கிகளையும் கொண்டது இதன் கொள்ளளவு சுமார் 10,000 டன் ஆகும் இந்த ஐந்து முக்கிய கிட்டங்கிகளில் ஒன்றான கோணம் கிட்டங்கி, கழகத்திற்குச் சொந்தமானக் கட்டிடத்தில் உள்ளது. இதன் கொள்ளளவு 4000 டன் ஆகும் இதர நான்கு கிட்டங்கிகளும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன, பொதுஜன விநியோகத்திற்குத் தேவையான எல்லாப் பொருட்களும் இதர மாவட்டங்களிலிருந்து தருவித்து. கிட்டங்கிகளில் சேமித்து வைக்கப் படுகிறது. அரிசி, சீனி, கோதுமை, மைதா மற்றும் ரவை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் சில்லறை விற்பனை அங்காடிகளுக்கு. ஒவ்வொரு கடையிலும் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைகளின் தேவைக்கேற்ப ஒவ்வொரு மாதமும் கிட்டங்கிகளிலிருந்து எடுத்து செல்லப் படுகிறது.

தற்பொழுது இம்மாவட்டத்தில் கழகத்தின் சார்பில் 85 சில்லறை விற்பனை நிலையங்கள், ஒரு கிராம நியாய விலைக்கடை ஆக 86 கடைகள் வாடகை கட்டிடங்களில் இயங்கிவருகின்றன. இதன் மூலமாக 91880- குடும்ப அட்டைதாரர்கள் பயன் அடைகிறார்கள், இதுதவிர 336 கூட்டுறவு சில்லறை அங்காடிகள் மூலமாக குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகிறது. இதற்குத் தேவையானப் பொருட்களும் கழக கிட்டங்கிகளிலிருந்து விநியோகம் செய்யப்படுகிறது. இந்தக்கூட்டுறவு சில்லறை விற்பனை அங்காடிகள் மூலமாக 191561 குடும்ப அட்டை தாரர்கள் பயன் அடைகிறார்கள்.

வட்டம் வாரியாக இயங்கிவரும் வாணிபக் கழக சில்லறை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு.



| வ. எண். | வட்டம் பெயர் | இயங்கிவரும் கடைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | சில்லறை விற்பனை நிலையம் | கிராம நியாய விலைக்கடை | |
| 1. | அகஸ்தீஸ்வரம் | 34 | — | |
| 2. | தோவாளை | 4 | 1 | |
| 3. | கல்குளம் | 16 | — | |
| 4. | விளவங்கோடு | 31 | — | |
| | மொத்தம் | 85 | 1 | 86 |

கழகக் கிட்டங்கிகளிலிருந்து அரிசி மற்றும் சீனி முதலிய பொருட்களைக் கூட்டுறவு சில்லறை விற்பனைக் கடைகள் பெற்று குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்து வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சில்லறை விற்பனைக் கடைகள் கழக கிட்டங்கிகளிலிருந்து அரிசி, சீனி, கோதுமை, மைதா மற்றும் ரவை, மண்ணெண்ணெய், பாமோலின் எண்ணெய், பருப்பு வகைகள், மளிகைப் பொருட்களை எடுத்துச் சென்று குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றன.

### அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்:

**1. அரிசி**

இம்மாவட்டத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசிவீதம் கீழ் கண்ட விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | புளுங்கல் அரிசி உயர் ரகம் | ரூ. | 2. 00 |
| 2. | புளுங்கல் அரிசி முதல் ரகம் | ரூ. | 1. 85 |
| 3. | புளுங்கல் அரிசி இரண்டாம் ரகம் | ரூ. | 1. 60 |
| 4. | புளுங்கல் அரிசி மூன்றும் ரகம் | ரூ. | 1. 60 |

**2. சீனி:**

தற்பொழுது அமுலில் இருக்கும் சீனி கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாவட்ட தலைமை நகரசபை எல்லைக்குட்பட்ட அட்டைகளுக்கு 5 கிலோ வீதமும், நகராட்சி எல்லையை ஒட்டியுள்ள 10 பேரூராட்சிகளிலும் மற்றும் ஏனைய நகரசபைகளிலும், கன்னியாகுமரி நகரியத்திலும் 3 கிலோ வீதமும் மீதமுள்ள இடங்களில் 1 கிலோ வீதமும் கிலோ ஒன்றுக்கு ரூ. 2. 85 வீதம் சீனி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மாதந்தோறும் 480 டன் சீனி இதற்காக தேவைப்படுகிறது.

**3. கோதுமை:**

குடும்ப அட்டைகளுக்கு கோதுமை மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வீதம கிலோ ஒன்றுக்கு ரூ. 1. 40 வீதம் கழக சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

**4. மைதா மற்றும் ரவை (கோதுமைப் பண்டங்கள்):**

குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ மைதாவும், 5 கிலோ ரவையும் கிலோ ஒன்றுக்கு முறையே ரூ. 1. 95 மற்றும் ரூ. 1.90 விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர மாவட்ட வழங்கல் அலுவலர் வழங்கும் தனி அனுமதியின் பேரில் கோதுமை பண்டங்கள் மொத்த வினியோகிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**5 மண்ணெண்ணெய்**

கழக கிட்டங்கிகளிலிருந்து கழக சில்லறை விற்பனை நிலையங்கள் மண்ணெண்ணெயை பெற்று குடும்ப அட்டை ஒன்றுக்கு, மாவட்ட தலைமை நகரசபை எல்லைக்குட்பட்ட கார்டு தாரர்களுக்கு 7 லிட்டர் வீதமும், ஏனைய இடங்களுக்கு 1 லிட்டர் வீதமும் வழங்கிறது.

**6. பாமோலின் எண்ணெய்.**

குடும்ப அட்டை ஒன்றுதகு பாமோலின் எண்ணெய் 2 கிலோ வீதம் கழக சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய அத்தியாவசியப் பொருட்களைத் தவிர. மளிகைச் சாமான்கள், பருப்பு வகைகள் மற்றும் அன்றாட தேவைக்கானப் பொருட்கள் நியாயமான விலையில் பொது மக்களுக்குத் தேவையான அளவு கழக சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**7. சிமெண்ட்.**

கன்னியாகுமரி மண்டலத்தில் 18, வாணிபக் கழக விற்பனை நிலையங்கள் மூலமாக, குடும்ப

அட்டைகளுக்கு 10%ம் மீதி 90% வட்ட ஆட்சியாளர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் வழங்கும் அனுமதியின்பேரில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான சிமெண்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஒதுக்கீடு செய்கிறார்கள். இந்த ஒதுக்கீடு சிமெண்டை சங்கர் நகர் சிமெண்ட் ஆலையிலிருந்து எடுக்கப்படுகிறது.

## 8. நெல்.

தஞ்சாவூர் மண்டலத்திலிருந்து கன்னியாகுமரி மண்டலத்திற்கு 2931 டன், 1980 குறுவை நெல் வந்து சேர்ந்துள்ளது. இந்த நெல்லைப் புழுங்கல் அரிசியாக மாற்றி பொதுஜன விநியோகத்திற்கு பயன்படுத்த 480 டன் நெல் அறவை மில்லுக்கு கொடுக்கப்பட்டுள்ளது,

## 9. அமுதம் சிறப்பு அங்காடி.

"அமுதம் சிறப்பு அங்காடி" 27—5—1977 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அங்காடியில் அரசு விலையில் பொதுமக்களுக்குத் தேவையான அரிசி விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர குழந்தை உணவுப் பொருட்கள் அழகு சாதனங்கள், தரமான மளிகைச் சாமான்கள் மற்றும் அன்றாட தேவைக்கான இதரப்பொருட்கள் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு தரமானப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்றும் இந்த அங்காடி, தேங்காய், புளி, கருப்புக்கட்டி போன்ற பொருட்களை இம்மாவட்டத்தில் உற்பத்தி நிறைந்த இடங்களில் இருந்துகொள்முதல்செய்து மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் விடுதிகளுக்கு நியாயமான விலையில் கடன் அடிப்படையில் மாதந்தோறும் வழங்கி வருகிறது.

இம்மண்டல அமுதம் சிறப்பு அங்காடி: மாநில அளவில் முதன்மை இடத்தைப் பெற்று வருகிறது.

## 10. உணவுப் பொருட்கள் விடுதி மற்றும் மருந்தகத்திற்கு வழங்கல்.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இம்மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், சிறைச்சாலை மற்றும் அரசு மாணவ மாணவியர் விடுதிகளுக்கு, அரிசி, கோதுமை மளிகைச் சாமான்கள், பருப்பு வகைகள் எண்ணெய் வகைகள். அழகு சாதனங்கள் போன்ற பொருட்களை ஒவ்வொரு மாதமும் கடனாக வழங்குகிறது.

## 11. காவல்துறை நல்வாழ்வுத்திட்டம்.

அரசு உத்தரவுப்படி அக்டோபர் 80 முதல் காவல்துறையினருக்கு கீழ்க்கண்ட அத்தியாவசியப் பொருட்கள் மலிவு விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 1. அரிசி | 5. ரவை |
| 2. சீனி | 6. பாமோலின் எண்ணெய் |
| 3. கோதுமை | 7. துவரம்பருப்பு |
| 4. மைதா. | 8. உழுந்தம் பருப்பு |

அக்டோபர் மாதம் ரூ. 1,13,655-க்கும், நவம்பர் மாதம் ரூ. 1,29,826-க்கும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. விநியோகம் செய்த பொருட்களின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பொருள் | மலிவு விலை (கிலோ விற்கு ரூ. பை. | விற்பனை செய்த அளவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அக்டோபர் '80 | | | நவம்பர் '80 | | |
| | | | டன். | கிலோ. | கிராம் | டன். | கிலோ. | கிராம் |
| 1, | அரிசி | 1 . 00 | 26 | 720 | 000 | 23 | 210 | 000 |
| 2. | சீனி | 1 . 45 | 2 | 263 | 250 | 2 | 918 | 250 |
| 3. | கோதுமை | 0 . 70 | 1 | 725 | 000 | 1 | 931 | 000 |
| 4. | மைதா | 1 . 00 | 0 | 639 | 250 | 1 | 381 | 250 |
| 5. | ரவை | 1 . 00 | 1 | 943 | 500 | 1 | 511 | 250 |
| 6. | பாமோலின்எண்ணெய் | 4 . 15 | 3 | 243 | 250 | 3 | 872 | 000 |
| 7. | துவரம்பருப்பு | 2 . 50 | 3 | 384 | 000 | 3 | 877 | 000 |
| 8. | உளுந்தம் பருப்பு | 2 . 00 | 3 | 427 | 000 | 3 | 875 | 000 |

இந்தத் திட்டத்தினால் அக்டோபர் மாதம் 1011 காவல்துறை பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

நவம்பர் மாதம் பயன்பெற்ற காவல்துறை பணியாளர்கள் 1088



## 12. முதியோருக்கு இலவச அரிசி வழங்கல் திட்டம்

முதியோர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ் 1—11—1980 முதல் 1167 அட்டைகளுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் வாரம் ஒன்றுக்கு 1 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட அரிசி இத்திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. முதல் வாரம் (1-11-80 முதல் 7-11-80 வரை) | 872 கிலோ |
| 2. இரண்டாம் வாரம் (8-11-80 முதல் 14-11-80) | 914 ,, |
| 3. மூன்றும் வாரம் (15-11-80 முதல் 21-11-80) | 900 ,, |
| மொத்தம் | 2686 ,, |

## 13. மாதாந்திர அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை விவரம்

(ஏப்ரல் 1979 முதல் டிசம்பர் 1979 வரை)

| வ. எண். | மாதம் | | அரிசி டன் | கோதுமை டன் | சீனி டன் | மைதா டன் | ரவை டன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஏப்ரல் | 1979 | 2471 | 18 | 23 | — | 1 |
| 2. | மே | 1979 | 4232 | 10 | 35 | — | — |
| 3. | ஜூன் | 1979 | 4226 | 2 | 43 | — | — |
| 4. | ஜூலை | 1979 | 5117 | 14 | 33 | — | — |
| 5. | ஆகஸ்ட் | 1979 | 6121 | 12 | 13 | 1 | 1 |
| 6. | செப்டம்பர் | 1979 | 4004 | 25 | 27 | — | — |
| 7. | அக்டோபர் | 1979 | 1946 | 27 | 35 | 1 | 1 |
| 8. | நவம்பர் | 1979 | 2285 | 28 | 147 | 3 | 3 |
| 9. | டிசம்பர் | 1979 | 2763 | 45 | 556 | 3 | 3 |

### ஜனவரி 1980 முதல் டிசம்பர் 1980 வரை.

| வ. எண். | மாதம் | | அரிசி டன் | கோதுமை டன் | சீனி டன் | மைதா டன் | ரவை டன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 1980 | 2576 | 25 | 578 | 2 | — |
| 2. | பெப்ருவரி | 1980 | 1603 | 35 | 408 | 3 | 3 |
| 3. | மார்ச் | 1980 | 1233 | 59 | 422 | 6 | 2 |
| 4. | ஏப்ரல் | 1980 | 1677 | 23 | 415 | 11 | 5 |
| 5. | மே | 1980 | 2567 | 41 | 612 | 78 | 9 |
| 6, | ஜூன் | 1980 | 2283 | 29 | 415 | 56 | 3 |
| 7. | ஜூலை | 1980 | 4076 | 46 | 303 | 60 | 5 |
| 8. | ஆகஸ்ட் | 1980 | 3743 | 22 | 618 | 69 | 5 |
| 9. | செப்டம்பர் | 1980 | 2527 | 60 | 483 | 76 | 8 |
| 10. | அக்டோபர் | 1980 | 1677 | 44 | 533 | 117 | 9 |

## 14. அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு விவரம்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளில் 27-11-1980ல் கையிருப்பில் இருக்கும் அத்தியாவசியப் பொருட்கள் கீழ் வருமாறு.

| வ. எண் | கிட்டங்கிப் பெயர் | புழுங்கல் அரிசி | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உயர்ரகம் டன் | முதல்ரகம் டன் | இரண்டாம்ரகம் டன் | மூன்றும்ரகம் டன் | மொத்தம் டன் |
| 1. | டிஸ்டிலறி கிட்டங்கி | 330 | 96 | 329 | 21 | 776 |
| 2. | கோணம் | 347 | 265 | 700 | 74 | 1386 |
| 3. | படந்தாலுமூடு | 126 | 86 | 112 | 8 | 332 |
| 4. | காப்புக்காடு | — | 2 | 280 | — | 282 |
| 5. | குளச்சல் | 58 | 2 | 80 | 9 | 139 |
| | மொத்தம் | 861 | 451 | 1491 | 112 | 2915 |

| | | சீனி டன் | கோதுமை டன் | மைதா டன் | ரவை டன் | நெல் டன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | டிஸ்டிலறி கிட்டங்கி | 187 | 37 | 2 | — | 1018 |
| 2. | கோணம் | 82 | 21 | 1 | 2 | 1520 |
| 3. | படந்தாலுமூடு | 30 | 8 | — | 1 | — |
| 4. | காப்புக்காடு | 25 | — | — | — | — |
| 5. | குளச்சல் | 47 | 1 | — | 2 | — |
| | மொத்தம் | 371 | 67 | 3 | 5 | 2538 |

## 15. நிதிநிலையும் செயல்முறைகளும்.

இம்மண்டலத்தில் கொள்முதலைவிட விநியோகமே கூடுதலாக இருப்பதாலும், இம்மண்டலத்திற்குத் தேவையான உணவு தானியங்களின் பெருமளவு வெளி மாவட்டங்களிலிருந்து மாற்றல் அடிப்படையில் இங்கு வருவதாலும், எப்போதும் செலவினத்தைவிட வருவாய் கூடுதலாகவே இருக்கும்.

கொள்முதல் செலவு, போக்குவரத்துச் செலவு பணியாளர் ஊதிய செலவு ஆகியவைகள் இம்மண்டலத்தின் முக்கிய செலவினங்கள். இந்தச் செலவினங்கள் காசோலை மூலமாக பாரத வங்கியிலிருந்து கொடுக்கப் படுகின்றன.

இந்நிறுவனத்தின் கீழுள்ள 85 சில்லறை விற்பனை நிலையங்கள் ஒரு கிராம நியாயவிலைக் கடை, 5 கிட்டங்கிகள் ஒரு அமுதம் பேரங்காடி இவைகளில் விற்றுமுதல் மூலம் வசூலாகும் தொகைகள் பாரத வங்கியிலேயே செலுத்தப் படுகின்றன.

ஏப்ரல் 79 முதல் அக்டோபர் 80 வரையுள்ள வருவாயும், செலவினங்களும் மாதவாரியாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் கணக்குகள், தலைமையலுவலகத் தணிக்கையாளர்களாலும், மாநிலக் கணக்காயராலும் ஆண்டுக்கு ஒருமுறை தணிக்கைச் செய்யப்படுகிறது.

இம்மண்டலத்திற்கென தனியாக லாப நஷ்டக்கணக்கு தயாரிப்பதில்லை. அது மாநில அளவில் வருடத்திற்கு ஒரு முறை தயாரிக்கப் படுகிறது.

16) மேலும் உணவுத்துறையில் பற்றாக் குறையும், பணவீக்கம் அதிகம் உள்ள கேரள மாநிலம் அருகில் இருப்பதால் உணவுப் பிரச்சனை இம்மாவட்டத்தில் ஒரு முக்கியமான பிரச்சனை. எனவே தரமான அரிசி தாராளமாக பொதுமக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் கிடைத்தால்தான் விலையைக் கட்டுப் பாட்டின்கீழ் வைக்க இயலும். இந்த நிலையில்



தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திறமையாக செயலாற்றி அரிசி விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி உணவுப் பிரச்சனை ஏதும் எழவிடாது தனது பங்கை திறமையாகச் செய்து வருகிறது.

### ஏப்ரல் '79 முதல் அக்டோபர் 1980 வரையுள்ள வரவு

| மாதம் | ரூ. பைசா |
|---|---|
| 4/79 | 45,38,246.07 |
| 5/79 | 70,34,552.67 |
| 6/79 | 74,14,760.35 |
| 7/79 | 90,55,643.40 |
| 8/79 | 1,01,54,672.83 |
| 9/79 | 74,25,749.12 |
| 10/79 | 39,79,806.63 |
| 11/79 | 51,44,571.78 |
| 12/79 | 73,89,624.25 |
| 1/80 | 67,24,820.75 |
| 2/80 | 46,00,060.92 |
| 3/80 | 41,08,031.57 |
| 4/80 | 47,94,562.15 |
| 5/80 | 63,48,900.85 |
| 6/80 | 63,74,466.45 |
| 7/80 | 91,95,946.01 |
| 8/80 | 90,72,750.60 |
| 9/80 | 69,86,919.33 |
| 10/80 | 57,72,662.40 |

## ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரையுள்ள

—x—

## செலவினங்கள்

| மாதம் | பணியாளர் ஊதிய செலவு | நிர்வாக செலவு | கொள்முதல் செலவு | மற்ற செலவுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ, பை | ரூ. பை | ரூ. பை | ரூ. பை | ரூ. பை |
| 4/79 | 1,88,793.75 | 89,248.66 | 5,42,016.89 | 4,99,381.17 | 13,19,440.47 |
| 5/79 | 1,28,707.90 | 98,824.14 | 5,33,151,55 | 5,61,089.04 | 13,21,772.63 |
| 6/79 | 1,33,735.55 | 2,84,893.34 | 1,02,474.26 | 12,75,876.88 | 17,96,080.03 |
| 7/79 | 1,86,176,25 | 6,85,294.15 | 9,52,818.65 | 3,43,228,87 | 21,67,517.93 |
| 8/79 | 1,30,571.75 | 2,13,753.44 | 8,69,518.47 | 7,38,630.52 | 19,52,474.18 |
| 9/79 | 1,16,548.40 | 1,21,933.54 | 8,05,713.70 | 4,03,647 71 | 14,47,843.35 |
| 10/79 | 2,21,753.90 | 1,47,350.56 | 4,95,986.30 | 4,67,521 99 | 13,32,612.75 |
| 11/72 | 1,42,668.95 | 1,75,652.25 | 7,41,971.79 | 1,23,806.68 | 11,84,099.67 |
| 12/79 | 1,33,565.90 | 1,75,443.68 | 6,50,418.52 | 6,78,123.46 | 16,37,621.56 |
| 1/80 | 1,24,654.10 | 2,51,356.77 | 4,78,022.87 | 7,80,424.21 | 16,34,457.95 |
| 2/80 | 1,41,708.01 | 2,57,042.79 | 5,64,222 79 | 64,246.68 | 10,27,220.24 |
| 3/80 | 1,61,795.82 | 2,31,772.88 | 8,00,502.47 | 91,948.97 | 12,86,020.14 |

## ஏப்ரல் 1980 முதல் அக்டோபர் 1980

### வரையுள்ள செலவினங்கள்

| மாதம் | பணியாளர் ஊதிய செலவு | நிர்வாக செலவு | கொள்முதல் செலவு | மற்ற செலவுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. பைசா | ரூ. பைசா | ரூ. பைசா | ரூ. பைசா | ரூ. பைசா |
| 4/80 | 1,64,885,05 | 1,26,833.78 | 6,84,304.80 | 5,59,671.76 | 15,35,694,67 |
| 5/80 | 1,42,119.95 | 2,28,181.80 | 9,09,938.85 | 4,07,341.19 | 16,87,581.79 |
| 6/80 | 1,59,583.65 | 1,43;229.68 | 4,75,674.63 | 6.38,160.27 | 14,16,848.23 |
| 7/80 | 1,62·526.80 | 4,54,550.83 | 9,09,716.28 | 6,95,813.11 | 22,22,607.02 |
| 8/80 | 1,57,053.60 | 3,99,417.12 | 8,00.094.70 | 4,79,635.77 | 18,36,201.19 |
| 9/80 | 1,69,970 80 | 3,49,903.79 | 7,78,404.49 | 2,30,494.50 | 15,28,773.58 |
| 10/80 | 2,61,706.80 | 1,45,110.98 | 8,07,032.15 | 3,62,755.21 | 15,76,605.14 |

# அரிசன நல முன்னேற்றம்

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களை உள்ளடக்கி 1964 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வியாபித்துள்ளது. இங்கு 12.22 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இதில் 47.536 பேர் அரிசனங்களாகும். 2,862 பேர் பழங்குடியினங்களைச் சார்ந்தவராவர். மொத்த மக்கள் தொகையில் அரிசனங்கள் 4.14 சதவீதமும் பழங்குடி மக்கள் .023 சதவீதமும் ஆகும். அரிசனங்கள் 341 கிராமங்களிலும் பழங்குடியினம் 47 குடியிருப்புகளிலும் வசித்து வருகின்றனர்.

கல்வியைப் பொறுத்தமட்டில், அரிசனங்களில் 50 சதவீதத்தினர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். கல்விச்சிறப்பினால் இம்மாவட்டத்தில் தீண்டாமை உணர்வு நீங்கியுள்ளது எல்லா வகையான பொதுவிடங்களிலும் அரிசனங்கள் சாதி பாகுபாடின்றி பயன் பெறுகின்றனர்.

திருவிதாங்கூர் கொச்சி அரசுக்கீழிருந்த இம்மாவட்டம் 1956-ம் ஆண்டு முதல் தமிழகத்துடன் இணைந்தது. அரிசனங்கள் பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழக அரசு பற்பல திட்டங்களை தீட்டி செயலாற்றி வருகிறது. சிறப்பாக வீட்டுமனைகளை அளித்தல் வீடுகள் அமைத்துக் கொடுத்தல், பாதைகளைச் செப்பனிடுதல் கல்வி மேம்பாடு, கல்வி உதவித் தொகை வழங்குதல், சமூக நல விடுதிகள் அமைத்தல், கிணறுகள் தோண்டுதல், கிணறுகளை ஆழப்படுத்தல் இடுகாடு, சுடுகாடு வசதி செய்தல் விவசாய மான்யம் தொழிற் கருவிகள் வழங்குதல், சிறந்த சிற்றூர்களுக்கு பரிசு வழங்குதல் சுத்தமான குடியிருப்புகளுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்குதல் பொருளாதார சுகாதார வசதிகள் செய்தல், இவைபோன்ற திட்டங்களை இத்துறை செயல் படுத்திவருகிறது,

## 1. வீட்டுமனை வசதி அளித்தல்:-

இது காறும் 9.98 லட்ச ரூபாய் செலவில் 137.84 ஏக்கர் நிலம் எடுப்பு செய்யப்பட்டு 2610 அரிசனக்குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2. வீடு கட்டும் திட்டம்

மலிவு வீடு கட்டும் திட்டத்தின் கீழும், ஜெயந்தி கிராமத் திட்டத்தின் கீழும் ஆத்தியடி, லட்சுமிபுரம், ஆறுமுகபுரம், செம்பொங்கரை, கலுங்கடி, புளியடி, விளாங்காடு ஆற்றிங்கரை, பத்தரை பூட்டேற்றி, கோழிப்போர்விளை கீழத்தேரூர், வாலறை, மஞ்சாலுமூடு கரிஞ்சாங்கோடு ஆகிய அரிசன குடியிருப்புகளில் 448 வீடுகள் கட்டி முடித்து வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரிசன வீட்டுக் கழகத்தின் வாயிலாக கடந்த ஐந்து ஆண்டுகளாக 741 வீடுகள் கட்டி முடித்து வழங்கப் பட்டுள்ளன. மலைவாசிகளான பழங்குடியினருக்கென 40 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. கடலோர மீனவருக்காக சின்னமுட்டம் பெரியவிளை முள்ளூர் துறை ராமன்துறை கேசவன் புத்தன் துறை, புத்தன் துறை பொழிக்கரை போன்ற கடலோரக் கிராமங்களில் 521 வீடுகள் கட்டி முடித்து வழங்கப்பட்டுள்ளன.

## 3. கல்வி:-

அரிசன பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டுக்காக பேச்சிப்பாறையில் ஒரு தங்கிப்பயிலும் மேல்நிலைப் பள்ளியும், பத்துக்காணியில் தங்கிப்பயிலும் நடுநிலைப் பள்ளி ஒன்றும் வாளயத்துவயல், ஒருநூறும் வயல் மணலோடை ஆகிய இடங்களில் மூன்று தங்கிப் பயிலும் ஆரம்பப் பள்ளிகளும், ஓராசிரியர் பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. பேச்சிப்பாறை, பத்துக்காணி, மணலோடை, ஒருநூறும் வயல், வாழயத்து வயல், மணமணடி, சித்தரங்கோடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஏழு பள்ளிகளிலுமாக 2490 மாணவ மாணவியர் கல்வி அறிவு பெற்று வருகின்றனர்.

## 4. விடுதிகள்:

கல்லூரிகளிலும் இதர பள்ளிகளிலும் பயின்றுவரும் மாணவருக்கென ஏழு விடுதிகளும மாணவியருக்கென ஏழு விடுதிகளுமாக இம்மாவட்டத்தில் 14 விடுதிகள் நடைபெற்று வருகின்றன. இவை கன்னியாகுமரி, நாகர்கோவில், பூதப்பாண்டி, தக்கலை, மார்த்தாண்டம், குழித்துறை, பேச்சிப்பாறை, பத்துக்காணி, அருமனை, ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன. இவற்றில் 697 மாணவ மாணவியர் தங்கி பயன் பெறுகின்றனர். கல்லூரி மாணவ மாணவியர் விடுதி பட்டதாரி ஆசிரியர்களாலும் இதர விடுதிகள் இடைநிலை ஆசிரியர்களாலும் நிர்வாகிக்கப் படுகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கு இலவச உணவு உறையுள் வழங்கப் படுவதோடு ஆண்டிற்கிருமுறை சீருடைகள் இலவசமாக வழங்கப் படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு



விடுதி காப்பாளர் ஒருவருக்கும் விடுதி காப்பாளினி ஒருத்திக்கும் அவர் தம் உழைப்பு அடிப்படையில் சிறப்புப் பரிசாக ரூ. 200/- வழங்கப் பட்டு வருகிறது.

## 5. இதர நிறுவனங்கள்:

### 1. இரவு பள்ளிகளும், நூலகங்களும்:

திருவிதாங்கூர் கொச்சி அரசினர் நடத்தி வந்த 8 இரவு பள்ளிகளும் 23 நூலகங்களும் தொடர்ந்து செயல் பட்டு வருகின்றன.

### 2. சமூக நல விடுதிகள்:

சுசீந்திரத்தை அடுத்த கற்காட்டில் ஒன்றும் தாழக்குடியில் ஒன்றுமாக இரு சமூக நல விடுதிகள் இயங்கி வருகின்றன. சுற்றுப்புறங்களிலுள்ள 2½ முதல் 5 வரையுள்ள சிறுவர் சிறுமியருக்கு பாலர் கல்வியும் முதியோருக்கு நூல் நூற்பு தையல் கல்வியும் புகட்டப் படுகிறது. சிறுவர் சிறுமியருக்கு இலவச மதிய உணவும் மாலை நேரங்களில் வானொலிப் பெட்டி மூலம் செவிக்குணவும் வழங்கப்படுகின்றது. தீபாவளி பொங்கல் ஆகிய இரு பண்டிகை தினங்களிலும் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

## 6. குடிநீர் வசதிகள்:

அரிசன கிராமங்களில் 109 குடிநீர்க்கிணறுகள் இதுவரை வெட்டப்பட்டுள்ளன.

இடுகாடு இல்லாத கிராமங்களுக்கு நில ஆர்ஜிதச் சட்டங்களின் கீழ் 2. 30 ஏக்கர் நிலம் ரூ. 22, 300/- செலவில் ஆர்ஜிதம் செய்து அரிசனக் குடியிருப்புக்களுக்கு பாதைகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 1. 75 ஏக்கர் நிலம் 21,338 செலவில் ஆர்ஜிதம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

## 7. தொழில் நுட்ப உதவிகள்:

தொழில் நுட்ப வினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தையல் இயந்திரங்கள், சலவைத் தொழிற் கருவிகள், சிகையலங்காரக் கருவிகள், தச்சுவேலைக்கான கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதுவரை 258 தையல் இயந்திரங்களும், 140 சலவைத் தொழிற் கருவிகளும், 28 சிகையலங்காரக் கருவிகளும் 17 தச்சு வேலைக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 8. விவசாய மானியம்:

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அரிசன பழங்குடி மக்களை முன்னேற்றும் வகையில் தேர்ந்தெடுத்த நபருக்கு உழவுமாடு, விதை, விவசாயக் கருவி ஆகியவை மானியமாக வழங்கப் படுகின்றது. இதுவரை 958 ஜதை உழவு மாடுகள் தரப்பட்டுள்ளன.

இதுவரை 15 விவசாயக் கிணறுகளுக்கு மானியமாக மட்டும் ரூ. 22, 750– செலவிடப் பட்டுள்ளது.

## 9. (1) தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பரிசு வழங்குதல்

தீண்டாமையின் தீமைகளை பிரச்சாரப் படுத்தும் வகையில் அரிசன மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஆண்டு தோறும் இரண்டு கிராமங்களை தேர்வு செய்து முதற் பரிசாக ரூ. 1000–ம் இரண்டாம் பரிசாக ரூ. 500–ம் வழங்கப்படுகிறது. இதுவரை 36 கிராமங்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளன.

## 2. தூய்மையான குடியிருப்புக்குப் பரிசு

வட்டத்திற்கு ஒன்று வீதம் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கும் அரிசனக் குடியிருப்புக்கு பரிசாக ரூ. 400/- பெறுமான வானொலிப் பெட்டி வழங்கப்படுகிறது. இதுவரை 72 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன.

## 10 (1) பொருளாதார முன்னேற்ற திட்டம்:

பழங்குடிப் பெண்டிர் தையல் கலை பயிலவும் துணி நெசவுத் தொழில் பயிற்சி பெறவும் பேச்சிப்பாறையில் ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. இந்நிலையத்தில் பயிலும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ. 30/– பயிற்சி உதவித் தொகையுடன் இரண்டாண்டுகள் பயிற்சியளிக்கப்படும் பயிற்சி நிறைவுறும் போது ஒரு தையல் இயந்திரம் மான்யமாக வழங்கப் படுகின்றது

## 10 (2) கலப்புத் திருமணப்பரிசு:

1973 முதல் கலப்புத்திருமண தம்பதியருக்கு ரூ 200– மான்யமும் தங்கப் பதக்கத்துடன் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தது 40 தம்பதியர் இத்திட்டத்தினால் பயனடைந்தனர்.

1979 ஆண்டு முதல் கலப்பு திருமண தம்பதிகளுக்கு 8 கிராம் எடையுள்ள தங்கச் சங்கிலியும், ரூ. 300 ரொக்கமாகவும் ரூ. 4000 சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது. அரிசன, பழங்குடி மக்களும் மதமாறிய அரிசனங்களும் இதனால் பயனடைவர்.

## 10 (3) வட்டியில்லாத சிறு வியாபாரக் கடன்:

அரசால் அமைக்கப் பட்ட 27 வகை சிறு வியாபாரங்களுக்கும் ஏற்கனவே உள்ள தொழில் அபிவிருத்தி செய்யவும் அரிசனங்களுக்கும் மத வேறுபாடின்றி வட்டியில்லாத கடன் வழங்கப் படும் 100 மாதத் தவணைகளில் இக்கடன் வசூலிக் கப்படும். இதுவரை 204 நபர்களுக்கு ரூ. 95 650 வழங்கப் பட்டுள்ளது.

## 19 (4) சுய வேலை வாய்ப்புத்திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் குறைந்த வட்டியில் தகுந்த பொறுப்பின் மீது கடன் வழங்கப்படும். இதுவரை 71 நபர்களுக்கு ரூ. 39, 875 கடனாக வழங்கப் பட்டுள்ளது.

## 10 (5) ஈமக்கிரியைகளுக்கான உதவி:-

இறந்தோரின் ஈமச்சடங்குக்காக ரூ. 50/- மானியமாகக் கொடுக்கப்படும். இத்திட்டத்தில் இதுவரை 332 குடும்பங்கள் பயனடைந் துள்ளன. நடப்பு ஆண்டில் ரூ. 9000/- இதற் கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 42 குடும்பங்கள் பயன் பெற்றன.

## 11. கல்வி உதவித்தொகை:

இம்மாவட்டமாகிய கன்னியாகுமரி மாவட்டம் முன்பு திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தோடு இணைந்திருந்தது. 1-11 1956-ல் திருவிதாங்கூர் கொச்சியி லிருந்து தனியாகப் பிரிந்து சென்னை மாகாணத் தோடு (தமிழ் நாட்டில்) சேர்ந்து இயங்கி வரு கிறது. 1974--ஆண்டு வரை ஒரே ஒரு மாவட்ட நல அதிகாரி நியமிக்கப்பட்டு பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் கவனிக்கப் பட்டு அவர்களின் குறைகள் களையப்பட்டு வந்தன. 1974-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பிறகு பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகள் நாளுக்குநாள் வளர்ந்து வரவே அவைகளைச் செவ்வனே செய்து முடிக்கவேண் டுமென்ற நல்லெண்ணத்தில் நமது அரசு பின் தங்கிய மக்களின் கோரிக்கைகளை கவனிக்க தனியாக மாவட்ட பின்தங்கிய நல அலுவலர் ஒருவரையும், அரிசன மக்களின் கோரிக்கைகளை கவனிக்க மாவட்ட அரிசன நல அலுவலர் ஒருவரையும் நியமனம் செய்துள்ளது.

சென்ற 1956-ம் ஆண்டு முதல் 1973 இறுதி வரை இம்மாவட்டத்தில் 1 முதல் 10-ம் வகுப்பு வரை பயின்ற 1,87,000 அரிசன மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 17,75,000/- கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் கல்லூரியில் பயின்ற 16,750 அரிசன மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 10,54,000 கல்வி உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

1976-77-ம் கல்வி ஆண்டுக்கு முன்பு தகுதி வாய்ந்த எல்லா மாணவ மாணவியர்களுக்கும் கல்வி உதவித் தொகை பணமாக வழங்கப்பட் டுள்ளது. ஆனால் 1977-78-ம் கல்வி ஆண்டிலி ருந்து 1 முதல் 10-ம் வகுப்பு வரையுள்ள தாழ்த் தப்பட்ட மலை ஜாதி மாணவ மாணவியர் களுக்கு அவர்களின் பெற்றோர்களின் வருட வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் இலவசமாகப் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 518 துவக்கப் பள்ளி நடுநிலைப்பள்ளி, உயர் நிலைப்பள்ளிகள் உள்ளன.

சென்ற ஆறு ஆண்டுகளாக 1 முதல் 10-ம் வகுப்பு வரையுள்ள அரிசன மாணவமாணவியர் களுக்கு வழங்கப்பட்ட கல்வி உபகாரச் சம்பளமும் அதனால் பயனடைந்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும் பின் வருமாறு:-

| கல்வி ஆண்டு | வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை | பயனடைந்த மாணவமாணவி யர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1974-75 | 1,74,508.00 | 15150 |
| 1975-76 | 1,64,521.00 | 15840 |
| 1976-77 | 1,95,641.00 | 16071 |
| 1977-78 | 2,29,974.10 | 18495 |
| 1978-79 | 2,55,780.00 | 23560 |
| 1979-80 | 2,70,092.50 | 24321 |

மேல்நிலைப்பள்ளி கல்லூரி இவைகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு அவர்களின் பெற்றோர்களின் வருட வருமான அடிப் படையைக்கொண்டு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர தட் டெழுத்து சுருக்கெழுத்து, தையல் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்படுவதுடன் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிலும் அரிசன மாணவ மாணவியர்களைத் தனியே ஊக்குவிப்பதற்காக வருடா வருடம் 75 மாணவ மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு உபகாரச் சம்பளம் வழங் கப்பட்டு வருகிறது.

சென்ற ஆறு ஆண்டுகளாக கல்லூரி, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உபகாரச் சம்பளமும் அதனால் பயனடைந்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும் பின் வருமாறுள்ளது.



| கல்வி ஆண்டு | வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை | பயனடைந்த மாணவ மாண வியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1975-75 | 3,68,850,00 | 1310 |
| 19 5-76 | 4,09,490.00 | 1376 |
| 1976-77 | 4,52,460.00 | 1408 |
| 1977-78 | 4,80,645.00 | 1498 |
| 1978 79 | 5,12,987.00 | 1547 |
| 1979-80 | 7,20,190.00 | 2278 |

## போஸ்ட் மெட்ரிக்:-

நடப்புக் கல்வி ஆண்டில் (1980-81) மேல் நிலைப்பள்ளி கல்லூரி மற்றும் தட்டெழுத்து சுருக்கெழுத்து, தையல் வகுப்புகளில் பயிலும் அரிசன மாணவ மாணவியர்களுக்கு இது நாள் வரை ரூபாய் 2,52;424.00 வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின் வருமாறு

| வ. எண். | தலைப்பு | ஒதுக்கீடு | செலவு செய்யப் பட்ட தொகை | பயனடைந்த மாணவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | மத்திய அரசு உதவித் தொகை | 4,29,000.00 | 2,07,514.00 | 450 |
| 2 | மாநில அரசு உதவித் தொகை | 4,70,000.00 | 44,910.00 | 351 |
| 3. | தட்டெழுத்து சுருக்கெழுத்து | 8,000.00 | 460.00 | 10 |
| | | 9,07,000.00 | 2,52,884.00 | 811 |

## ப்ரீ மெட்ரிக்:

நடப்புக்கல்வி ஆண்டில் (1980-81) 1 முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் அரிசன மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் கீழ்க் கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

| புத்தகங்கள் வழங்கப்பட்ட பள்ளியின் எண்ணிக்கை | பயனடைந்த மாணவ மாண வியர்களின் எண்ணிக்கை | இலவச புத்த கத்தின் விலை மதிப்பு |
|---|---|---|
| 582 | 21156 | 3,38,621.00 |

# பழங்குடி மக்களுக்கான முன்னேற்ற திட்டங்கள்

இம்மாவட்டத்தில் பழங்குடியினர் 2576 நபர் கள் 656 குடும்பங்களாக 47 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இவர்களுக்கு வனத்துறையி னர் குடும்பம் ஒன்றுக்கு 5 ஏக்கர் நிலம் ஒதுக் கீடு செய்துள்ளனர்.

பழங்குடியினர் பொதுவாக காணிக்காரர் என்றழைக்கப்படுவார்கள். அவர்கள் மலைப்பாங் கான பகுதிகளில் வசிக்கிறார்கள். விவசாயமே இவர்களின் முக்கியத் தொழில் முக்கிய உணவு மரவள்ளிக் கிழங்கு. அவர்கள் 47 குடியிருப்பு களில் வசிக்கின்றனர். அவர்களின் மொத்த ஜனத்தொகை 2576. (656 குடும்பங்களாக வாழ் கின்றனர். அவர்களுக்கு 1257.38 ஹெக்டர் பூமி ஒதுக்கப் பட்டுள்ளது. வரி ஏதும் செலுத்தாமல் குடியிருக்க வகை செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவில் கூட்டுறவு பிரதம வங்கி வாயிலாக 253 காணிகளுக்கு தலா ரூ 500/- விவசாயக் கடனாக வழங்கப் பட்டுள்ளது. ரூ 300- பெறுமான விவசாயக் கருவிகள் 23 குடும்பங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. 305 ஜதை உழவு மாடுகள் இலவச மாக வழகப்பட்டுள்ளன. இதுவரை 10 குடிநீர் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. பேச்சிப்பாறை பத்துக்காணி மனலோடை ஆகிய இடங்களில் பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் பள்ளியும் பேச்சிப்பாறை பத்துக்கானி ஆகிய இடங்களில் மாணவியர் விடுதிகளும் உள்ளன. வாழயத்து வயல், ஒருநூறாம் வயல் ஆகிய மலைப் பகுதிகளில் பழங்குடியினருக்கான பள்ளிகள் செயல்படுகின்றன.

நடமாடும் மருத்துவமனை ஒன்று பிரதி ஞாயிறுதோறும் பேச்சிப் பாறையில் வாழும் பழங்குடியினரைப் பரிசோதனை செய்து மருத்துவ உதவி வழங்கி வருகிறது. பழங்குடி மக்களுக்காக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைப்பதற்கான திட்டம் அரசு பரிசீலனை யில் உள்ளது. அவர்களின் கல்வி வசதிக் காகவும், குடிநீர் வசதிக்காகவும், விவசாயத் திற்காகவும் தொழில் நுட்ப அறிவு வளர்ச்சிக் காகவும் மருத்துவ வசதிக்காகவும் பாதை வசதிகளுக்காகவும் அரசு முழு மூச்சுடன் செயற் பட்டு வருகிறது.

## 1980-81-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடும் செலவினங்களும்

| வ. எண் | தலைப்பு | ஒதுக்கீடு ரூ. | செலவு செய்யப்பட்டது ரூ. |
|---|---|---|---|
| 1. | வீட்டுமனை வழங்குதல் | 2,05,000 | 93,200 |
| 2 | பாதை அமைப்பு | 1,67,000 | 23,800 |
| 3. | பஞ்சாயத்து, வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு | 10,000 | — |
| 4. | கல்வி உதவித் தொகை | | |
| | மத்திய அரசு உதவித்தொகை | 4,89,000 | 2,07,514 |
| | மாநில அரசு உதவித் தொகை | 4,70,000 | 44,910 |
| 5. | தட்டெழுத்து, சுருக்கெழுத்து | 8,000 | 460 |
| 6. | தேர்வு செய்த கிராமத்துக்குரிய பரிசு | 1,500 | — |
| 7. | சுத்தமாகப் பராமரிக்கப் பட்ட அரிசன குடியிருப்புக்கு பரிசு | 1,600 | — |
| 7. | தீண்டாமை ஒழிப்பு வார விழா | 2,000 | — |
| 9. | கலப்பு திருமண பரிசு எதிர் பார்க்கப் பட்டது | | — |
| 10. | முதல் மாணவருக்கு பரிசு | 1,400 | — |
| 11. | உழவு மாடு மான்யம் | 6,200 | — |
| 12. | தொழில் கருவி மான்யம் எதிர் பார்க்கப் படுகிறது | | — |
| 13. | விவசாயக் கிணறு | 12,000 | — |
| 14. | குடிநீர் கிணறு | 54,000 | 3,000 |
| 15. | விடுதி மாணவருக்கு ஆடை வழங்குதல் | 99,000 | 59,000 |
| 16. | பாடப் புத்தகங்கள் | 21,200 | 1,000 |
| 17. | மதிய உணவு | 2,500 | 2,500 |
| 18. | விடுதிகள்:— | | |
| | 1. உணவு வகைச் செலவினம் | 5,18,000 | 2,14,000 |
| | 2. பகுதி நேர ஆசிரியர் நியமனம் | 2,000 | — |
| | 3. குடிசைத் தொழில் பயிற்சி | 19,400 | 7,400 |
| 19. | பள்ளிக்கட்டிட நிதி | 5,000 | 4,800 |
| 20. | சமூக நல விடுதி | 13,000 | 5,000 |



# பிற்பட்டோர் நலத்துறை

**பொது:-**

பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரகம் சென்னை என்ற துறை உருவான சமயத்தில் அரசு ஆணை எண் 387 சமூக நலத்துறை தேதி 17—5—74-ன்படி முனநாள் திருவிதாங்கூர் மாவட்ட நலத்துறை என்ற அமைப்பிலிருந்து மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை என்றதொரு பிரிவு புதியதாக துவங்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் 1—6—74-ம் தேதியன்று பணி ஏற்ற நாளிலிருந்து இந்தத்துறை தனியாக இயங்கி வருகின்றது. மாவட்டப் பிரிவு, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி மேற்பார்வையில் இருந்து வருகின்றது.

இம்மாவட்டத்தில் பிற்பட்டோர் மக்கட் தொகையில் 52% உள்ளனர். அவர்களில் கீழ்க் கண்ட சாதியினர் முக்கிய அங்கம் வகிக்கிறார்கள்.

1) இந்து — நாடார்
2) கிறிஸ்தவ — நாடார்
3) முஸ்லிம் — லெப்பை
3) முக்குவர்
5) கிருஷ்ணன் வகை மற்றும்
6) கேரள முதலி

கன்னியாகுமரி மாவட்டம் கல்வி மேம்பாடு அடைந்தது என்பது தெரிந்ததே. இம் மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பினரும் தாழ்த்தப் பட்ட வகுப்பினரும், ஆதிவாசிகளும் கூட கல்வியில் மேம்பாடு அடைந்துள்ளனர். பொதுவாக மற்ற மாவட்டத்தினரைக் காட்டிலும் இம் மாவட்ட மக்கள் சமூக, கல்வி, மற்றும் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் உள்ளனர், பெரும்பாலானவர்கள் விவசாயக்கூலிகளாகவும் சிலர் சொந்தத்தில் விவசாயம் செய்பவர்களுமாக உள்ளனர்.

பிற்பட்ட வகுப்பினரைக்கல்வியிலும், பொருளாதாரத்திலும் மேம்பாடு அடையச் செய்ய கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் செயல் படுத்தபட்டு வருகின்றன.

1. [illegible] ந்த வகுப்பினருக்கு கல்வி [illegible] ங்கல்:

**அ. பள்ளிப்படிப்பு உதவித்தொகை:-**

1977-78 க்கு முன்பு பிற்பட்ட / விமுக்த வகுப்பினை சார்ந்த பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை பணமாக வழங்கப்பட்டுவந்தது விமுக்தவகுப்பினர் 6-ம்வகுப்பிலிருந்து பிற்பட்ட வகுப்பினர் 9-ம் வகுப்பிலிருந்தும், உதவித் தொகை பெறத் தகுதியுள்ளவர். தமிழக அரசு பள்ளி இறுதி வகுப்பு வரை இலவசமாகக் கல்வி வசதி வழங்குவதால், இந்த உதவித் தொகை புத்தகம் வாங்கவும் சிறப்புக்கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்தவும் கொடுக்கப்பட்டு வருகின்றது.

1977-78-ம் ஆண்டிலிருந்து பணமாக கொடுத்து வந்த உதவித் தொகை நிறுத்தப் பட்டு, மாவட்டத்தில் உள்ள வட்டார பாட புத்தகக் குழுவினரின் முகவரால் (பெரும்பாலும் பகவதி கூட்டுறவுச் சிறப்பு பேரங்காடி வழி புத்தகங்கள் தகுதியுடைய மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு, அதற்குரிய தொகை இத்துறையினர் மூலம் அளிக்கப் படுகின்றது. இதே போன்று கல்வி நிறுவனங்களுக்கு தகுதியுடைய மாணவர்களிடமிருந்து சிறப்புக் கட்டணம் வசூலிக்க வேண்டாமென்றும், அதற்குரிய ஈடு தொகையை பட்டியல் மூலம் இத்துறையிடமிருந்து பெறும்படி அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. ஆண்டிற்கு ரூ. 2500/-க்கு குறைவாக வருமானம் உடையவர் இந்த உதவிபெறத் தகுதியுடையவராவர் கடந்த ஆறு ஆண்டுக்காலமாக வழங்கப்பட்ட உதவித் தொகை விபரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| வருடம் | வழங்கப்பட்ட உதவித் தொகை | பயன்பெற்ற மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) 1974-75 | 14,506 | 7150 |
| 2) 1975-76 | 1,59,758 | 535 |
| 3) 1976-77 | 1,40,884 | 4696 |
| 4) 1977-78 | 83,918 | 3599 |
| 5) 1978-79 | 63,563 | 389 |
| 6) 1979-80 | 28,034 | 2523 |

**ஆ) பட்டப்படிப்பு உதவித்தொகை:**

தகுதிபெற்ற பிற்பட்ட/விமுக்த வகுப்பினருக்கு பட்டப் படிப்பு உதவித்தொகை வழங்கப் பட்டு வருகின்றது. இந்த உதவித்தொகை

கல்லூரி படிப்பிற்கும், மேல் நிலை பள்ளி படிப்பிற்கும், பட்டப் படிப்பிற்கும், முதுநிலைப் பட்ட படிப்பிற்கும் தொழிற்கல்வி படிப்பிற்கும், தொழில் நுட்பக் கல்விக்கும், மற்றும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தையல் கலை பூ வேலைப்பாடு ஆகிய படிப்பிற்கும், வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உதவித்தொகையில் புத்தகப் பணம், தனிக் கட்டணம், படிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் ஆகியவை அடங்கும். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் உண்டி, உறையுள் கட்டணமும் சேர்த்து உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளில் வழங்கப்பட்ட பட்டப்படிப்பு உதவித்தொகையும் பயனடைந்த மாணவர் விபரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம் | வழங்கப்பட்ட உதவித் தொகை | பயனடைந்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) 1974–75 | 7,13,684 | 3468 |
| 2) 1975–76 | 6,94,230 | 3371 |
| 3) 1976–77 | 6,31,244 | 3056 |
| 4) 1977–78 | 6,41,343 | 3249 |
| 5) 1978–79 | 6,12,220 | 3104 |
| 6) 1979–80 | 5,31,956 | 4145 |

## II. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குரிய விடுதி பராமரிப்பு:–

*ஆ) கல்லூரி விடுதி:-*

பிற்பட்ட வகுப்பு மாணர்களுக்கு இலவச உண்டி, உறையுள் வழங்க இம்மாவட்டத்தில் மூன்று கல்லூரி மாணவியர் விடுதி கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

| வரிசை எண். | விடுதியின் பெயர் | துவங்கிய வருடம் | அனுமதித்த மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்லூரி மாணவியர் விடுதி நாகர்கோவில் | 1971 | 50 |
| 2. | கல்லூரி மாணவியர் விடுதி குழித்துறை | 1973 | 50 |
| 3. | கல்லூரி மாணவியர் விடுதி அகஸ்தீஸ்வரம் | 1974 | 50 |

மேற்படி விடுதிகளில் கீழ்க்கண்ட விழுக்காடுபடி மாணவிமர் தேர்வு செய்து அனுமதிக்கப்படுகின்றார்கள்.

1) பிற்பட்ட வகுப்பினர் .... 65%
2) தாழ்த்தப்பட்ட, ஆதிவாசி வகுப்பினர் .... 25%
3) ஏனையோர் .... 10%

விடுதியில் அனுமதிக்கப்படும் மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 2600/-க்கு குறைவாக இருத்தல் வேண்டும். மாதாந்திரப் உண்டித் தொகை ரூ. 65/-ம், ஏனைய செலவு ரூ. 1/–ம் அனுமதிக்கப்படுகின்றது. மாணவிக்குத் தனியாக மாதம் ஒன்றிக்கு ரூ. 1/–ம் அழகு சாதனம் வாங்கவும் அனுமதிக்கப்படுகின்றது. விழாக் காலங்களில் சிறப்பு உணவும் வழங்கப்படுகின்றது. சாதாரணமாக காலை உணவு இட்லி, பொங்கல், உப்புமா காப்பியுடன் வழங்கப்படுகின்றது. மதியமும் இரவும் முழுசாப்பாடும் வழங்கப்படுகின்றது. மாலையில் சுண்டல் பயறு காப்பியும் வழங்கப்படுகின்றது. இறைச்சி வாரம் ஒரு முறையும் முட்டை, வாரம் இரு முறையும் வழங்கப்படுகின்றது பட்டப் படிப்பும் ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர் ஒருவர் கல்லூரி மாணவியர் விடுதியில் பராமரிப்பாளராக நியமிக்கப்பட்டு அவரது பொறுப்பில் விடுதி இயங்கி வருகின்றது. கடும் ஒழுங்கும் கட்டுப்பாடும் விடுதியில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. மருத்துவச்சோதனை மாதம் ஒரு முறை செய்யப்படுகின்றது பாடங்களில் நலிவுற்ற மாணவியருக்கு தனி பயிற்சி வகுப்புகள் பராமரிப்பாளரால் நடத்தப்பட்டு வருகின்றன.

### ஆ. பள்ளி மாணவியர் விடுதி:-

இரு பள்ளி மாணவியர் விடுதிகள் ஒவ்வொன்றிலும் 50 மாணவியரைக் கொண்டு கீழ்க் கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

| வரிசை எண் | விடுதியின் பெயர் | துவங்கிய வருடம் | அனுமதித்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பள்ளி மாணவியர் விடுதி குளச்சல் | 1978 | 50 |
| | பள்ளி மாணவியர் விடுதி குலசேகரம் | 1980 | 50 |



விடுதியில் பள்ளி மாணவியருக்கு மாதம் ரூ. 45/- உண்டி செலவாகவும் ரூ. 1/– அழகு சாதனம் வாங்கவும் அனுமதிக்கப்படுகின்றது. பள்ளியிறுதி வகுப்பும், ஆசிரியர் பயிற்சியும் பெற்ற ஒருவரது பராமரிப்பில் விடுதி இயங்கி வருகின்றது தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளின் போது விடுதி மாணவியருக்கு இரண்டு ஜோடி சீருடைகள் (சேலை, தாவணி பாவாடை, ஜம்பர் முதலியன) இலவசமாக ஒவ்வொரு ஆண்டும், வழங்கப்பட்டு வருகின்றன.

### இ. நன்ருகப் பராமரிக்கும் விடுதிக்கு பரிசு வழங்கல்

ஆண்டுதோறும் நன்ருகப் பராமரிக்கப்படும் பராமரிப்பாளருக்கு ஊக்கத் தொகையாக ரூ. 200/– வழங்கப்படுகின்றது. விடுதி மாணவியரின் கல்வித் தரம், நல்லொழுக்கம் கடைபிடித்தல், பொதுத் தேர்வில் வெற்றி விழுக்காடு முதலியவற்றின் அடிப்படையில் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது ஊக்கத் தொகை பணமாக மாவட்டத்திலேயே நன்ருக பராமரிக்கப்பட்ட விடுதிகளில் முதன்மையானவருக்கு வழங்கப்படுகின்றது.

## 3. தும்பு பயிற்சி நிலையம் குழித்துறை:

பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த கிராமப் புறத்திலுள்ள முன்னேற்றமடையாத மாணவியருக்கு சுய வேலைவாய்ப்பு அளிப்பதற்காகத் தொழில் பயிற்சி நிலையம் அரசு ஆணை எண் 4100 அ. ந. தியதி 1-10—59 ன் படி அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி பயிற்சி கன்னியாகுமரி மாவட்டம் பாகோட்டில் 14-1-60 தேதி முதல் நடை பெற்று வருகின்றது.

மேற்படி பயிற்சி நிலையத்தில் உள்ள பயிற்சியாளர்கள் எண்ணிக்கை 25 ஆகும். பயிற்சியாளர்களில் 80% பிற்பட்டோருக்கும் 20% தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் கொடுக்கப்படுகின்றது, பயிற்சிகாலம் ஒரு வருடம். பயிற்சியாளர்கள் மாவட்ட பிற்பட்ட நல அலுவலராலும், தொழில் துறை உதவி மேலாளராலும் தேர்வு செய்யப்படுகின்றார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியர்களுக்கு பனந்தும்பு, தென்னந்தும்பு, மயிர் முதலியனவற்றைக் கொண்டு பிரஷ் தயார் செய்யும் முறை பயிற்றுவிக்கப்படுகின்றது. தொழில் நுட்ப பயிற்சி பெற்ற போதகர், உதவி போதகர் இருவராலும் மேற்படி பயிற்சியாளர்களுக்கு தரை சுத்தம் செய்யும் பிரஷ், புட்டி பிரஷ், மேஜை பிரஷ், காலணி பிரஷ், சேவிங் பிரஷ் முதலியவை தயார் செய்ய தீவிர பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சி கால முடிவில் நாகர்கோவில் தொழில் மைய உதவி மேலாளர் ஒருவரால் தேர்வு நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு மாவட்ட பிற்பட்ட நல அலுவலரால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 30 உதவி பணமாக வழங்கப்படுகின்றது. இந்தப் பயிற்சி நிலையம் இளநிலை உதவியாளர் ஒருவரது கண்காணிப்பிலிருந்து வருகின்றது.

இதுவரை இந்தப் பயிற்சி நிலையத்தில் 393 பேர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். பயிற்சியாளர்களால் தயார் செய்யப்படும் பிரஷ்கள் அரசிற்கு நட்டம் இல்லாத முறையில் வெளியில் விற்பனை செய்யப்படுகின்றது. இதுவரை 42210 பிரஷ்கள் தயார் செய்யப்பட்டு ரூ. 21046. 35க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்படி பயிற்சி நிலையம் தற்போது 10-4-75 முதல் குழித்துறையில் செயல்பட்டு வருகின்றது.

## 4. பிரம்பு பயிற்சி நிலையம்

பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்கள் மேம்பாடு அடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளைத் தாலுகா அழகியபாண்டியபுரம் கிராமததில் 6-1-59 முதல் ஒரு பிரம்பு பயிற்சி நிலையம் அரசு அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சியாளர்கள் எண்ணிக்கை 15. பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள். பயிற்சிக்கு பிற்பட்டோர் 80%-ம், தாழ்த்தப்பட்டோர் 20%-ம் தேர்வு செய்யப்படுகின்றார்கள். பிரம்பிலிருந்து நாற்காலி, குழந்தை நாற்காலி, பழக்கடை, சிற்றுண்டிகூடை, சைக்கிள் இருக்கை, தட்டுகள், சாய்வு நாற்காலி முதலியன தயார் செய்ய தொழில் நுட்ப பயிற்சி பெற்ற போதகர் மற்றும் உதவி போதகரால் பயிற்சியளிக்கபபடுகின்றது. பயிற்சி கால முடிவில் தொழில் துறை மேலாளர் ஒருவரால் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வில் வெற்றிபெற்ற பயிற்சியாளர்களுக்கு மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலரால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன,

பயிற்சி காலத்தில் பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 30 உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது, இதுவரை 125 பயிற்சியாளர்களுக்கு இந்த நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு நட்டம் ஏற்படாத வகையில் தயார் செய்யப்பட்ட பொருட்கள் வெளியில் விற்கப்பகின்றன. பயிற்சியாளர்கள் இதுவரையில் 3302 பொருட்கள் தயார் செய்து அவைகளை ரூ 24990/73-க்கு விற்பனை செய்துளளனர்.

இந்தப் பயிற்சி நிலையம் 5-7-78-ந் தேதி முதல் தக்கலையில் இயங்கி வருகின்றது.

இந்த இரு நிலையங்களும் பயிற்சிபெற்ற பயிச்சியாளர்கள் சுய வேலை வாய்ப்புப் பெறவும், மாவட்டத்தில் இம்மாதிரி உள்ள தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கும் வழி செய்கின்றது.

## V. பள்ளி மாணவர்களுக்குப் பரிசு வழங்கல்

இம்மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த எட்டாம் வகுப்பு மற்றும் பள்ளியிறுதி வகுப்பில் படிக்கும் மாணவர்களில் கூடுதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர் இருவருக்கு முறையே முதல் இரண்டாவது பரிசுகள் வருடந் தோறும் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளியிறுதி வகுப்பில் முதலாவதாக வெற்றி பெற்ற மாணவருககு ரூ. 100/– மதிப்பில் முதல் பரிசும், இரண்டாவதாக வெற்றி பெற்ற மாணவருக்கு ரூ. 50/– மதிப்பில் இரண்டாவது பரிசும், எட்டாவது வகுப்பில் முதலாவதாக வெற்றி பெற்ற மாணவருக்கு ரூ. 50/– மதிப்பில் முதல் பரிசும் இரண்டாவதாக வெற்றி பெற்ற மாணவருக்கு ரூ. 10/– மதிப்பில் புத்தகங்கள் வெற்றி பெற்ற மாணவரால தேர்ந்தெடுக்கப்படும் பரிசாக வழங்கப்படுகின்றன.

1978–79-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மாணவர் மாநில முதல் பரிசான ரூ. 500/– பெற்றார். இதே ஆண்டில் பள்ளி இறுதி வகுப்பு, பத்தாம் வகுப்பும் பதினொனரும் வகுப்பாகவும் இருந்த காரணத்தால் ரூ. 850. பரிசாக வழங்கப்பட்டது. இத்தகைய ஊக்கப் பரிசுகள் பள்ளியிறுதித் தேர்வுகளில் நல்ல வெற்றி விகிதத்தினைப் பெற பிற்பட்ட மாணவருக்கு வழிகோலுகின்றன.

## VI முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இலவசதொழில் கருவிகள் வழங்கல்

சாதி, மத பேதமின்றி பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த சவரத்தொழில் செய்யும் நலிவுற்ற தொழிலாளர்களுக்கு பொருளாதார நிலையை உயர்வடையச் செய்ய இலவசமாகத் தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன, ஒவ்வொரு வருடமும் தொழிற் கருவிகள் அடங்கிய பெட்டிகள் 50 வழங்கப்படுகின்றன. இத்திட்டதில் பயன் பெற நாளேட்டின் வழி விளம்பரம் செய்து மனுக்கள் பெறப்படுகின்றன, தகுதியுள்ள மனுதாரர்கள் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர், உதவி மேலாளர் (தொழிற்துறை) மற்றும் சவரத் தொழிலாளர் பிரதி நிதி ஒருவர் அடங்கிய குழுவால் தேர்வு செய்யப்படுகின்றார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளாக இக்கருவிகள் வழங்கிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | வழங்கப்பட்ட வருடம் | கருவிகள் எண்ணிக்கை | மதிப்பு |
|---|---|---|---|
| 1. | 1974-75 | 82 | 6311 |
| 2. | 1975-76 | 83 | 5625 |
| 3. | 1976-77 | 50 | 3750 |
| 4. | 1977-78 | 50 | 3750 |
| 5. | 1978-79 | 50 | 3750 |
| 6. | 1979-80 | 43 | 4950 |

### நிதி ஒதுக்கீடு

இம்மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பினரது முன்னேற்றத்திற்காக பல திட்டங்களில் கடந்த ஆறு ஆண்டுகளில் செலவிடப்பட்ட நிதி விபரம் கீழே பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.



## பிற்பட்டோர் நலத்துறை மாணவியர் விடுதியில் 1971முதல் 1981 வரை தங்கி படித்த மாணவியர் எண்ணிக்கை.

| வரிசை எண் | விடுதியின் பெயர் | 1971-72 | 72-73 | 73-74 | 74-75 | 75-76 | 76-77 | 77-78 | 78-79 | 79-80 | 80-81 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, நாகர்கோவில் | 50 | 49 | 49 | 48 | 44 | 52 | 41 | 44 | 40 | 42 |
| 2. | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, குழித்துறை | (1973-ல் துவங்கப்பட்டது) | | 36 | 41 | 34 | 40 | 34 | 36 | 20 | 21 |
| 3. | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, அகஸ்தீஸ்வரம் | (1974-ல் துவங்கப்பட்டது) | | | 30 | 30 | 39 | 49 | 34 | 34 | 29 |
| 4. | உயர் நிலைப்பள்ளி மாணவியர், விடுதி குளச்சல் | — | 1978-ல் துவங்கப்பட்டது – | | | | | | 50 | 64 | 50 |
| 5. | உயர் நிலைப்பள்ளி மாணவியர் விடுதி, குலசேகரம் | — | 1980-ல் துவங்கப்பட்டது – | | | | | | | 50 | 50 |

**மாவட்ட பிற்பட்டோர் நலத்துறையில் 1974 முதல் 1980 வரை செலவு செய்த நிதி நிலை அறிக்கை விபரம்:**

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | வருடம் செலவான தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 74–75 | 75–76 | 76–77 | 77–78 | 78–79 | 79–80 |
| 1. | பள்ளிப் படிப்பு உதவித் தொகை | 214506 | 159758 | 140884 | 83918 | 63563 | 28034 |
| 2. | பட்டப் படிப்பு உதவித் தொகை | 713684 | 694230 | 631244 | 641343 | 612220 | 531956 |
| 3. | முதல் மாணவருக்கு பரிசு வழங்கல் | —— | —— | 300 | 210 | 860 | 210 |
| 4. | தும்பு, பிரம்பு தொழில் பயிற்சி நிறுவனங்கள் பராமரித்தல் | 37949 | 44656 | 45840 | 44308 | 62126 | 58295 |
| 5. | மாணவியர் விடுதி பராமரித்தல் | 114404 | 115019 | 147101 | 109279 | 142774 | 113043 |
| 6. | சவர தொழிலாளருக்கு இலவச கருவிகள் வழங்கல் | 6311 | 5625 | 3750 | 3750 | 3750 | 4950 |
| 7. | உயர் நிலை பள்ளி விடுதி மாணவியருக்கு சீருடை வழங்கல் | —— | —— | —— | —— | 3446 | 3267 |



# குமரி மாவட்டத்தில் பூமிதான, கிராமதான பணிகள்

அண்ணல் காந்தி அடிகளின் அடிச் சுவட்டைப் பின் பற்றி, இப்பாரதப் பூமியில் ஆச்சார்ய வினோபாஜி அவர்கள் 1951ம் ஆண்டு முதல் பூமிதான இயக்கத்தைத் தோற்றுவித்து நாடெங்கும் பாத யாத்திரை மேற்கொண்டு. சர்வோதயக் கருத்துக்களைப் பரப்பி நிலபிரபுக் களின் உள்ளங்களை மாற்றமடையச் செய்து, அவர்கள் தங்களது நிலஉடமைகளிலிருந்து மனப்பூர்வமாக வழங்கிய நிலங்களைத் தானமாக பெற்ருர். தான நிலங்களை தானதாரின் விருப்பப் படியும். சர்வேதய லோக்கல் கமிட்டியின் மூலமாக வும் உழைக்கின்ற நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கி வாழ்வழித்தார்கள்.

அன்னுர் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பாதயாத்திரை மேற்கொண்டு இறுதியில் குமரி மாவட்டத்தில் தனது பயணத்தை தொடங்கினர் அவ்வமயம் இம்மாவட்ட சர்வோதய முக்கிய பிரமுகர்களும், அரசியல் தலைவர்களும் பெரு நிலக்கிழார்களும் பங்கு கொண்டு இம்மாவட்ட மக்களிடமிருந்து மொத்தம் 91-87 ஏக்கர் நிலம் தான மாக பெற்றுள்ளனர் இம்மாவட்டத்தில் தான நிலங்கள் பெரும்பாலும் வனப்பும் விலை மதிப்பும் வாய்ந்தவையே.

இம்மாவட்ட பூதான நில விநியோகப்பணி கள் கடந்த 31—3—78 வரை நெல்லைமாவட்ட தனித்துணை தாசில்தார் (பூதானம்) அலுவலகத் துடன் இணைக்கப்பட்டிருந்தது. நிலவரித் திட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத் தினுல் நில விநியோகப்பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. பூமிதான நிலங் களுக்கு மீண்டும் பூமிதான வாரியத்தின் பெய ரால் பட்டா பெறப்பட்டுள்ளது.

கடந்த 1—4 - 78 முதல் தமிழ்நாடு பூதான வாரியம் தமிழக அரசின் அனுமதியைப் பெற்று கன்னியாகுமரி மாவட்ட பூதான நிலப பணியைக்கவனிக்கும் பொருட்டு, கன்னியா குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பூதான தனித்துணை தாசில்தார் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தி அதில் தனித்துணை தாசில் தார் ஒருவரையும் இரண்டு பூதான ஆய் வாளர்களையும் அடிப்படை ஊழியர் ஒருவரையும் நியமனம் செய்து, பணியை மேற் கொண்டு வருகிருர்கள்.

இம்மாவட்டத்தில் கிடைக்கப் பெற்ற தான நிலங்களை தானதார் விருப்பப்படியும் சர்வோ தயலோக்கல் கமிட்டி மூலமும் பரவலாக நில மற்ற ஏழைகளுக்கு ஒரு சிறு பகுதி முன்னதாக வழங்கியுள்ளார்கள். விநியோகமாகாத மீத முள்ள தான நிலங்களை பூமிதான வாரிய விதி முறைப்படி நிலமற்ற ஏழைகளுக்கு இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி வழங்கப் பட்டுள்ளது. மற்றும் முன் விநியோகம் பெற்ற நிலங்களை விநியோகம் பெற்றவர்களே தொடர்ந்து அனுபவம் செய்து அபிவிருத்தி மேற் கொண்டுள்ளார்களா என்பதற்கு நிலத் தணிக்கை செய்து அவர்களுக்கும் வாரியத்தின் மூலம் புதிய விநியோகப்பத்திரம் வழங்கப் பட்டுள்ளது.

இவ்வலுவலகம் செயல்பட்ட பின்னர் புதிதாக 2 நபர்களிடம் 1-87 ஏக்கர் தானமாக பெறப்பட்டுள்ளது. நாளது வரை நடை பெற்றுள்ள பணிகள் இணைப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**பூதான நிலத்தில் அரசு அலுவலகம்:—**

கல்குளம் வட்டம் திருவட்டார் கிராமத்தில் சர்வே எண் 826/4ல் 1-00 ஏக்கர் நிலம் பூதான வாரியத்திற்கு பாத்தியப்பட்டது. திருவட்டார் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் இந்த நிலத்தின் மீது அமைந்துள்ள விபரம் நிலத் தணிக்கையின் போது தெரிய வந்தது. பின் தமிழ்நாடு பூதான வாரியத் தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட பூதான நிலத்தைப் பார்வை யிட்டு அதனை திருவட்டார் ஊராட்சி ஒன்றியத் திற்கு வழங்க உத்திரவிட்டுள்ளார்கள். மேலும் திருவட்டார் கிராமம் சர்வே எண் 851/1 ல் உள்ள 0-05 சென்ட பூதான நிலத்தையும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் வேண்டு கோளின் படி "பாலர் பள்ளி" கட்டிடம் அமைக்க வழங்கியுள்ளார்கள்.

**சர்வசேவா விவசாயப்பண்ணை.**

இம்மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம் ஏழுதேசம் கிராமத்தில் தூத்தூர் இரவிபுத்தன துறை என்னுமிடத்தில் திருவனந்தபுரத்தைச் சார்ந்த திரு. அசன் மரைக்காயர் அவர்கள் 11-92 ஏக்கர் பூதானமாக வழங்கியுள்ளார்கள் அதனை மீனவர் சமுதாயம் முக்குவர் குல மக்களுக்கும் மற்றமுள்ளவர்களுக்குமாக 41 நபர்களுக்கு விநி யோகம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தான நிலம் கடற்கரையில் அமைந்துள்ளது பெரும் மணற்பகுதியாகும் விநியோகம் பெற்றவர்களால் வரும் சுமார் 1200 தென்னங்கன்றுகள் வைத்

துள்ளனர். சமுதாய நல திட்டத்தின் மூலமாக ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது. விநியோகம் பெற்றவர்கள் அனைவரும் மிகவும் பின்தங்கியவர்கள். அன்றாடம் ஆழ்கடல் சென்று மீன் பிடித்து. ஜீவனம் செய்பவர்கள் எனவே அவர்களால் தாங்கள் நட்டுள்ள தென்னங் கன்றுகளை அபிவிருத்தி செய்ய முடியாத நிலையிலுள்ளார்கள்.

எனவே அவர்களது நிலையை தமிழ்நாடு பூதான வாரியத்தலைவர் அவர்களும் தனித் துணைக்கலெக்டர் அவர்களும் நேரில் பார்வையிட்டு பூதான நிலத்திலுள்ள கிணற்றினை ஆழப்படுத்தி, பாம்புசெட் பொருத்தி சிமெண்டு வாய்க்கால்கள் அமைத்து உரமிட்டு தென்னைகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்ய, சர்வ சேவா விவசாய பண்ணைத் திட்டம் ஒன்று விரைவில் துவங்க ஆவன செய்துள்ளார்கள். எனவே இத்திட்டத்தின மூலம் நிலம் விநியோகம் பெற்ற 41 குடும்பத்தினர்களும் விரைவில் நல்லதொரு பலனை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## கிராமதானம்

பூதான நில விநியோகப்பணிகளை மேற்கொண்ட நேரத்தில் ஆச்சார்ய விநோபாஜி அவர்களின் கிராமதான திட்டக்கருத்துக்கள் இம்மாவட்ட மக்கள் மத்தியில் ஆங்காங்கே பரப்பப்பட்டு வந்தன. அதன் பயனாக கன்னியாகுமரி மாவட்டத்தின் முதல் கிராமதான கிராமமாக கொட்டாரத்தை அடுத்துள்ள "நரிக்குளம் காலனி" உருவாகியுள்ளது இக்கிராமத்திற்கு கடந்த அக்டோபர் இரண்டாம் நாளன்று தமிழ்நாடு பூதான வாரியத் தலைவர் தவத்திரு சுவாமி வித்தியாநந்த சரஸ்வதி அவர்களும், தனித்துணைக்கலெக்டர் திரு. க. சேர்மன் துரை அவர்களும் முகாம் செய்து, இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பமும் தன்னிறைவு பெற்று திகழவேண்டுமென ஆசி வழங்கியுள்ளார்கள்.

இக்கிராமத்தில் மொத்தம் 35 குடும்பங்கள் உள்ளன. அனைவரும் அரிசன மக்கள். பொருளாதாரத்தில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளார்கள். விவசாயக்கூலிகள் இவர்களுக்குச் சரியான குடியிருப்பு வசதியில்லை. பெரும்பாலும் ஓலை குடிசையில் வாழ்கிறார்கள். எனவே இவர்களுக்கு கிராமக்கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகவும், அரிசன நல வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும் புதிய குடியிருப்பு வீடுகள் அமைத்து கொடுப்பதற்கு இவ்வலுவலகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது மற்றும் பால்கறவை மாடுகள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது இக்கிராமத்தில் Y. M. C. A. மூலமாக நடைபெற்று வரும் கோரம்பாய் பயிற்சி நிலையத்தை உற்பத்தி நிலையமாக மாற்றி, கூலி உயர்வுக்கும் கூடுதல் நபர்கள் வேலைவாய்ப்பு பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான கிராமங்களில் கிராமதானக்கருத்தினை பரப்பி, கிராமதான கிராமங்களாக மலரச் செய்து வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டு அண்ணல் காந்தியடிகள் கண்ட தன்னிறைவு கிராமங்களை, பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் நின்று உருவாக்குவோம் என உறுதி கூறுகிறோம்.



## கன்னியாகுமரி மாவட்டத்தில் பெறப்பட்டுள்ள பூதான நில விபரங்களும், நில விநியோகப் பணிகளும்

| வ. எண் | வட்டத்தின் பெயர் | தானதார் எண்ணிக்கை | பூதான நிலம் பரப்பளவு ஏக். செ. | விநியோக நடவடிக்கை | பூதான நிலம் பரப்பளவு ஏக். செ. | விநியோகம் பெற்றவர்கள் | முற்பட்ட வகுப்பினர் | பிற்பட்ட வகுப்பினர் | தாழ்த்தப் பட்டோர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகஸ்தீஸ்வரம் | 45 | 26—67 | 33 | 6—94 | 44 | 8 | 24 | 12 | |
| 2 | தோவாளை | 15 | 5—80 | 12 | 4—20 | 13 | 6 | 3 | 4 | |
| 3 | கல்குளம் | 81 | 36—02 | 41 | 12—41 | 67 | 16 | 36 | 15 | |
| 4 | விளவங்கோடு | 55 | 23—38 | 22 | 19—75 | 75 | 8 | 63 | 4 | |
| | | 196 | 91—87 | 108 | 43—30 | 199 | 38 | 126 | 35 | |

# கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சிப் பணிகள்

கன்னியாகுமரி மாவட்டம் பத்மனுபபுரம், நாகர்கோவில் என இரு வளர்ச்சிக் கோட்டங்களைக் கொண்டுள்ளது,

பத்மனுபபுரம் வளர்ச்சிக்கோட்டம் 1-7-74ல் இருந்தும், நாகர்கோவில் வளர்ச்சிக் கோட்டம் 28—12—79-ல் இருநதும் செயல்பட்டு வருகின்றன. பத்மனுபபுரம் கோட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களும்46பேரூராட்சிகளும்144 ஊராட்சிகளும் அடங்கியுள்ளன, நாகர்கோவில் கோட்டத்தில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களும் 18 பேரூராட்சிகளும், 1 நகரியமும், 80 ஊராட்சிகளும் அடங்கியுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களின் தரம், பரப்பளவு, மற்றும் மக்கள் தொகை கீழ்வருமாறு:—

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | தரம் | மக்கள் தொகை | பரப்பளவு (ஹெக்) |
|---|---|---|---|---|
| **நாகர்கோவில் கோட்டம்** | | | | |
| 1. | அகஸ்தீஸ்வரம் | IV | 1,02,360 | 24372 |
| 2. | தோவாளை | IV | 78,252 | 39908 |
| 3. | இராஜாக்கமங்கலம் | IV | 98,320 | 14950 |
| **பத்மனுபபுரம் கோட்டம்** | | | | |
| 4. | குருந்தன்கோடு | IV | 1,28,933 | 10955 |
| 5. | தக்கலை | V | 1,30,7?9 | 12741 |
| 6. | திருவட்டார் | VI | 1,19,126 | 25513 |
| 7. | கிள்ளியூர் | VI | 1,13.318 | 8039 |
| 8. | முன்சிறை | VI | 1,31,183 | 7175 |
| 9. | மேல்புறம் | V | 1,29,300 | 27758 |

ஊராட்சி ஒன்றியங்களில் கோட்டாட்சிவாரியாக பராமரிக்கப்பட்டுவரும் சாலைகளின் விபரம் கீழ்வருமாறு;—

**நாகர்கோவில் கோட்டம்**

1) அகஸ்தீஸ்வரம் 139.30 கி.மீ.
2) தோவாளை 116 80 கி.மீ.
3) இராஜாக்கமங்கலம் 93.00 கி.மீ.

**பத்மனுபபுரம் கோட்டம்**

4) குருந்தன்கோடு 91 6 கி.மீ.
5) தக்கலை 84.1 கி.மீ.
6) திருவட்டார் 96.4 கி.மீ.
7) கிள்ளியூர் 135.1 கி.மீ.
8) முன்சிறை 102 60 கி.மீ.
9) மேல்புறம 146.50 கி.மீ.

## 1-11-56 முதல் 31-3-80 வரை சாதனைகள்

### 1. விவசாயம்.

இம்மாவட்டத்தில் உள்ள முக்கிய பயிர் நெல் பயிராகும். இம்மாவட்டத்தில் அதிகமாக நெல், சீனி போன்றவை பயரிடப் படுகின்றன. இம்மாவட்டத்தில் 40,000,00 ஹெக்டர் பரப்பில் நெல் மரவள்ளி போன்றவை பயிரிடப் படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 31—3—80 வரையான காலத்திற்கு ரூ 80,00,000/, விவசாய மானியம், கிட்டங்கிகளில் பராமரிப்பு, விவசாய விரிவாக்கப் பணிகள் முதலியவற்றிற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

### 2. கால் நடை பராமரிப்பு.

இம்மாவட்டத்தில் 10 கால் நடை மருத்துவமனைகளும், 14 துணை நிலையங்களும், இயங்கி வருகின்றன. ரூ. 38 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளன.

### 3. மீன் வளம்.

31-3-80 வரை மீன்குஞ்சுகள் வளர்த்தல், மீன்குஞ்சுகள் வளர்க்கப்பட்ட குளங்கள் பராமரிப்பு மற்றும் மீனவர்கட்கு நூல் விநியோகம் செய்த வகையில், ரூ 2,8?,156/- செலவு செய்யப்பட்டுள்ளது.

### 4. இணைப்பு சாலைகள்

இணைப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைத்தல், பராமரித்தல் மற்றும் கிராம



சாலைகள் சீர் செய்ய ரூ. 2.50,00,000/- வரை செலவு செய்யப்பட்டது.

### 5. கிராமக் குடி நீர்த்திட்டம்.

கிராமக் குடி நீர் திட்டத்தின் கீழ் கிணறு வெட்டுதல், மேல்நிலை நீர்த் தேக்கிகள், தரை மட்ட நீர்த்தேக்கிகள் மற்றும் கைப்பம்புகள் திறுவுதல் வகையில் 2,50,50,000/- செலவு செயயப்பட்டுள்ளது.

### 6. பொது சுகாதாரம்

12. ஆரம்ப சுகாதார நிலையங்களும் 128 தாய் சேய் நல விடுதிகளும இயங்கி வருகின்றன ரூ. 14 லட்சம் செலவு செய்யப்பட்டுளளது.

### 7. கல்வித்திட்டம்.

ஆரம்பக்கல்வி கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வித்துறையின் கீழ் நடைபெற்று வருகிறது.

### 8. தன்னிறைவுத்திட்டம்:

இத்திட்டம் இம்மாவட்டத்தில் உள்ள கீழ்க்காணும் ஊராட்சி ஒன்றியங்களில் நடப்பு ஆண்டு செயலாக்கப் படுகிறது.

1. அகஸ்தீஸ்வரம்
2. இராஜாக்கமங்கலம்
3. குருந்தன்கோடு
4. கிள்ளியூர்
5. முஞ்சிறை

128671

இத்திட்டத்தின் கீழ் கிராம மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டு ஓராண்டு காலத்திற்குள் கிராமங்கள் தன்னிறைவு பெறும். இத்திட்டத்திற்கு 1981-ம் வருடத்திற்கு ரூ. 173. 99 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 66. 27 லட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இத்திட்டம் மேலும் நான்கு ஒன்றியங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

### 9 வேலைக்கு உணவுத் திட்டம்:

இத்திட்டம் 1979-80-ம் வருடத்தில் இருந்து அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1033 வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 643 வேலைகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை 2150 டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 1700 டன் எடுக்கப்பட்டுள்ளது. 1500 டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மொத்த வேலைகளின் மதிப்பு ரூ. 32,63,553.

### 10. வேலை வாய்ப்பு உறுதியளிக்கும் திட்டம்:

இத்திட்டம் 1979-80-ம் வருடத்தில் இருந்து செயல் பட்டு வருகிறது. போதிய வாய்ப்பன்றி இருக்கும் கிராம மக்களின் அடிப்படைத் தேவையான உணவு மற்றும் இதர பொருள்களை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் கிராம வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தின் கீழ் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் தங்களது உடல் உழைப்பின் மூலம் வேலை செய்ய பெயர் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு பதிவு செய்த 30 தினங்களுக்குள் ஒன்றிய ஆணையர்களால் வேலை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வேலை செய்வதற்கு கூலியாக 50 சதவீதம் அரிசியாகவும் 50 சதவீதம் பணமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின் மூலம் செயல் படுத்தும் போது கட்டுமான பொருட்களின் செலவை ஈடுசெய்ய ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 5496 நபர்கள் பதிவு செய்யப்பட்டு 4543 நபர்கட்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 6?0 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு 225 வேலைதள் முடிக்கப்பட்டன. மீதி வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## சத்துணவுத் திட்டம்

தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் சத்துணவுத் திட்டம் 1972-73 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் 5 வருடம நடைமுறையில் நடைபெற்றது இதில் 5.05 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு பல திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன.

### 1. பள்ளித் தோட்டங்கள்.

இவ்வொன்றியத்தில் 5 பள்ளி தோட்டங்கள் ஆரம்பித்து சத்துள்ள காய்கள் உற்பத்தி செய்து மதிய உணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இது பயிராக்க ரூ. 12, 278.75 செலவு செய்யப்பட்டுள்ளது.

### 2. வீட்டுத்தோட்டம்.

இத்திட்டம அனுமதிக்கப்பட்ட காலத்தில் 7200 வீட்டு தோட்டங்கள் அமைத்து காய்கறி உற்பதிகள் செய்யப்பட்டன. இவர்களுக்குத் தேவையான காய்கறி விதைகள் உரங்கள் முதலியன

இனாமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கென ரூ. 13,115/- செலவு செய்யப்பட்டது.

### 3. கோழி வளர்ப்பு.

இத்திட்ட ஆரம்பத்தில் ஒன்றியத்திலிருந்து 5 நபர்களை தேர்ந்தெடுத்து பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு நாள் வயதுடைய கோழி குஞ்சுகள் கொடுக்கப்பட்டு அதனை பராமரித்து 12 வாரங்கள் சென்ற பிறகு அதனை மற்றுமுள்ள கோழி வளர்ப்பவர்களுக்கு வினியோகிக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் 20 நல்ல தர கோழிகள் வீதம் வினியோகிக்கப்பட்டது. பண்ணைகளை அமைப்பதற்கும் மற்றும் தேவையான உணவு, இதர கருவிகள் வழங்கப்பட்டன. இதற்கு மொத்தம் ஒரு பண்ணைக்கு ரூ. 150/- மட்டும் வசூல் செய்யப்பட்டது. இதர தொகையை மான்யமாக வழங்கப்பட்டது. ரூ 94, 088. 55 இத்திட்டத்திற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு வீட்டிற்கும் 5 பெட்டை கோழிகள், 1 சேவல் வீதம் 12 முதல் 16 வார கோழி குஞ்சுகள் 50% மான்யத்தில் வினியோகிக்கப்பட்டன. இத்திட்டத்குற்கு ரூ. 25427/-ம் செலவு செய்து நல்லமுறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இவ்வொன்றியத்திலுள்ள 21 பஞ்சாயத்துகளிலும், 21 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதோடு சமூக நலத்துறையினரால் 9 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பித்தும், ஆக 30 குழந்தைகள் காப்பகங்களும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றனர்.

சத்துணவுத் திட்டத்தில் 50% மான்யம் அல்லது ரூ. 4000 எது குறைவோ அந்த திட்டத்தில் 30 குழந்தைகள் காப்பகங்களுக்கு சொந்தமாக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 121011 இத்திட்டத்தின் மூலம் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் சிறு குழந்தைகளுக்கு கல்வி புகட்டப்பட்டு வருகிறது. இக்குழந்தைகளுக்கு கோர் உணவும் முட்டை முதலியவைகளும் வழங்கப்பட்டு வருகிறது, இக்குழந்தைகளுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனையும் நடைபெற்றுள்ளது

அதோடு 30 மகளிர் மன்றங்களும் ஆரம்பித்து நல்ல முறையில் நடந்து வருகிறது. ஒவ்வொரு மாதமும் 2 சத்துணவு மாதிரிகள் செய்து காண்பித்து சத்துணவின் முக்கியத்தை எடுத்து விளக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 10 தையல் இயந்திரங்களும், 10 வானொலி பெட்டிகளும் 10 அடுக்களை தோட்ட கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென ரூ. 11910/- செலவு செய்து நன்முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் யூனிசெப்பில் இருந்து கீழ் கண்ட பொருட்கள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| கை தையல் இயந்திரம் | 10 | |
| படம் காட்டு கருவி | 1 | |
| உயரம் அளக்கும் கோல். | 18 | |
| வானொலிப் பெட்டி | 10 | |
| விளையாட்டு சாதனங்கள் | 6 | |
| அடுக்களை தோட்ட கருவிகள் | 10 | செட் |
| கம்பி வலை | 31 | சுருள் |

இத்திட்டக் காலவிதிக்குள் வழங்கப்பட்ட இலக்கினை ஒவ்வொரு உப திட்டங்களையும் நனமுறையில் சாதனை செய்யப்பட்டு நன்முறையில் வெற்றி பெற்றுள்ளது. இத்திட்ட காலத்தில் பல விதமான போட்டிகள், கண்காட்சிகள் வைத்து திட்டத்தின் நோக்கத்தையும் பலனையும் எடுத்துக் கூறி மக்களை ஊக்கப்படுத்தப்பட்டது.

### சிறு உழவர் மேம்பாடுத் திட்டம்.

சிறு உழவர் மேம்பாடுத் திட்டம் 1975-76 முதல் இம்மாவட்டத்தில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் தற்போது சிறு உழவர் மேம்பாட்டுத்திட்ட தனி அதிகாரியால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### சிறு பாசனம்

இம்மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சிஒன்றியங்களில் 1466 நீர்பாசன குளங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குளங்களை பராமரிக்க ரூ. 5,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுத் தொகையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### ஊராட்சி தேர்தல்கள் ;

இமமாவட்டத்திற்குட்பட்ட 64 பேரூராட்சிகளையும் 224 ஊராட்சிகளையும் 65 பேரூராட்சிகளாகவும் 88 ஊராட்சிகளாகவும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இந்த திருத்தம் வரும் ஊராட்சித் தேர்தலிலிருந்து அமுலுக்கு வரும்.

அரசு ஆணை 1588 ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை நாள் 17—10—80-ன்படி 1980 ஜனவரி திங்கள் 1-ல் 18 வயது முடிவடைந்த



அனைவரையும் வாக்களிக்க தகுதியுடையவர்களாக்கும் வகையில் ஒருங்கிணைந்த துணைப் பட்டியலை தயாரிக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென வீடு வீடாக வாக்காளர் கணக்கெடுப்பதற்காக கணக்கெடுப்பாளர்களும் மேற்பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### கண் சிகிட்சை முகாம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980-ம் வருடம் அரசு இலவச கண்சிகிச்சை முகாம் பதமநாபபுரம் கோட்டத்திலுள்ள மணலிக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கார்மல் மருத்துவ மனையில் வைத்து 11-11-80 முதல் 19-11-1980 வரை நடை பெற்றது. மொத்தம் 150 பேர்கள் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 19-11-80-ல் நடைபெற்ற நிறைவு விழாவில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக திட்டங்கள் 30 - 6 - 1980 முடிய

இயற்கை வளங்கள் நிறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக திட்டங்கள் 1970-ஆம் வருடம் முதல் அமல் நடத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது' மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு திட்ட அலுவலர். விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக திட்டங்கள் அலுவலர்களால் இத்திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை உருவாக்கி விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் அனுமதி பெற்று செயல் படுத்துவதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவ ஒரு தொழில் நுட்பப் பிரிவு செய்யப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் நுட்பப் பிரிவு திட்டங்களை உருவாக்குவதில் திட்ட அலுவலருக்கு உதவுகிறது. இப்படி உருவாக்கப்படும் திட்டங்கள் கழகத்தின் அங்கீகாரத்திற்குப்பின் இம்மாவட்டத்தில் வெற்றிகரமாக செயல் படுகின்ற தோவாளை, அகஸ்தீஸ்வரம் தக்கலை, இராஜாக்கமங்கலம், முஞ்சிறை, திருவட்டார் ஆகிய ஆறு கூட்டுறவு நிலவள வங்கிகளால் அமுல் செய்யப்பட்டுவருகிறது.

இம்மாவட்டத்தில் 1970 முதல் 30-6-1980 முடிய தென்னை, ரப்பர், கொக்கோ, கிராம்பு, தோவாளை சிறு பாசனத் திட்டம், பிச்சி ஆகிய திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வந்துள்ளன.

### 1. தென்னை திட்டம்.

1973-74-ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 30—6—1980 முடிய குறியீட்டுப்படி 1629. 83 ஏக்கருக்கு ரூ 37.45 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்டத்திலுள்ள 944 விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்டத்தில் கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் தருவதற்காக இரண்டு துணை வேளாண்மை அலுவலர்களும் நான்கு செயல் விளக்க உதவியாளர்களும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள்.

### 2. கொக்கோ திட்டம்:

இம்மாவட்டத்தின் 500.00 ஏக்கரில் தென்னைத் தோட்டங்களில் ஊடுபயிராக கொக்கோ வளர்ப்பதற்கு ரூ. 3.91 லட்சம் செலவில் ஒரு திட்டம் அமுல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 30—6—1980 முடிய 550 05 ஏக்கருக்கு ரூ. 3. 91 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இம்மாவட்டத்திலுள்ள 45 சிறு விவசாயிகள் உட்பட 205 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

### 3. தோவாளை சிறுபாசனத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் தோவாளை தாலுகாவிலுள்ள 100 விவசாயிகளுக்கு புதிதாக கிணறு வெட்டி பம்புசெட் வைப்பதற்கு ரூ. 10.79 இலட்சம் கடன் வழங்க திட்டம் உருவாக்கப்பட்டன. 30—6—1980 முடிய 57 விவசாயிகள் மொத்தம் ரூ. 6.83 இலட்சம் கடன் பெற்று கிணறு வெட்டி பம்பு செட் பொருத்தி பயன அடைந்துள்ளார்கள்.

### 4. ரப்பர் திட்டம் (முதல் கட்டம்):

ரப்பர் திட்டத்தின்கீழ் 1500 00 ஏக்கரில் ரப்பர் பயிரிடுவதற்காக ரூ. 22.80 இலட்சங் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்

மூலம் 338 விவசாயிகள் கடன் பெற்று பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்டம் சிறந்தமுறையில் அமுல்படுத்தப்படுவதற்காக ஒரு வனச்சரக அலுவலர் இத்திட்டத்தில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

**5. ரப்பர் திட்டம்** (2-வது கட்டம்):

ரப்பர் திட்டம் இரண்டாவது கட்டம் 1976-77-ஆம் ஆண்டு முதல் செயல்படுததப்பட்டு 30—6—1980 முடிய 300.00 ஏக்கருக்கு ரூ. 5.37 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்தட்டத்தின்கீழ் 144 விவசாயிகள் கடன் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

**6. ரப்பர் திட்டம்** (3-வது கட்டும்);

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1979-80-ஆம் வருடம் முதல் அங்கீகரிக்கபபட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தக்கலை, திருவட்டார் ஆகிய நிலவள வங்கிகளால் செயல்படுத்தப்பட்டு 30-6-1980 முடிய 156 ஏக்கருக்கு ரூ 1.40 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. 30-6-'80 முடிய இத்திட்டத்தினால்85 விவசாயிகள பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**7. கிராம்புத் திட்டம்:**

கிராம்புத் திட்டம் 1977-78-ஆம் ஆண்டு முதல் இம்மாவட டத்தில் செயல்படுததப்பட்டு வருகிறது. (தோவாளை, திருவட்டார், தக்கலை ஆகிய நிலவள வங்கிகளால் அமுல்நடத்தப்பட்டு நடத்தப்படும் இ த தி ட் ட த் தி ன் கீழ் 30—6—19‹0 முடிய குறியீட்டளவான 200:00 ஏக்கரும் நிறைவுசெய்யப்பட்டு ரூ 5 49 இலட்சம் கடன வழங்கப்பட்டுள்ளது. இந்திடடத்தின் கீழ் கடன்பெற்றுள்ள விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை கூறவும் கிராம்பு விவசாயத்தில் நுணுக்கங்களை கூறவும் ஓர் உதவி தோட்டக்கலை இயக்குநர் ப ணி யா ற் றி வருகிறார். இத்திட்டத்தின்கீழ் 41 விவசாயிகள பயனடைந்துள்ளார்கள்.

**(8) பிச்சித்திட்டம்:**

இம்மாவட்டத்தில் பிச்சிப்பூ சாகுபடி செய்யப்போதுமான கால நிலையும் தகுந்த மண் வளமும் உள்ளதால் பி ச் சி ப் பூ தி ட் ட ம் 1979-80-ஆம் வருடம் முதல் அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 30-6-1980 முடிய 17.45 ஏக்கருக்கு ரூ. 0.44 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. 30-6-1980 முடிய 20 விவசாயிகள் பயனடைந்துள்ள போதிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது.

**9. விசைப்படகு:**

நவீன வசதிகளுடன் கூடிய விசைப்படகுகளை பயன்படுத்தி மீன்பிடி தொழிலினை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தால் இத்திட்டம் 1979-80-ஆம் வருடம் மேற்கொண்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 30-6-1980 முடிய 11 விசைப்படகுகளுக்கு ரூ. 14.38இலட்சம் நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்

(1-7-1980 முதல் 31-10-1980 முடிய)

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் கண்காணிப்புடன் தென்னை, கிராம்பு, பிச்சி, கூடுதல் ரப்பர் (2-வது) கட்டம், கூடுதல் ரப்பர் (3-வது) கட்டம், ஆகிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள ஆறு நிலவள வங்கிகளும் இத்திட்டங்களை அமுல்படுத்துகின்றன.

**1. தென்னைத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் 1980-81-ம் ஆண்டிற்காக ரூ. 2.52 இலட்சம் குறியீட்டில் 31-10-1980 முடிய ரூ. 0.58 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இததிட்டம் மாவட்டததிலுள்ள அனைத்து நிலவள வங்கிகளிலும் அமுலபடுத்தப்பட்டு வருகிறது.

**2. கூடுதல் ரப்பர் (2-வது கட்டம்):**

இத்திட்டம் 1976 77-ம் ஆண்டு முதல் அமுல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் திருவட்டார், தக்கலை, ஆகிய நிலவள வங்கிகளால் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. 1980-81-ம் ஆண்டில் 31-10-19·0 முடிய ரூ. 0.19 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**3. கூடுதல் ரப்பர் (3-வது கட்டம்.)**

1979-80-ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் தக்கலை, திருவட்டார் ஆகிய நிலவள வங்கிகளால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1980-81-க்கான குறியீடு ரூ 2 21 இலட்சத்தில் 31 – 10 — 1980 முடிய ரூ, 0.66 இலட்சம் கடன் வழங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது, 2-வது கட்டம் மற்றும் 3-வது திட்டங்களின்கீழ் ஒரு வனச்சரக அலுவலர் பணியாற்றி வருகிறார்.



**4. கிராம்புத் திட்டம்**

1977-78-ஆம் வருடம் முதல் தோவாளை, திருவட்டார் மற்றும் தக்கலை நிலவள வங்கிகளால் அமுல்படுததப்பட்டுவரும் இத்திட்டத்தின் கீழ் 19‹0-81-ஆம் ஆணடிற்கான ரூ. 2.18 இலட்சம் குறியீட்டில் 31—10—1980 முடிய ரூ. 1. 54 இலட்சம் கடன் வழங்கப்பட்டு இத்திடடம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது கடன் பெற்ற விவசாயிகளுக்கு விவசாய. தொழில் நுட்ப ஆலோசனை வழங்க ஒரு உதவி தோட்டக்கலை இயக்குநர் பணியாற்றி வருகிறார்.

**5. பிச்சி திட்டம்**

பிச்சி சாகுபடி செய்வதற்கான கால நிலையும் மண்வளமும் ஒருங்கே அமைந்துள்ள தோவாளை தாலுகாவில் இத்திட்டம் 1979-80-ம் வருடம் முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. தோவாளை நிலவள வங்கிமூலம் அமுல் செய்யப்படும் இத்திட்டத்தின் மூலம் 1980 81ம் வருடத்திற்கு 31-10-1980 முடிய 10.95 ஏக்கருக்கு ரூ. 0.26 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது கிராம்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றி வரும் உதவி தோட்ட இயக்குநர் இத்திட்டத்திற்கும் தொழில் நுட்ப உதவி வழங்கி வருகிறார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் தவிர மாட்டு வண்டித் திட்டம், வெத்திலைக் கொடித் திட்டம், ரப்பர் திடடம் (4-வது கட்டம்) ஆகிய திட்டங்கள் விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவைகளில் கூடுதல் ரப்பர் திட்டம் (4-வது கட்டம் 600.00 ஏக்கருக்கு ரூ. 18.09 லட்சம் கடன் வழங்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை உடனே செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாட்டு வண்டித் திட்டம் அனுமதிக்கப்படும் பொழுது 150 யூனிட்டுகளுக்கு ரூ. 4 82 இலட்சம் கடன் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. யூனிட் ஒன்றுக்கு 2 மாடுகளுக்கும் சேர்த்து ரூ. 3,100 கடன் வழங்கப்படும்.

வெத்திலைக் கொடி திட்டத்தின் கீழ் 102.00 ஏக்கருக்கு ரூ. 35.00 இலட்சம் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தககலை, திருவட்டார், முஞ்சிறை ஆகிய நிலவள வங்கிகளால் அமுல் படுத்தப்படும்.

## சிறு விவசாயிகள் மேம்பாடு நிறுவனம்

கன்னியாகுமரி மாவட்டம் பெருமளவு சிறு மிகச்சிறு விவசாயிகளைக் கொண்ட ஒரு மாவட்டமாகும். இதற்கு முன்னால் சட்டப்பட்ட பல ஐந்தாண்டுத்திட்டங்களின பலன்கள், ஏழைப்பட்ட சிறு, மிகச் சிறு விவசாயிகளைச் சென்று அடையவில்லை. ஆகையால் கிராமப்புறத்தில் வாழும் பெருமளவு சிறு மிகச்சிறு விவசாயிகளின் நலனைக் கருதி ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சிறு விவசாயிகள் மேம்பாடு நிறுவனம் 1975-ம் வருடம் முதல் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

சிறு விவசாயிகளின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி அவர்களுடைய உப வருமானத்தையும் வேலை வாய்ப்பையும் அதிகரித்து விவசாயிகளின் பொருளாதாரத்தை மேன்மையடையச் செய்வதுடன் விவசாயத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பையும் அதிகரித்து அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் கிடைக்க வழி செய்து, அவர்களது வாழ்க்கையை வளம் பெறச் செய்து, வறுமையை விரட்டியடிப்பதே இந்த நிறுவனத்தின் தலையாய நோக்கமாகும். இந்நோக்கம் ஈடேற இந்த நிறுவனம் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

இந்த நிறுவனம் சிறிய விவசாயிகளுக்கு, தங்களுடைய விவசாயத்தைப் பெருக்குவதற்கும் உப வருமானத்தை பெருக்குவதற்கு தேவையான கடன் வசதி செய்து கொடுத்து, கடன் சுமையைக குறைப்பதற்கு மானியமும் வழங்குகிறது. குறுகிய மத்திய கால கடன் வசதி, கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலமாகவும், தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் வழங்கப்படுகிறது. நீண்டக்கால கடன்கள் பிரதம நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்படுகிறது விவசாயிகள் வாங்கும் கடனில், சிறு விவசாயிகளுக்கு 25% மானியமும், மிகச் சிறு விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் 33 1/3% மானியமும் இந்த நிறுவனம் வழங்குகிறது.

## இத்திட்டத்தில் பங்கு பெறுபவர்களின் தகுதி விபரம்

**1. சிறு விவசாயிகள்:**

$1\frac{1}{2}$ ஏக்கர் முதல் $2\frac{1}{2}$ ஏக்கர் வரை முதல் தர நஞ்சை நிலம்

அல்லது

$2\frac{1}{2}$ ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் உள்ளவர்கள.

**2. மிக சிறு விவசாயிகள்**

$1\frac{1}{2}$ ஏக்ர் வரை முதல் தர நஞ்சை நிலம்

அல்லது

$2\frac{1}{2}$ ஒக்கர் வரை புஞ்சை நிலம் உள்ளனர்கள்

**3. விவசாயத் தொழிலாளர்கள்:**

எந்தவித நிலமும் இல்லாமல் குடியிருக்கச் சொந்த விடு மட்டும், வைத்திருந்து 50 சத வருமானததிற்கு மேல் விவசாயக் கூலி வேலை செய்து வருமானம் பெறுபவர்கள்.

ஆனல் மேற்குறித்த எல்லோருடைய மாத வருமானம் விவசாயம் அல்லாத இதர தொழில் களில் இருந்து, ரூ. 200–க்கு மேற்படக்கூடாது.

குமரி ம்ாவட்டத்திற்கு வட்டாரத்திற்கு ரூ. $2\frac{1}{2}$ இலட்சம் வீதம், ஆண்டொன்றிற்கு ரூ 22.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகளுக்கு தங்தளுடைய விவசாயத்தை பெருக்குவதற்கும் உப வருமானத்தை பெருக்குவதற்கும் 19،5-ம் ஆண்டு முதல்1972ஆம் இண்டு வரை கீழ்கண்ட திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வந்தன. அவற்றின்படி வழங்கிய மானிய விபரம் விளங்குமாறு:

| | திட்டத்தின் பெயர் | மானியமாகச் செலவு செய்யப்பட்ட தொகை (ரூ இலட்சத்தில் 1975-79) |
|---|---|---|
| 1. | விவசாய திட்டங்கள் | 25.52 |
| 2. | சிறு நீர்ப்பாசன திட்டங்கள் | 3.10 |
| 3 | கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் | 23.39 |
| 4, | இதர திட்டங்கள் | 8.37 |
| 5. | நிர்வானச் செலவு | 7.76 |
| | | 68. 14 |

### 1979-80-ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவு விபரம்

| எண். | திட்டத்தின் பெயர் | பயன் பெற்ற நபர்க்ள் | ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|
| | *1, விவசாய திட்டங்கள்* | | |
| 1. | செயல் வினக்க பாத்திகள் | 334 | 0.39 |
| 2. | பழமரக் கன்றுகள் விநியோகம் | 745 | 0.12 |
| 3. | பயிர் கடன் மானியம் | 2933 | 0.80 |
| 4. | கைத்தெளிப்பான் விநியோகம | 139 | 0.19 |
| 5. | இரட்டை மாட்டு வண்டி வினியோகம் | 40 | 0 20 |
| 6. | விவசாய கருவிகள் விநியோகம் | 856 | 0.07 |
| 7. | தானிய களஞ்சிய விநியோகம் | 80 | 0.07 |
| 8. | நில சமன்பாடு | — | — |
| 9. | தடுப்பு சுவர் கட்டுதல் | 15 | 0.21 |
| 10. | புதிய தென்னைத்தோட்டம் அமைத்தல் | 3 | 0.01 |
| 11. | கொக்கோ ஊடுபயிர் | — | — |
| 12. | பிச்சி சாகுபடி | 2 | 0 01 |
| 13. | ரப்பர் சாகுபடி | 24 | 0.09 |
| 14: | முந்திரி தோட்டம் பராமரித்தல் | 2 | 0.01 |
| 15. | உழவு மாடுகள் விநியோகம் | 1245 | 4.26 |
| 16, | வண்டியும் மாடும் விநியோகம் | 133 | 1.20 |
| 17. | மாட்டு தொழுவம் கட்டுதல் | 72 | 0,70 |
| | *2 சிறு நீர்பாசன திட்டங்கள்:* | | |
| 18. | புதிய கிணறு வெட்டுதல் மற்றும் ஆயில் எஞ்சின்/மின்சார மோட்டார் பொருததுதல் | 17 | 0.24 |



| | | | |
|---|---|---|---|
| | *3. கால்நடை பராமரிப்பு திட்டம்:* | | |
| 19. | பால்மாடுகள் வினியோகம் | 1594 | 7.68 |
| 20. | கோழிப்ண்ணை அமைத்தல் | 253 | 0,61 |
| | *4. இதர திட்டங்கள்* | | |
| 21. | தேனீ வளர்ப்பு | 248 | 0,41 |
| 22. | கூட்டுறவு சேவா சங்க பணியாளர் ஊதிய மானியம் | — | 0.80 |
| 23. | விற்பனை குழுவிற்கு கிடங்கு வசதி | — | 1.00 |
| 24, | நிர்வாக செலவு | — | 2.51 |
| | | 8735 | 21.03 |

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம்

கிராமங்களில் உள்ள சிறு/மிகச் சிறு விவசாயிகளுடன் கைவினைஞர், விவசாய மல்லாதஇதரதொழிலாளர்,மீனவர், பனையேறுந் தொழிலாளர்க்கு உதவியும். மற்றும் தொழில் பயிற்சி தருவதற்காகவும், தேர்ந்தொடுக்கப் பட்ட பயன் பெறுங்குழுவினரில், மிக ஏழைகட்கு உதவி அவர்களை வறுமை கோட்டிற்கு மேல் உயர்த்தும் நோக்கத்துடன் தீட்டப்பட்டது ஒருங்கிணைந்த ஊரசு வளர்ச்சி திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் 1978-79ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள ஒன்பது வட்டாரங்களில் நீர்ப்பாசன வசதிகுறைந்த பின தங்கிய வட்டாரங்களான அகஸ்தீஸ்வரம், இராஜாக்க மங்கலம், குருந்தன் கோடு, கிள்ளியூர், மேல் புரம், முஞ்சிறை ஆகிய ஆறு வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரசு அபிவிருத்தித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்ட நிதியாக மாவட்டத்திற்கு ரூ. 45 இலட்சம் மானிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அக்டோபர், 80 முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் சிறு உழவர் மேம் பாடு திட்டத்தையும் இணைத்து மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டமாக மாவட்டம் முழுவதிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கடந்த இரண்டு ஆண்டு சாதனை விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | பயன் அடைந்தவர்கள் 1978–79 நபர்கள் | 1978–79 தொகை லட்சத்தில் | 1979-80 நபர்கள் | 1979-80 தொகை லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | பயிர்க் கடன் மானியம் | 993 | 0.30 | 200 | 0.10 |
| 2. | கலப்பினக் கன்று தீவனம் | 7848 | 6.62 | 2{00 | 10.38 |
| 3. | கோழிப்பண்ணை | 251 | 1.74 | 106 | 0.75 |
| 4. | தேனீ வளர்ப்பு | 128 | 0.35 | 5 | 0.02 |
| 5. | மீனவர்களுக்கு வலை வழங்குதல் | 925 | 11.36 | 1275 | 12.75 |
| 6. | மண்பாண்டம் செய்பவர் | 210 | 0.25 | 10 | 0.02 |
| 7. | தச்சர் | 72 | 0.18 | 15 | 0.05 |
| 8. | கொல்லர் | 30 | 0 07 | 40 | 0.09 |
| 9. | முழாய் இணைப்பு வேலை | 11 | 0.02 | — | — |
| 10. | எலக்டிரிசியன் | 13 | 0.02 | — | — |
| 11. | மூடி திருத்துவோர் | 93 | 0.25 | 20 | 0.06 |
| 12. | சலவைத்தொழிலாளர் | 102 | 0.39 | 25 | 0.07 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | தையல்காரர் | 383 | 0.80 | 700 | 2.70 |
| 14. | செருப்பு தைப்பவர் | 5 | 0.03 | — | — |
| 15. | கோரைபாய் செய்தல் — | — | | 10 | 0.02 |
| 16. | கம்பர் | — | — | 1 | 0.01 |
| 17. | பனைமரத் தொழிலாளர்கள் | — | — | 120 | 0.15 |
| 18. | மார்ஜின் உதவி தொகை | — | — | 5 | 0.05 |
| 19. | எலக்டிரிக் மோட்டார் பம்புசெட் | — | — | 3 | 0.05 |
| 20. | கைதெளிப்பான் வினியோகம் | — | — | 3 | 0.01 |
| 21. | நிலச்சீர் திருத்தம் | — | — | 2 | 0.02 |
| 22. | பார்ம் பார்ஸ்டரி | — | — | — | 0.39 |
| 23. | பால்மாடு வழங்குதல் | — | — | 500 | 3.00 |
| 24. | பன்றிப் பண்ணை அமைத்தல் | — | — | 2 | 0.01 |
| 25. | வாத்துப் பண்ணை அமைத்தல் | — | — | 106 | 0.04 |
| 26. | விசைப்படகு மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்குதல் | — | — | — | 0.80 |
| 27. | பயிற்சி | — | 0.12 | 920 | 5.00 |
| 28. | நடமாடும் மண் ஆய்வு ஊர்தி | — | — | — | 3.23 |
| | மொத்தம் — | 11130 | 22.50 | 6769 | 39.75 |

## சிறு விவசாயிகள் மேம்பாடு நிறுவன திட்டத்தில் 1980-81-ம் ஆண்டு ஒதுக்கீடு மற்றும் அக்டோபர் மாத முடியவுள்ள சாதனை விபரம்

(ரூபாய் லட்சத்தில்)

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | குறியீடு எண் | குறியீடு ரூ. | சாதனை எண் | சாதனை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | மாதிரி தளம் | 90 | 0.18 | 78 | — |
| 2. | பழமரக்கன்று விநியோகம் | 900 | 0.22 | 502 | 0.08 |
| 3. | பயிர்கடன் மானியம் | 1260 | 0.63 | 813 | 0.25 |
| 4. | நுண்ணுயிர் வழங்குதல் | 1800 | 0.01 | — | — |
| 5. | தானிய சேமிப்பு பத்தயம் | 50 | 0.05 | 34 | 0.03 |
| 6. | பிச்சி சாகுபடி | 30 | 0.40 | 18 | 0.12 |
| 7. | வண்டியும் மாடும் வழங்குதல் | 245 | 3.16 | 69 | 0.62 |
| 8. | மாட்டு தொழுவம் கட்டுதல் | 105 | 1.00 | 25 | 0.23 |
| 9. | உழவு மாடு வழங்குதல் | 100 | 4.91 | 222 | 0.85 |
| 10. | விவசாய கருவிகள் விநியோகம் | 540 | 0.03 | 129 | — |
| 11. | கிணற்று சுவர் கட்டுதல் மற்றும் பாசன கால்வாய் கட்டுதல் | 14 | 0.21 | — | — |
| 12. | ஆயில் எஞ்சின்/மின்சார மோட்டார் நிறுவுதல் | 14 | 0.23 | 7 | 0.11 |
| 13. | பால்மாடு வழங்குதல் | 1475 | 0.74 | 514 | 2.88 |
| 14. | தேனீ வளர்ப்பு | 120 | 0.30 | — | — |
| | | 7643 | 21.07 | 2307 | 5.17 |



## ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்தில் 1980-81-ஆம் ஆண்டு ஒதுக்கிடு மற்றும் அக்டோபர் மாத சாதனை விபரம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | குறியீடு எண். | குறியீடு ரூ. | சாதனை எண். | சாதனை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | மின்சார மோட்டார் வழங்குதல் | 15 | 0.24 | — | — |
| 2. | நில சீர்திருத்தம் | 10 | 0.03 | — | — |
| 3. | விவசாயக் கருவிகள் | 90 | 0.36 | — | — |
| 4. | பால்மாடு வழங்குதல் | 700 | 4.65 | 32 | 0.21 |
| 5. | கலப்பின கன்றுகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்குதல் | 1900 | 17.60 | 1900 | 1.70 |
| 6. | பன்றி பண்ணை அமைத்தல் | 30 | 0.18 | — | — |
| 7. | ஆட்டு பண்ணை அமைத்தல் | 100 | 0.25 | — | — |
| 8. | வாத்து பண்ணை அமைத்தல் | 16 | 0.08 | — | — |
| 9. | மீனவர்களுக்கு வலை வழங்குதல் | 735 | 7-35 | — | — |
| 10. | கட்டுமரம் வழங்குதல் | 11 | 0.33 | — | — |
| 11. | கூட்டுறவு சங்கங்களுக்கு விசை படகு வழங்குதல் | 8 | 4.00 | — | — |
| 12. | தேனீ வளர்ப்பு | 55 | 0.14 | — | — |
| 13. | பார்ம் பாரஸ்டிரி | 9000 | 0.40 | — | 0.02 |
| 14. | கொல்லர்களுக்கு உதவி வழங்குதல் | 25 | 0.08 | — | — |
| 15. | தச்சர்களுக்கு " | 40 | 0.13 | 6 | 0.02 |
| 16. | பார்பர்களுக்கு " | 40 | 0.13 | — | — |
| 17. | வண்ணார்களுக்கு " | 50 | 0.17 | 2 | 0.01 |
| 18. | மண்பாண்டம் செய்பவர்களுக்கு | 35 | 0.12 | — | — |
| 19. | தையல்காரர்களுக்கு | 600 | 1.80 | 129 | 0.36 |
| 20. | கோரைப்பாய் செய்பவர்களுக்கு | 72 | 0.24 | — | — |
| 21. | பனை மர தொழிலாளர்கள் | 450 | 0.45 | 48 | 0.46 |
| 22. | தங்க நகை செய்பவர்களுக்கு | 6 | 0.02 | — | — |
| 23. | விசை செக்கு வழங்குதல் | 35 | 0.53 | — | — |
| 24. | பயிற்சி | 1308 | 8.71 | 180 | 0,27 |
| | மொத்தம் | 15331 | 48,04 | 2297 | 2.63 |

# வேளாண்மை

நில அமைப்பைப் பொறுத்து இம் மாவட்டத்தை மலைப்பகுதி, மத்திய பகுதி, கடலோரப்பகுதி என்று மூன்று வகையாக பிரிக்கலாம்.

தேயிலை, காபி, ரப்பர், தென்னை, கொக்கோ, அன்னாசி, மிளகு போன்ற பயிர்கள் மலையோர பகுதிகளிலும், தென்னை, பாக்கு, நெல், வாழை, போன்ற பயிர்கள் தாழ்வார பகுதிகளிலும், நெல், தென்னை, வாழை, நிலக்கடலை, காய்கறிகள் போன்ற பயிர்கள் மத்திய பகுதிகளிலும் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் தவிர மா, எலுமிச்சை, பலா போன்ற பழ மரங்களும் சாகுபடியாகின்றன

**மழை:**

| | | | |
|---|---|---|---|
| சராசரி மழை அளவு | — | 1155.71 | மி. லி. |
| தென் மேற்கு பருவம் | — | 429.73 | ,, |
| வடகிழக்கு பருவம் | — | 568.00 | ,, |
| கோடை பருவம் | — | 157.98 | ,, |
| மொத்தம் | — | 1155.71 | ,, |

**தாலுகாக்கள்: 4**

1. தோவாளை
2. அகஸ்தீஸ்வரம்.
3. கல்குளம்
4. விளவங்கோடு.

**ஊராட்சி ஒன்றியங்கள் 9**

1. தோவாளை
2. அகஸ்தீஸ்வரம்
3. குருந்தன்கோடு
4. தக்கலை
5. திருவட்டார்
6. மேல்புறம்
7. முஞ்சிறை
8. ராஜாக்கமங்கலம்
9. கிள்ளியூர்

**குமரிமாவட்ட நிலப் பரப்பின் பாகுபாடு:**

| | | ஹெக்டர் |
|---|---|---|
| 1. | வனங்கள் | 54706.46.00 |
| 2. | சாகுபடிக்கு லாயக்கு இல்லாத பயன்படாத நிலம் | 4650.37.20 |
| 3. | சாகுபடி அல்லாத வேறு விதங்களில் பயன்படுத்தப்பட்ட நிலம் | 21615.31.19 |
| 4. | சாகுபடிக்கு லாயக்கான தரிசு | 588.98.50 |
| 5. | சாசுவதமான மேய்ச்சல் தரையும் மற்ற புல் தரையும் | 382.38.50 |
| 6. | சாகுபடி செய்யப்பட்ட பரப்பில் சேர்க்கப்படாத தோப்பு மரங்களடங்கிய பரப்பு | 239.25.00 |
| 7. | நடப்பு ஆண்டில் தரிசுகள் | 2817.58.12 |
| 8. | மற்ற தரிசு நிலங்கள் | 622.09.50 |
| 0. | நிகர சாகுபடி பரப்பு | 81592.01.53 |
| | மொத்தம் | 167214.46.00 |

**சாகுபடியாகும் முக்கிய பயிர்களின் பரப்பளவு:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நெல் | 65000 | ஏக்கர் | (இரு போகம்) |
| 2. | மரச்சீனி | 30000 | ,, | |
| 3. | தென்னை | 38000 | ,, | |
| 4. | கடலை | 2500 | ,, | (இரு போகம்) |
| 5. | ரப்பர் | 28000 | ,, | |
| 6. | காய்கறிகள் | 5000 | ,, | |
| 7. | முந்திரி | 5800 | ,, | |
| 8. | பழ மரங்கள் | 10500 | | |
| 9. | பருப்பு வகைகள் | 5700 | ,, | |
| 10. | ஏலம் | 250 | ,, | |
| 11. | கிராம்பு | 1125 | ,, | |
| 12. | தேயிலை | 1300 | ,, | |
| 13. | வாழை | 5800 | ,, | |



**விவசாய கிட்டங்கிகள்:**

1956 நவம்பரில் குமரி மாவட்டத்தில் நாகர்கோவில், தக்கலை, குழித்துறை ஆகிய இடங்களில் செயல்ப்பட்டது. இன்று பூதப் பாண்டி, சகாயநகர். வழுக்கம்பாறை, பெருமாள் புரம், பறக்கை, பழவிளை, அஞ்சுகிராமம், குருந் தன்கோடு. திங்கள்சந்தை, தக்கலை, குமார புரம், கோழிப்போர் விளை, திருவட்டார், மேல்புரம், தொடுவட்டி, கருங்கல், கிள்ளியூர், முஞ்சிறை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் மொத்தம் 19 விவசாய கிட்டங்கிகள் இன்று செயல்பட்டு வருகின்யன.

**வேளாண்மை திட்டங்கள்:**

1956-ல் தாலுகா அளவில் பரவலாக செயல் பட்ட வேளாண் திட்டங்கள் மாவட்ட வேளாண் அலுவலரின் கீழ் செயல்பட தொடங்கியது. சமுதாய நல திட்டம் செயல்பட தொடங்கியதும் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு துணை வேளாண் அலுவலரின் கீழ் வேளாண் திட்டங் கள் செயல்பட தொடங்கின. இம் மாவட்டத்தின் முக்கிய உணவு பயிர் நெல் ஆதலால் இதன் உற்பத்தியை பெருக்கிடும் பொருட்டு 1968-ஆம் ஆண்டு உயர் விளைச்சல் திட்டம் இம்மாவட் டத்தில செயல்படுத்தப்பட்டது. இத்தோடு 1975-ல் தீவிர சாகுபடி திட்டமும் அமுலாக்கப் பட்டது. இத் திட்டங்களின் காரணமாக நெல் உற்பத்தி கணிசமான அளவு உயர்ந்தது.

| வருடம் | பயிர் செய்யப்பட்ட பரப்பளவு (ஹெக்.) | மொத்த அரிசி உற்பத்தி (டன்) | ஹெக்டருக்கு அரிசி மகசூல் (கிலோ) |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1956-57 | 54494 | 67572 | 1240 |
| 1961-62 | 63281 | 117770 | 1862 |
| 1962-63 | 57370 | 114070 | 1988 |
| 1963-64 | 58614 | 115670 | 1108 |
| 1964-65 | 56630 | 101050 | 1784 |
| 1965-66 | 55361 | 105580 | 1907 |
| 1966-67 | 56046 | 94660 | 1689 |
| 1967-68 | 57480 | 108170 | 1797 |
| 1968-69 | 57425 | 115910 | 2018 |
| 1969-70 | 57590 | 115000 | 2080 |
| 1970-71 | 60000 | 114000 | 2400 |
| 1971-72 | 62062 | 152390 | 2455 |
| 1972-73 | 61723 | 137280 | 2224 |
| 1973-74 | 54485 | 113550 | 2085 |
| 1974-75 | 52734 | 106290 | 2016 |
| 1975-76 | 60000 | 147000 | 2458 |
| 1976-77 | 58000 | 154162 | 2658 |
| 1977-78 | 51607 | 132630 | 2570 |
| 1978-79 | 46280 | 114175 | 2479 |

குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்தபோது இருந்த அரிசியின் சராசரி ஹெக்டர் மகசூல் இரு மடங்காக உயர்த்தப் பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணங்கள் உயர் விளைச்சல் ரகங்களாகும். முதன்முதலில் 1966-67-ல் ஐ. ஆர். 8 ரகமும் அதனைப் பின் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் புதிய ரகங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்திற்கென சிறந்த ரகங்களை உருவாக்கிடும்பொருட்டு திருப்பதிசாரத்தில் நெல் பரிசோதனைத் துணை நிலையம் ஒன்று 1976-ல் தொடங்கப்பட்டு பலவித ஒட்டுரகங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன,

இம் மாவட்டத்தின் தேவைக்கான பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்வதற்காக திருப்பதிசாரத்தில் சுமார் 70 ஏக்கர் பரப்பில் அரசு விதைப்பண்ணை செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 100 டன் சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்தி செய்யப் பட்டு வருகின்றன.

| வருடம் | உற்பத்தி செய்யப் பட்ட விதைகள் | நெல் | மொத்த உற்பத்தி |
|---|---|---|---|
| 1960-61 | 49154 | 15846 | 65000 |
| 1964-65 | 119672 | 12600 | 132272 |
| 1967-68 | 166606 | 17445 | 184251 |
| 1970-71 | 136162 | 15600 | 151762 |
| 1977-78 | 116530 | 50211 | 166741 |

பண்ணையின் 1960-61-ல் சராசரி ஏக்கர் மகசூல் 620 கிலோ மட்டுமே. இதனை 1977-78-ல் 1535 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது. 1956-க்கு பின் இப் பண்ணையில் மூன்று புதிய கிட்டங்கிகளும் ஒரு அலுவலக கட்டிடமும் 5 குடியிருப்புகளும் உலர் தளங்களும் கட்டப்பட்டுள்ளன.

## இம்மாவட்டத்தில் செயல்படும் வேளாண் திட்டங்கள்

1. அமோக விளைச்சல் திட்டம்
2. தீவிர சாகுபடி திட்டம்
3. விதை அபிவிருத்தி திட்டம்
4. பசுந்தழை உரத்திட்டம்
5. உரக் கட்டுப்பாடு திட்டம்
6. கலவை எரு அபிவிருத்தித் திட்டம்.
7. பயறு பெருக்குத் திட்டம்
8. மண்வள ஆய்வுத் திட்டம்.
10. தென்னை அபிவிருத்தித் திட்டம்.
11. தென்னை தீவிர சாகுபடி திட்டம்.
12. தென்னை குட்டை — நெட்டை திட்டம்.
13. ஒட்டுயிர் வளர்ப்பு நிலையம்.
14. தென்னை வாடல் நோய் திட்டம்.
15. பயிர் பாதுகாப்பு திட்டம்.
16. தென்னை நோய் தடுப்பு திட்டம்.
17. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி முன்னேற்றத் திட்டம்.

1978 பெப்ருவரியில் இம் மாவட்டம் துணை வேளாண்மை இயக்குநர் கோட்டமாக மாற்றப் பட்டு துணை வேளாண்மை இயக்குனரின் நேரடி பார்வையில் திட்டங்கள் செயலாற்றப் பட்டு வருகின்றன. 1980-ல் இம் மாவட்டத் திற்கு புதிதாக உதவி வேளாண்மை இயக்குநர் அனுமதிக்கப்பட்டு 24—11—1980 அன்று உதவி வேளாண்மை இயக்குனர் பணியில் சேர்ந்தார்.

## குமரி மாவட்டத்தில் செயல்படும் சிறப்புத் திட்டங்கள்.

### 1. மண்வள ஆய்வு நிலையம் — இடலாக்குடி.

ஒவ்வொரு ஆண்டும் 12000 மண் மாதிரிகள் ஆய்வு செய்து விஞ்ஞான முறைப்படி விவசாயி களுக்கு பரிந்துரைகள் செய்திட மண் வள ஆய்வு நிலையம் ஒன்று ஒரு உதவி மண்வள நிபுணர் தலைமையில் இடலாக்குடியில் இயங்கி வருகிறது.

### 2. நடமாடும் மண் வள ஆய்வு நிலையம் — இடலாக்குடி.

விவசாயிகளின் நிலங்களில் நேரிடையாக சென்று மண் மாதிரிகள் எடுத்து அங்கேயே ஆய்வு செய்து சிபாரிசுகள் வழங்கிட ஒரு உதவி மண் வள நிபுணரின் தலைமையில் திட்டம் 1980 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

### 3. உழவர் பயிற்சி நிலையம் — திருப்பதிசாரம்.

குமரி மாவட்ட வேளாண் குடி மக்களுக்கு பயிற்சி அளித்திடவும் நவீன விஞ்ஞான முறைகளில் அவர்களை ஈடுபடுத்திடவும் 1978 முதல் திருப்பதிசாரத்தில் ஒரு உழவர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது ஒரு துணை வேளாண்மை இயக்குனரின் தலைமையில் நான்கு உதவி வேளாண்மை இயக்குனர்களால் செயல்படுத்தப்படுகிறது.

### 4. விவசாய பள்ளி — திருப்பதிசாரம்

விவசாயிகளின் குழந்தைகளுக்கு நவீன விஞ்ஞான வேளாண் முறைகளை சீரிய முறையில் கற்பித்திடவும் அதன் மூலம் அவர்கள் தம் தம் நிலங்களில் உற்பத்தியை பெருக்கிடும் பொருட்டும் ஒவ்வொரு ஆண்டும் 30 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர் களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 5. தென்னை அபிவிருத்தி திட்டம்

குமரி மாவட்டத்தில் அதிக பரப்பளவில் பயிர் செய்தும் மகசூல் குறைவாக இருப்பதால் இதனை உயர்த்திடும் பொருட்டு சிறப்பு திட்டம் ஒன்று அரசால் அனுமதிக்கப்பட்டு 1978 முதல் செய்யப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் முடிவில் ஒவ்வொரு தென்னையும் அதிகப்படியாக 6 காய்கள் கொடுக்கும்படி செய்ய உழவியல் முறைகள், ரசாயன உரங்கள் பயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் விவசாயிகளுக்கு தொழில் நுட்ப வசதிகள் செய்து தரப்படு கின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒரு உதவி வேளாண்மை இயக்குனரும் 8 துணை வேளாண்மை அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.



### 6. தென்னை வாடல் நோய் திட்டம்

தென்னையில்காணப்படும் வாடல் நோயின் தடுப்பு முறைகளையும் இந் நோய் குறித்த இதர தன்மைகளையும் ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஒரு நோயியல் நிபுணரின் கீழ் இம் மாவட்டத்தில் 1978-ம் ஆண்டு முதல் செயல் பட்டு வருகிறது.

### 7. தென்னை நோய் தடுப்பு திட்டம்

கேரளா மாநிலத்திலிருந்து தென்னை நோய்க் காரணிகள் இம் மாவட்டத்திற்குள் புகுந்து விடுவதை தடுக்கும் பொருட்டு இத் திட்டம் செயல் படுகிறது. இந்த திட்டத்தில் மூன்று உதவி வேளாண்மை அலுவலர்கள் குமரி மாவட்ட எல்லை பகுதிகளில் பணியாற்று கின்றனர்.

### 8. தென்னை நெட்டை — குட்டை ரக திட்டம்

குமரி மாவட்டத்தில் ஒட்டு ரக தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து வருடத்திற்கு சுமார் 1 லட்சம் கன்றுகள் வினியோகித்திட இத் திட்டம் 1980 முதல் செயல்பட தொடங்கி உள்ளது. நாகர்கோவிலை தலைமை இடமாக கொண்டு ஒரு உதவி வேளாண்மை இயக்கு னரும் 4 துணை வேளாண்மை அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் இத் திட்டத்தை செயல் படுத்துகின்றனர்.

### 9. நெல் பரிசோதனை துணை நிலையம் திருப்பதிசாரம்

குமரி மாவட்டத்திற்கென நெல் ரகங்களை உருவாக்கிடவும் பல ஆராய்ச்சிகள் நடத்திடவும் திருப்பதிசாரத்தில் ஒரு உதவி பயிர் நிபுணரின் கீழ் இந்த உப நிலையம் செயல்பட்டு வருகிறது.

### 10. ஒட்டுயிர் வளர்ப்பு நிலையம் நாகர்கோவில்

தென்னையில் காணப்படும் கருந்தலை புழுவை உயிரியல் தடுப்பு முறையின் மூலம் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் இந் நிலையத்தில் வளர்க்கப்பட்டு பயிர் பாதுகாப்பு வேலைகள் மேற் கொள்ளப்படுகின்றது.

## பொறுக்கு வித்துக்கள் வினியோகம்

| வரிசை எண். | வருடம் | வினியோகித்த விதையின் அளவு(டன்) |
|---|---|---|
| 1. | 1967-68 | 171.000 |
| 2. | 1968-69 | 172.752 |
| 3. | 1969 70 | 227.968 |
| 4. | 1970-71 | 194.985 |
| 5. | 1971-72 | 297.318 |
| 6. | 1972-73 | 184.288 |
| 7. | 1973-74 | 190.000 |
| 8. | 1974-75 | 169.499 |
| 9. | 1975-76 | 171.066 |
| 10. | 1976-77 | 280.105 |
| 11. | 1977-78 | 211.725 |
| 12. | 1978-79 | 158.020 |
| 13. | 1979-80 | 165.917 |
| 14. | 1980-81 | 165.000 |

# வேளாண்மைத் துறை

## வேளாண்மைப் பொறியல் பிரிவு 1

புவியல் அமைப்பின்படி, இம்மாவட்டத்தைப் மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். 1. சமவெளிப் பிரதேசம் 2. மலைப்பிரதேசம் 3. கடற்கரை பிரதேசம் ஆகும்.

மலைப் பிரதேசம் பெரும்பாலும் அரசாங்க வனங்களாகும். மலைப்பிரதேசத்தில் தனியார் களாலும், அரசினாலும் ரப்பர் பயிர் செய்யப் படுகிறது. மேலும் மரவள்ளிக்கிழங்கு, தென்னை, வாழை, கொக்கோ, கிராம்பு ஆகியவைகளும் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

மலைப்பிரதேசத்தில் காணப்படும் மண், பயிர் செழித்து வளர்வதற்கேற்ற சத்துள்ள வளமான மண்ணாகும். மலைப்பிரதேசம் மிகவும் சரிவாக உள்ளதால், எளிதில் மழைக்காலங்களில் மேல் மண் அரிமானம் ஏற்படுகிறது. இந்த அரிமானத்தைத் தடை செய்ய மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இம்மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியல் பிரிவு தேவையான மண் வளப்பாதுகாப்பு முறைகள் மேற்கொண்டு தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

சமவெளிப் பிரதேசம் மலை அடிவாரத்திலிருந்து ஆரம்பமாகி கடற்கரை பகுதிவரை பரந்து கிடக்கின்றது. சமவெளிப்பிரதேசம் சில இடங்களில் சரிவாகவும், சில இடங்களில் சம நிலமாகவும் இருக்கின்றது இப்பிரதேசத்தில் நெல், வாழை, மரவள்ளிக்கிழங்கு, ரப்பர், தென்னை ஆகியவை பயிர் செய்யப்பட்டு வருகின்றது. இப்பகுதியிலும் நிலச்சமன் செய்தல், நீர்ப்பராமரிப்பு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளடபடுகின்றன.

கடற்கரைப்பிரதேசம் மணல் பாங்காக அமைந்துள்ளது.

**மழை விபரம்:** இம்மாவட்டத்தில் சராசரியாக 1400 மில்லி மீட்டர் மழை பெய்கின்றது. இம் மழை தென்மேற்கு பருவக் காற்றாலும், வடகிழக்கு பருவக் காற்றாலும் சம அளவில் பெய்கின்றது. இம்மாட்டத்தின் மழை வளத்தாலும் இயற்கை வளத்தினாலும் எல்லா வகை பயிர் இனங்களும் பயிர் செய்ய வசதியாக அமைந்துள்ளது.

**நீர்ப்பாசன வசதிகள்:** இம்மாட்டத்தில் 1. பழையாறு 2. தாம்பிரபரணி 3. வள்ளியாறு ஆகிய மூன்று ஆறுகள் ஓடுகின்றன. மழைக் காலங்களில் மலைப்பாங்கான இடங்களில் உள்ள வளமான மேல் மண்ணை அரித்துச் சென்று நீர்த்தேக்கம், மற்றும் ஆற்றுப் படுகைகளில் படிகின்றன. இதனால் பயிர் நிலங்கள் மண் வளத்தினை இழக்கின்றன. இதனை உணர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் தொன்று தொட்டு தொழில் நுட்ப ரீதியில்லாமல், தன்னிச்சையாகவும், அனுபவ பூர்வமாகவும் தங்கள் நிலங்களில் மண் வளப்பாதுகாப்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பகுதி மக்களின் தேவையை உணர்ந்த அரசு தொழில் நுட்ப ரீதியோடு பொருளாதார உதவியோடு மண் வளப்பாதுகாப்புத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

### மண்வளப் பாதுகாப்பும் அதன் பயன்களும்

நிலத்தின் புவியியல் அமைப்பிற்கு ஏற்ப நிலத்தைச் சரிசெய்து கூடுதல் மகசூல் பெறும் வகையில் நிலத்தினைச் சீர்செய்வதே மண் வளப் பாதுகாப்பு ஆகும். இம்மாவட்டத்தில் புவியியல் அமைப்பினைப் பார்க்கும்போது நிலத்தின் அமைப்பு பொதுவாக சரிவாக உள்ளது. இதனால் மழைக்காலங்களில் வளம் மிக்க மேல் மண் மழை நீரால் அரிமானம் செய்யப்பட்டு நீர் தேக்கம், குளம், ஆறு ஆகியவைகளில் படிந்து நீரின் கொள்ளளவைக் குறைக் குறைக்கின்றது. மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்வதால், நிலங்களில் உள்ள வளமான மேல் மண்ணின் அரிமானத்தைத் தடை செய்வதுடன் நீர்த்தேக்கம், குளம், ஆறு ஆகியவைகளில் மண் படிவதை தடை செய்கின்றது. மேலும் மண்வளப் பாதுகாப்பு தரிசு நிலங்களை வளமிக்க பயிர்செய்யும் நிலங்களாக மாற்றுவதுடன் மகசூல் கூடுதல் கிடைக்க உதவுகின்றது.

### மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகள்

1) பெரும் மழை பெய்வதால் ஏற்படும் மண்ணரிப்பையும், மழை நீர் சேதத்தையும் மிகவும் குறைகக முடியும்.

2) மழைநீர் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த நீரை நிலத்திலேயே ஊறும்படி செய்யப்படுகிறது.



3) நிலத்தின் மண் தன்மையையும், நீர் உறிஞ்சும் தன்மையையும் அதிகப்படுத்துவதால் வேண்டிய அளவு நீர் நிலத்தினூடே சேகரிக்கப்பட்டு பயிர் சாகுபடி செய்யும்பொழுது பயிருக்கு உதவுகிறது.

4) நிலத்தின் ஊடே சேரிக்கப்பட்ட நீர் ஆவியாக மாறி அகற்றப்படுவதையும், நிலங்கள் வரண்டு போவதையும் தடுக்கிறது.

5) மண் வளப்பாதுகாப்புப் பணிகளை கையாளுவதால் நிலத்திலுள்ள மண் பக்குவப் படுத்தப்பட்டு, பயிர் விளைவுக்கு ஏற்ற தரத்தைக் கொடுப்பதால் அமோக விளைச்சலை நிரந்தரமாக அடைய முடிகிறது.

7) தரிசு நிலங்கள், மற்றும் கழிவு நிலங்கள் மேம்பாடு செய்யப்பட்டு பயிர் நிலங்களாக மாற்றப்படுகிறது.

மேற்கண்ட காரணங்களால் நாட்டின் உணவு உற்பத்தி பெருகுவதுடன் தனிப்பட்ட நில உரிமையாளர்களின் பொருளாதார வசதியும் உயருகிறது. மேலும் நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு மண் வளப்பாதுகாப்புப் பணிகள் மிகவும் தேவையாகும்:

### இவ் உபகோட்டத்தின் வரலாறு.

மேற் குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் அரசு 1964-65 நிதியாண்டில் இம்மாவட்டத்தில் மண் வளப்பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டி திருநெல்வேலி உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) மண் வளப்பாதுகாப்புத்திட்டம் அவர்களின் மேற்பார்வையில் இம்மாவட்டம், திருவட்டார் என்ற கிராமத்தில் ஒரு இளநிலை பொறியாளர், இரண்டு உதவி மண் வளப்பாதுகாப்பு அலுவலர், மற்றும் இரண்டு நில உதவியாளர்களுடன் ஒரு பிரிவு அலுவலகம் செயல் படத் துவங்கியது இப்பிரிவு அலுவலகம் சரிவு நிலங்களை ஆயவு செய்து, நிலத்தின் சரிவிற்கு ஏற்ப சம உயர கற்சுவாகளும், சம உயர படிமட்டமும், சம உயர வாய்க்கால் படிகளும் அமைத்து வருகிறது இப்பணியினால் ஏற்பட்ட நன்மைகளை நன்கு உணர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் இம்மாவட்டத்தில் ஒரு உபகோட்டம் தேவை என்று ளரசிடம் முறையிட்டனர். அரசு இசைந்து இம்மாவட்டத்திற்கு ஒரு உபகோட்டத்குற்கு ஆணை பிறப்பித்து 8—7—1968 முதல் இம்மாவட்டத்தில் ஒரு உபகோட்டம் செயல்பட துவங்கியது. இந்த உபகோட்டம் நான்கு பிரிவு அலுவலகங்கள் முறையே 1) நாகர்கோவில். 2) தக்கலை, 3 குலசேகரம் 4 குழித்துறை என்ற இடங்களில் கொண்டு இயங்குகிறது. உபகோட்டத்தின் வருடாந்திர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு நிதி உதவியும் வழங்கப்பட்டது குறியீடும் சாதனை விபரமும் அட்டவணையில் தரப் பட்டுள்ளது.

இந்த உபகோட்டத்தின் முக்கிய பணி மலைப்பிரதேசத்தில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடை செய்து மேல் மண் வளத்தைப் பாதுகாப்பது ஆகும். பெரும்பாலான மலைப் பகுதிகள் வனத்துறையைச் சார்ந்தது ஆகும். வனத்துறைக்கு சொந்தமான நிலத்தினை வனத்துறையினர் மேன்பாடு செய்து வருகின்றனர்.

எஞ்சியுள்ள தனியார் நிலங்களில் இந்த உபகோட்டம் இசைவு வாக்குமூலம் பெற்று மண் வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொண்டு வருகின்றது. மண் வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினங்களுடன் செயல் அமைப்புச் செலவாக 25 சதவிகித்தினைச் சேர்த்து மொத்த தொகையில் 40% அரசு மானியமாக நில உரிமையாளருக்கு வழங்கப்பட்டு வருகிறது, மீதியுள்ள தொகை நீண்ட காலக் கடனாக வழங்கப்படுகின்றது. இத்துடன் தொகையினை திட்டப் பணிகள் நிறைவு செய்து இரண்டு ஆண்டுகள் முடிந்த பின், சுலபமான பத்து ஆண்டுத்தவணைகளில் குறைந்த வட்டியுடன் திருப்பி செலுத்த வழி செய்கின்றது.

தற்பொழுது இந்த உபகோட்டத்தில் ஆறு பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன அவைகள் முறையே (1) நாகர்கோவில் பிரிவு எண். 1 (2) நாகர்கோவில் பிரிவு எண் -2 (3) தக்கலை, (4) குழித்துறை (5) குலசேகரம் (6) பூதப்பாண்டி ஆகும். திட்டம் செயல்பட ஆரம்பித்ததிலிருந்து (1964 65) 31—3—80 முடிய இவ்வுபகோட்டத்தினால் 6893 ஏக்கர் நிலங்களில் மண் வளப்பாதுகாப்புப்பணிகள் மேற்கொள்ளப் பட்ட வகையில் ரூபாய் 44, 42, 310/- செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வுபகோட்டம் 1976-77 மற்றும் 1977-78-ல் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாரத்தில் (1) வறட்சிப் பணியாக 31 கசிவு நீர் குட்டைகள் அமைத்து ரூபாய் 6,04,635/- செலவு செய்யப்பட்டது. (2) வறட்சிப் பணியாக பண்ணை குட்டை நான்கு அமைக்கப் பட்டு ரூபாய் 20,000/- செலவு செய்யப்பட்டது. (3) வறட்சிப் பணியாக சம உயர வரப்புகள் 4170 ஏக்கர் நிலத்தில் அமைத்த வகையில் ரூ. 1,54,647/- செலவு செய்யப்பட்டது.

இம்மாவட்டத்தில் 1978 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால், நெற்பயிர் செய்யும் நிலங்களில் மணல் மூடப்பட்டது. வெள்ள நிவாரணப் பணியாக 211 ஏக்கர் நெற்பயிரிடும் நிலங்களில் மணல் அக்றறப்பட்டு ரூபாய் 1,93,224/- செலவு செய்யப்பட்டது. இதன் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது

இவ் உபகோட்டம் 1979-80-க்கு முன்பாக நில உரிமையாளர்களின் விருப்பத்திற்கு இணங்க ஆங்காங்கே மண் வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொண்டது 1979-80-லிருந்து நதி நீர் பிடிப்பு வாரியாக மண் வளப்பாதுகாப்பு பணிகள் மேற் கொள்ளவேண்டும் என்ற அறிவுரையின்படி நதி நீர்பிடிப்பு வாரியாக ஆறு 100 ஏக்கர் மாதிரிப் பண்ணைகளைத் தேர்ந்தெடுத்து மண் வளப்பாதுகாப்புத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் பிரிவின் கீழ் இயந்திரங்கள் வாடகைத் திட்டத்தின் கீழ் ஒரு பிரிவுஅலுவலகம், உதவி செயற்பொறியாளர், மண் வளப்பாதுகாப்புத் திட்டம், நாகர்கோவில் அலுவலகத்தில் செயல்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளவிவசாய பெருங்குடி மக்களுக்கு பெரும் உதவி செய்து கொண்டிருக்கிறது இந்த பிரிவு அலுவலகத்தின் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு செய்துள்ள பெரும் உதவியினை அட்டவணையில் காணலாம். இந்தப் பிரிவு அலுவலகம், நாகர்கோவிலில் செயல்படாமலிருந்தால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாய பெருங்குடி மக்கள் அனைவரும் தங்கள் விவசாய வசதிக்காக இயந்திரங்களை திருநெல்வேலிமாவட்டத்தின் தலைநகரான திருநெல்வேலியிலிருந்து எடுத்து வந்து விவசாயத்திற்கு இயந்திரங்களை உபயோகித்துவிட்டு மீண்டும் திருநெல்வேலிக்கு கொண்டு சென்று ஒப்படைக்க வேண்டியிருக்கும். இதனால் கன்னியாகுமரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் செலவு அதிகரித்திருக்கும். இதனைத் தவிர்த்து கன்னியாகுமரி மாவட்ட விவசாய மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு ஒரு பிரிவு அலுவலகம் இயங்கி வருகிறது.

## நாகர்கோவில் விவசாய பொறியியல் (ஆய்வு) பிரிவு அலுவலகத்தில் வேலை செய்யும் இயந்திரங்கள் விபரமும் வாடகை விபரமும்

அட்டவணை

| இயந்திரங்களின் விபரம் | | வாடகை விபரம் | |
|---|---|---|---|
| | | விவசாயத்திற்கு மட்டும் | விவசாயம் அல்லாத வேலைக்கு |
| 1. புல்டோசர் | — 1 | மணிக்கு 85.00 ரூபாய் | மணிக்கு 100:00 ரூபாய் |
| 2. பெர்குசன் டிரில் | — 2 | ஒரு நாளுக்கு 18.00 ரூபாய் | ஒரு நாளுக்கு 85.00 ரூபாய் |
| 3. காலிக்ஸ் டிரில் | — 1 | ஒரு நாளுக்கு 15.00 ரூபாய் | ஒரு நாளுக்கு 37.00 ரூபாய் |
| 4. கம்ரசர் | — 2 | ஒரு நாளுக்கு 40.00 ரூபாய் | ஒரு நாளுக்கு 80.00 ரூபாய் |
| 5. கைத்துளை | — 1 | ஒரு நாளுக்கு 5.00 ரூபாய் | ஒரு நாளுக்கு 20.00 ரூபாய் |

# கன்னியாகுமரி விற்பனைக்குழு, நாகர்கோவில்

இம்மாவட்டத்தில் வேளாண்மை பொருள்களில் நடைபெற்றது வியாபாரத்தை மேலும் முறைப்படுத்தவும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டங்களை நிறுவி வேளாண்மை மற்றும் வணிகர் பெருமக்களுக்கு உதவவும் 30-10-65 நாளிட்ட உணவும் மற்றும் வேளாண்மைத் துறை அரசு ஆணை 4054-ன் படி விற்பனைக் குழு அமைக்கப்பட்டு, 6—6—1973-ம் நாள் முதல் தனி அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

குமரி மாவட்டம் முழுவதும் இக்குழுவின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியாகும். இதன் தலைமை இடம் நாகர்கோவில் இதுவரை இவ் விற்பனைக்குழு கீழ்கண்ட இடங்களில் ஒழுங்கு முறைவிற்பனைக்கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

| | இடம் | திறக்கப்பட்ட தேதி |
|---|---|---|
| 1. | ஈத்தாமொழி | 19—4—1967 |
| 2. | வடசேரி | 18—4—1968 |
| 3. | களியக்காவிளை | 25—7—1968 |
| 4. | திங்கள் சந்தை | 16—8—1969 |
| 5. | தொடுவெட்டி | 16—8—1969 |
| 6. | குலசேகரம் | 1—9—1975 |

1959-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனை சட்டத்தின் 4 1) பிரிவின் கீழ் அறிக்கையிடப்பட்ட வேளாண்மை விளைபொருள்கள் வருமாறு:-

1) தேங்காய்
2) முந்திரிக்கொட்டை
3) பனைவெல்லம்
4) புளி
5) நெல்
6) நிலக்கடலை
7) மரவள்ளிக்கிழங்கு
8) ரப்பர்.

### 3. நிதிநிலைமையும் வளர்ச்சியும்:

ஆரம்பத்தில் வியாபாரிகள் எதிர்ப்பினால் மிகுந்த நிதி நெருக்கடியை இவ்விற்பனைககுழு எதிர்நோக்க வேண்டி இருந்தாலும் அயராத முயற்சியால் வருமானம் படிப்படியாக உயர்ந்து, 1979-80-ல் ரூ. 11,22,898.76-யை எட்டியுள்ளது. கடந்த ஐந்தாண்டு வருட-செலவு விபரம் கீழ் வருமாறு:-

| ஆண்டு | வரவு ரூ. பை. | செலவு ரூ. பை. |
|---|---|---|
| 1975-1916 | 2,50,120·87 | 1,22,218·44 |
| 1976-1977 | 4,22,917·82 | 2,39,863·53 |
| 1977-1978 | 7,04,229·92 | 1,83,521·03 |
| 1978-1979 | 7,31,237·66 | 2,27,192·55 |
| 1979-1980 | 11,22,898·76 | 3,14,749·48 |
| 1980-1981 அக்டோபர் முடிய | 9,26,420·40 | 2,54,100·71 |

இது வரை வங்கியில் போட்டு வைக்கப் பட்டுள்ள, செலவழிக்கப்படாத உபரித்தொகை ரூ. 7,40 000.00. மிகுந்த சிக்கன நடவடிக்கையோடு, வளர்ச்சித் திட்டத்தில் முழுக்கவனம் செலுத்தி. வடசேரி, திங்கள்சந்தை. களியக்காவிளை மற்றும் குலசேகரம் ஆகிய இடங்களில் விற்பனைக்கூடங்களுக்கு சொந்த நிலங்கள் வழங்கப்பட்டன. மீதமுள்ள தொடுவெட்டி, ஈத்தாமொழி விற்பனைக்கூடங்களுக்கு நில ஆர்ஜிதம்செய்ய துரிதநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, கீழ்க்கண்ட விற்பனைக்கூடங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு:-

### 1. வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

| | | மதிப்பு ரூ. | பை |
|---|---|---|---|
| அ) | நிலம் (பரப்பு) 1 ஏக்கர் 26¼ சென்ட்) | 1,10,000 | 00 |
| ஆ) | மதில் சுவர் | 19,398 | 00 |
| இ) | வியாபார கொட்டகை<br>சுகாதார ஏற்பாடு<br>குடி தண்ணீர் வசதி<br>விளக்கு வசதி<br>கால்நடை கொட்டகை | 1,75,749 | 20 |
| ஈ) | நெல் கிடங்கு | 1.39,646 | 15 |



### 2) திங்கள் சந்தை விற்பனைக்கூடம்;

| | | ரூ. பை. |
|---|---|---|
| அ) | நிலம் (2 ஏக்கர் 45 சென்ட்) | 1,17,500.00 |
| ஆ) | மதில் சுவர் | 28,936.00 |
| இ) | வியாபாரக் கொட்டகை | 1,67,004.81 |
| ஈ) | குடிதண்ணீர் வசதி | 6,807.00 |
| உ) | கிடங்கு (கட்டிடப்பணி நடைபெறுகிறது) | 3,33,000.00 |

### 3) களியக்காவிளை விற்பனைக்கூடம்.

| | | |
|---|---|---|
| அ) | நிலம் (2 ஏக்கர் 9 சென்ட் 952 ச. லிங்ஸ்) | 1,32,728.40 |
| ஆ) | வியாபாரக் கொட்டைகை (கட்டிடப்பணி நடை பெறுகிறது) | 4,33,000.00 |

### 4) குலசேகரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்:

| | | |
|---|---|---|
| அ) | நிலம் (2 ஏக்கர் 39 சென்ட்) | 1,25,159.25 |
| ஆ) | வியாபாரக் கொட்டகை (கட்டிடப்பணி நடைபெறுகிறது) | 3,73,000.00 |

இதர இரண்டு விற்பனைக்கூடங்கள் மட்டும் வாடகை கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

### 4. அரசு மானியம்:

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வடசேரி, திங்கள் சந்தை, களியக்காவிளை மற்றும் குலசேகரம் விற்பனைக்கூடங்களுக்கு அபிவிருத்தி வேலைகளுக்கு ரூ. 4.00 லட்சம் மானியம் பெறப்பட்டுள்ளது. வடசேரி விற்பனைக்கூடததில் நெல் சேமிப்புக்கிடங்கு கட்டியதற்கு மத்திய அரசு மானியம் ரூ. 1.90 லட்சம் பெறப்பட்டது. ஊரகச் சந்தைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், திங்கள் சந்தை மற்றும் களியக்காவிளை விற்பனைக்கூடங்கள் அபி விருத்திப் பணிகளுக்கு ரூ. 1.50 லட்சம் மான்யம் பெறப் பட்டுள்ளது.

# அரசு ரப்பர் தோட்டங்கள்

தாவரங்களிலிருந்து பெறப்படும் முக்கிய முலப் பொருட்களில் ரப்பரும் ஒன்றாகும். இது பல்வேறு வகைகளில் உபயோகத்திலிருந்து வருகிறது. மோட்டார் மற்றும் ஊர்திகளின் சக்கரங்களுக்கு வேண்டிய டயர், டியூப் மற்றும் காலணிகள், காப்புறை மின கம்பிகள் தயாரிப்பு ஆகியவை ரப்பர் உபயோகிக்கப்படும் முக்கிய தொழில் துறைகளில் குறிப்பிடத் தக்கவை. சமீப காலத்தில் பெட்ரோலியம் விலையேற்றத்தினால் செயற்கை (இரசாயன) ரப்பர் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் ரப்பரை மூலப் பொருளாகக் கொண்டுள்ள தொழில்களின் வளர்ச்சிக்கு இயற்கை ரப்பர் இன்றியமையாததாக இருப்பதோடு அதனுடைய தேவையும் பெருகி வருகிறது. நமது நாட்டில் ரப்பர் பயிரிடுதல் அதிக லாபம் கொடுக்கக்கூடிய தோட்டப் பயிர்களில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே ரப்பர் பயிரிடப்படுகிறது. இயற்கை உரம் செறிந்த, நீர் வடியும் தன்மையுள்ள மண்வளமும், சமசீதோஷ்ண நிலையும் வருடத்தில் கால மழை இரண்டினையும் பெற்று பரவலாக மழைவளம் மிக்கதான சூழ்நிலை இம்மாவட்டத்தில் இருப்பதால் ரப்பர் மரங்கள் நல்ல தரமான வளர்ச்சி பெற்று மிக அதிகப்படியான ரப்பர் பால் அளித்திட வாய்ப்பு உள்ளது. எனவே, தமிழ்நாடு வனத்துறையினர் வகுத்த திட்டத்தின் படி 1960-ல் ஆரம்பித்து 1965-ம் வருடத்திற்குள் 1200 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டம் பயிரிடப்பட்டது. ஆரம்ப முயற்சிகள் வெற்றிகரமாக இருந்ததால் பெருமளவில் மேலும் ரப்பர் பயிரிடுதல் தொடர்ந்து நடைபெற்றது. 1979-ம் வருடம் முடிய 4785.70 ஹெக்டர் பரப்பளவில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. அவ்வாறு வருடவாரியாக பயிரிடப்பட்ட தோட்டங்களின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக ரப்பர் மரங்கள் நடப்பட்ட ஆண்டிலிருந்து ஏழாவது ஆண்டு முதல் பலன் தர ஆரம்பிக்கும். இம்மரங்கள் மூலம் கிடைக்கின்ற அதிகப்படியான பலன் 14-வது ஆண்டு முதல் ஆரம்பமாகும். சாதாரணமாக நல்ல ஒட்டுச் செடிகளை நட்டு வளர்த்தால் ஒரு ஹெக்டேருக்கு 1250 முதல் 2000 கிலோகிராம் வரையிலும் ரப்பர் பால் கிடைத்திட வாய்ப்புள்ளது. கன்னியாகுமரி அரசு ரப்பர் தோட்டங்களில் மலேசியா போன்ற நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட உயர் ரக ரப்பர் மரங்கள் நடப்பட்டுள்ளன. இன்று அத்தகைய உயர்மர விதைகளையும் நாம் மற்ற இடங்களுக்கு வழங்க முடியும். ரப்பர் பால் சேகரம் செய்யப்படும் சுமார் 1600 ஹெக்டேர் பரப்பளவிலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களிலிருந்து வருடமொன்றிற்கு சுமார் ரூபாய் 1.50 கோடியிலிருந்து ரூ. 2.00 கோடி வரை வருமானம் கிடைக்கிறது.

ரப்பர் பால் பதனிடுவதற்கென கீரிப்பாறை என்ற இடத்தில் அமைந்துள்ள அரசு ரப்பர் தொழிற்சாலை மிகப்பெரியதும், சகல வசதிகளுமுடையதாகும். இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 10 டன் ரப்பர் ஷீட், கிரேப் ரப்பர் கட்டியான ரப்பர் பால் இவைகளை தயாரிக்கும் திறன் கொண்டதாகும்.

மேலும், பெருஞ்சாணி பகுதியில் ரூ 21 இலட்சம் முதலீட்டில், ஒரு ரப்பர் ஷீட் தொழிற்சாலையும் இவ்வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 8 டன் ஷீட் ரப்பர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இத்தொழிற்சாலையில் சுமார் 40 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மைலார் பகுதியில் ரூ 35 இலட்சம் முதலீட்டில் ஒரு கிரம்ப் (கட்டி) ரப்பர் தயாரிக்கும் தொழிற் சாலையும் நிறுவ தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை நிர்மாணிக்க ஆயத்த வேலைகள் நடை பெற்று வருகின்றன. நாள் ஒன்றுக்கு 10 டன் கிரம்ப் ரப்பர் தயாரிக்கும் திறன் கொண்ட இத்தொழிற்சாலை 1981-ம் வருடம் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலையினால் சுமார் 80 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

அரசு ரப்பர் தோட்டங்களில் சுமார் 2000 ஆண், பெண் தொழிலாளர்கள் நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். அவர்களில் பெரும் பாலோருக்கு வீட்டு வசதி, குடி தண்ணீர் வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, மின்சார வசதி மற்றும் பொழுது போக்கு வசதி போன்றவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பரளியார், கீரிப்பாறை, சித்தார், குத்தியார் ஆகிய ரப்பர் தோட்டங்களில் முறையே ஒன்று வீதம் மொத்தம் நான்கு ஆரம்ப கல்வி நிலையங்கள் சிறப்பான முறையில் செயல் பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மதிய உணவுத் திட்டமும் செவ்வனே செயல் படுத்தப்பட்டு வருகிறது.



கீரிப்பாறை கோட்டத்தில் 10 படுக்கைகள் உடைய ஒரு மருத்துவ மனையும் சித்தார் கோட்டத்தில் 6 படுக்கைகள் உடைய ஒரு மருத்துவ மனையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பரளியார், காளிகேசம், மணலோடை. மைலார் மற்றும் குத்தியார் கோட்டங்களில் முறையே ஒன்று வீதம் மொத்தம் 5 மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

கீரிப்பாறை, பரளியார், மணலோடை, சித்தார் குத்தியார் கோட்டங்களில் முறையே ஒன்றுவீதம் மொத்தம் 5 குழந்தைகள் காப்பகங்களும், ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் அரசு ரப்பர் தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு தோறும் மழை காலங்களை சமாளிப்பதற்காக போர்வையும் குடையும் வழங்கப்படுகிறது.

இலங்கை அகதிகளை குடியமர்த்துவதற்கென ஏற்படுத்தப்பட் சித்தார் குத்தியார், கோட்டங்களில் எல்லா தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 237 இலங்கை அகதிகள் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அரசு ரப்பர் தோட்டங்களில் இதுவரை தொழிலாளர்களுக்கு சுமார் 600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் மொழிலாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு கூலிகள் (நாள் ஒன்றுக்கு) கொடுக்கப் பட்டு வருகின்றது.

| | முதல் தரம் ரூ. | 2-ம் தரம் ரூ |
|---|---|---|
| 1. களத்தொழிலாளர்கள் | 12.57 | 12.19 |
| 2. பால் வெட்டுத் தொழிலாளர்கள் | 12.87 (இரு பிரிவினருக்கும்) மற்றும் அதிக பாலுக்கு ஊக்க ஊதியம் | |
| 3. தொழிற்கூட ஊழியர்கள் | 13.32 | 12.89 |

இந்தியாவிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கூலி விகிதத்தில் கன்னியாகுமரி மாவட்ட அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியின் விகிதமே அதிகமானதாகும்.

இவ்வாறு பலவகையிலும் சிறப்பாக செயல் பட்டுவரும் கன்னியாகுமரி மாவட்ட அரசு ரப்பர் தோட்டங்கள் தமிழ்நாடு வனத்துறையில் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கிறது என்று கூறினால் மிகையாகாது.

1960-ல் 60.30 ஹெக்டேரில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை 4785.70 ஹெக்டார் அளவில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது.

| வருடம் | பயிரிடப்பட்ட ரப்பர் தோட்ட பரப்பளவு ஹெக்டேர் |
|---|---|
| 1960 | 60.30 |
| 1961 | 181.00 |
| 1962 | 148.80 |
| 1963 | 209-10 |
| 1964 | 335.20 |
| 1965 | 336.40 |
| 1966 | 214 20 |
| 1967 | 198.80 |
| 1968 | 220.10 |
| 1969 | 193.10 |
| 1970 | 204.60 |
| 1971 | 247 60 |
| 1972 | 330 00 |
| 1973 | 340.50 |
| 1974 | 255.10 |
| 1975 | 262.30 |
| 1976 | 211.70 |
| 1977 | 220.70 |
| 1978 | 205.70 |
| 1979 | 410.50 |
| மொத்தம் | 4785.70 |

## 1979—80

I (a) கிடைக்கும் இரப்பரின் அளவு — 16,61,807 Kgs.
(b) இரப்பர் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் ரூ. 1,52,46,590.75

II (a) நிதி ஒதுக்கீடு ரூ. 1,52,04,000.00
(b) செலவு செய்யப் பட்ட தொகை ரூ. 1,73,14,714 20

III நிதி ஒதுக்கீடு 1980-81 ரூ. 1,56,83,000.00

# கிராம்பு உற்பத்தி திட்டம்

கிராம்புச் செடிகள் முதலில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலம் மலையிலும் நீலகிரி மாவட்டத்திலுள்ள பரளியார் தோட்டத்திலும் உற்பத்தி செய்யப் பட்டன. கிராம்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதால் அதை மேலும் உற்பத்தி செய்ய தமிழக அரசு திட்டமிட்டது. கிராம்பு விலை தற்போது கிலோவுக்கு ரூ. 150 முதல் 200 வரை உள்ளது. ஆதலால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பட்டா காடுகளிலும், தனியார் கிராம்பு பயிரிட்ட முன்வந்துள்ளனர். அதன் பயனாக இந்தியாவிலேயே முதல் முதலில், மத்திய அரசு நிதி உதவியோடு. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைகளின் மண்வளமும் தட்பவெட்ப நிலையும் கிராம்பு உற்பத்திக்கு உகந்தது எனக்கருதி. தமிழக அரசு ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சி திட்டத்தின்கீழ் 1976-77 முடிய 100 ஹெக்டர் பரப்பளவில் கிராம்பு உற்பத்தி செய்ய ஒப்புதல் அளித்தது. அத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு வனத்துறையில் அதற்கென தனித் தோட்டம் நாகர்கோவிலில் அரசு ஆணை எண் 700 தேதி 24.7.1975-ன் படி ஆரம்பிக்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் 1976-77-ல் 31 ஹெக்டரிலும், 77-78-ல் 36 ஹெக்டரிலும் 78-79-ல் 35 ஹெக்டரிலும் கிராம்பு பயிர் செய்யப்பட்டுள்ளது.

# வனத்துறை

இம்மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகள் திருநெல்வேலி தென் கோட்டத்தின் வாயிலாக கண்காணிக்கப் பட்டு வந்தது. 1—4—1977 முதல் இக்கோட்டம் தனியாகப் பிரிந்து செயல் பட்டு வருகிறது.

கீழ்க்கண்ட வனப்பகுதிகள் இக்கோட்டத்தில் உள்ளவைகளாகும்

| | | | |
|---|---|---|---|
| 1) | தெற்குமலை கிழக்கு | — 11.87 | சதுரகிலோமீட்டர் |
| 2) | தெற்குமலை மேற்கு | — 9.07 | |
| 3) | தாடகைமலை | — 6.75 | ” |
| 4) | பொய்கைமலை | — 7.75 | ” |
| 5) | மகேந்திரகிரி | — 43.73 | ” |
| 6) | வேலிமலை | — 12.82 | ” |
| 7) | வீரபுலி | — 248.50 | ” |
| 8) | பேச்சிப்பகாறை பகுதி 1. எ | — 0.26 | ” |
| 9) | பேச்சிப்பாறை பகுதி 1. பி | — 0.33 | ” |
| 10) | கல்குளம் பகுதி 1 | — 0.39 | ” |
| 11) | கல்குளம் பகுதி 2 | — 0.44 | ” |
| 12) | கிளாமலை | — 62.16 | ” |
| 13) | தொடலிக்காடு | — 1.54 | ” |
| 14) | அசம்பு | — 39 84 | ” |
| | | | ” |
| | மொத்தம். | 446.50 | ” |

இக்கோட்டத்தின் மொத்த விஸ்தீரணம் 446.50 சதுர கிலோமீட்டர். இது கன்னியாகுமரி மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 26.7 சதவீதம் ஆகும். இக்காடுகள் மிகவும் செழிப்பானவை. இங்குள்ள வனப்பகுதிகளில் தேக்கு, மருது வேங்கை, ஈட்டி, மூங்கில் மற்றும் பல விலை உயர்ந்த மர வகைகள் உள்ளது. இதைத் தவிர யானை, மான் காட்டுப் பன்றி முதலிய வன விலங்குகளும் உள்ளன.



## 2. வனக்கோட்டத்தின் நிர்வாக அமைப்பு.

இக்கோட்டம் திருநெல்வேலிமண்டலத்துடன் இணைக்கப்பட்ட வனக்கோட்டமாகும். இக்கோட்டம் 4 நிலப்பரப்பைச் சார்ந்த வனச்சரகங்களாகவும், 2 தனி வனச்சரங்களாகவும் மொத்தம் 6 வனச்சரகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவைகளின் விவரம் கீழ் வருமாறு:

1. குலசேகரன்
2. அழகியபாண்டிபுரம்
3. பூதப்பாண்டி
4. மேல் கோதையார்
5. நில அளவியல்
6. வன மரமண்டி

## 3. செய்யப்பட்ட பணிகள்

இதுவரை இக்கோட்டத்தின் கீழ்க்கண்ட மரங்கள் பயிரிடப் பட்டுள்ளது.

| | | ஹெக்டேர். |
|---|---|---|
| 1. | தேக்குமரத் தோட்டங்கள் | — 2271.00 |
| 2. | வெளிமரத்தோட்டங்கள் | — 2512.00 |
| 3. | மூங்கில் மரத்தோட்டங்கள் | — 102.00 |
| 4. | யூகலிப்டஸ் மரத் தோட்டங்கள் | — 37.50 |
| 5. | புளிய மரத்தோட்டங்கள் | — 25.00 |

1977-78ம் ஆண்டு முதல் 1979-80ம் ஆண்டு வரை திட்ட வேலைகளின் அடிப்படையில் அட்டவணை 1ல் கண்ட தோட்ட உற்பத்தி வேலைகள் செய்யப்பட்டுள்ளன. 1980-81ம் ஆண்டில் அட்டவணை 2ல் கண்ட தோட்ட உற்பத்தி வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

## 4. வனமண்டி: நாகர்கோவில்:

காட்டிலிருந்து வெட்டப்பட்ட மரத்தடிகளைப் பெற்று பாதுகாத்து வைத்து அதனை மாதாமாதம் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் மற்றும் வனப்பயன்பாட்டு அலுவலரின் ஆணையின் படியும் அடுத்தத்துறைகளுக்கு அவர் ஒதுக்கீடு செய்தமரங்களைக் கொடுப்பதும் இம்மண்டியின் பணியாகும். ஏலங்களினால் கீழே குறிப்பிடப் பட்டுள்ள வருமானங்கள் வனத்துறைக்கு கிடைத்துள்ளன.

### தடிகள் ஏலம் பற்றிய விபரம்

| வருடம் | ஏலம் செய்யப்பட்ட மரத்தின் அளவு | ஏலத்தின் மூலமாக வந்துள்ள வருமானம் |
|---|---|---|
| 1976-77 | 7343.941 க. மீட்டர் | ரூ. 48,94,236 |
| 1977-78 | 9369.052 ,, | ரூ. 50,75,355 |
| 1978-79 | 4898.700 ,, | ரூ. 48,01,700 |
| 1979-80 | 5087.692 ,, | ரூ. 93,74,600 |

## 5. மேய்ச்சல்

வனங்களுக்கு அருகாமையிலுள்ள கிராமங்களில் ஆடு, மாடு, யானை போன்ற கால்நடைகளை காடுகளில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கும் வகையில் அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை உடைமைதாரர்களிடம் இருந்து வசூல் செய்து அனுமதிச் சீட்டுகள் வழங்கி கால்நடைகளைக் காடுகளில் மேய்க்க அனுமதித்து இத்துறை பொதுமக்களுக்கு உதவி வருகிறது. கீழ்க்கண்டவாறு ஒரு வருடத்திற்கு மேய்ச்சல் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| யானை ஒன்றுக்கு ரூ | 30 | வருடத்திற்கு |
| எருமை ஒன்றுக்கு ரூ | 4 | ,, |
| பசு மற்றும் காளை ரூ. | 2 | ,, |
| செம்மறிஆடு ஒன்றுக்கு ரூ. | 1 | ,, |

வனத் தோட்டங்களை அழிக்கும் வெள்ளாடுகள் அனுமதிக்கப்படுவதில்லை.

## 6. கடல் அரிப்பு தடுப்புத் திட்டம்:

இக்கோட்டத்தைச் சார்ந்த கோவளம் என்ற இடத்தில் கடலினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு கடலோரப் பகுதிகளில் 60 ஏக்கர் சவுக்கு ஓடை தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இப்பணியினால் மீனவர்கள் வாழும் கோவளம் என்ற கிராமம் மண்ணால் மூடப்படாமலும் சுற்றிலும் உள்ள செழிப்பான வயல்கள் மணல் விழுந்து சேதமாகாமலும் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இத்தோட்டங்களைப் பாதுகாக்கும் பொருட்டு வனக்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 7. காணிக்காரர்களின் குடியமைப்பு:

இக்கோட்டத்தைப் பொறுத்தவரையில் 47 காணிக்குடிகள் உள்ளன. இவைகளில் மொத்தம் 618 காணிக் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 5 ஏக்கர் வீதம் இலவசமாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்காக மொத்தம் 1257.38 ஹெக்டேர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வனத்துறையில் பல்வேறு திட்டங்களில் நடைபெறும் வேலைகளுக்கு மலைஜாதியினர் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு அவர்கள் வாழும் இடத்திலேயே உழைத்து ஊதியம் பெறவும் வனத்துறை வழி வகை செய்துள்ளது. காட்டிலுள்ள சில்லறை மகசூல் பொருட்களைச் சேகரம் செய்து கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய வன இலாகா அனுமதி அளித்துள்ளது. மற்றும் இக்குடிகளுக்கு கல்வி, குடிநீர், மருத்துவம் போன்ற வசதிகள் அரிசன நலத்துறை மூலமாக வன இலாகாவில் கண்காணுப்பில் கீழ் செயது தரப்பட்டிருக்கிறது மற்றும் மலையில் வாழும் காணிக்குடிகளின் நிலங்களை மண் அரிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு ரப்பர் மரங்களை நடுவதற்கும் மற்றும் அவர்களின் மேம்பாட்டிற்காக ஆவன செய்வதற்கும் எண்பது லட்சம் ரூபாய் அளவில் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு இந்தத்திட்டத்தைத் துவக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 1

| வரிசை எண். | தோட்டங்களின பெயர் | பயிரிடப்பட்ட பரப்பு ஹெக்டார் | செலவு செய்யப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1977–78 | | | |
| 1 | மென் மரம் | 92.70 | 41,964.73 |
| 2 | கூழ் மரம் | 48.50 | 29,716.52 |
| 1978–79 | | | |
| 1 | மென் மரம் | 51.30 | 30,473.26 |
| 2 | கூழ் மரம் | 17.50 | 25,515.40 |
| 3 | தேக்கு | 79.30 | 24,505.40 |
| 4 | சில்லரை வன மகசூல் | 5.00 | 8,457.00 |
| 1979–80 | | | |
| 1 | மென் மரம் | 21.05 | 72,960.00 |
| 2 | கூழ் மரம் | 80.00 | |
| 3 | தேக்கு | 13.80 | 8,360.00 |
| 4 | சில்லரை வன மகசூல் | 20.00 | 33,680.00 |
| 5 | கிராமக்காடுகள் (சாலை ஓரம் மரம் நடுதல்) | 7.09 கி.மீ. | 14,240.00 |

### அட்டவணை-2

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | சாதனை | நிதி ஒதுக்கீடு | நிதியில் செலவு சாதனை |
|---|---|---|---|---|---|
| | | ஹெக்டேர் | ஹெக்டேர் | ரூ. | ரூ. |
| 1. | மென்மரம் | 22.25 | 22.25 | 50000.00 | 13884.65 |
| 2. | கூழ் மரம் | 100.00 | 100.00 | 25000.00 | 37154.80 |
| 3. | கிராமக்காடுகள் (சாலை ஓரம் மரங்கள் நடுதல்) | 10 கி.மீ. | 10 கி.மீ. | 10000.00 | 12788.00 |



# பொதுப்பணித்துறை

தாமிரவருணி ஆறு கன்னியாகுமரிமாவட்டத்திலுள்ள பெரிய ஆருகும் இதற்கு கோதையாறு, பரலியாறு என்னும் இரு முக்கிய சிற்றுறுகள் உண்டு. சிற்றாறு 1-ம் 2ம் கோதையாற்றின் கிளைகளில் முக்கியமானவையாகும். தாமிரபரணியாறு மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து உற்பத்தியாகி குமரி முனையிலிருந்து 35 மைல் தொலைவில் உள்ள தேங்காப்பட்டினம் என்னுமிடத்தில் அரபிக்கடலில் கலக்கிறது.

பழையாறு நாகர்கோவிலில் இருந்து ஒரு மைல் வட மேற்கிலுள்ள சுருளோடு என்னும் இடத்திலிருந்து தொடங்குகிறது. இது கோதையாறு திட்டத்தின் கீழுள்ள அனந்தனார், தோவாளை கால்வாய் மற்றும் நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாய் களிலிருந்து வரும் கழிவு நீரை சேகரித்து செல்லும் ஆறு ஆகும் இதைத் தவிர வள்ளியார் மற்றும் பன்னிவாய்க்கால் ஆகிய இரு ஆறுகளும். கோதையாறு கால்வாயிலிருந்து பிரியும் பத்மனபபுரம் புத்தனார் கால்வாயிலும் அதன் கீழ் உள்ள கிளை கால் வாய்களிலும் இருந்து வரும் கழிவு நீரை சேகரித்து செல்லும் ஆறுகளாகும். இந்த எல்லா ஆறுகளும் குமரிமுனைக்கும் தேங்காப்பட்டினத்திற்கும் இடையில் அரபிக்கடலில் சேருகிறது.

சுமார் அயிரம் ஆண்டுகளுக்கு முன்னையில் இருந்து இந்த மாவட்டத்தில் பாசன வேலைகள் நடைபெற்று வருகின்றன. பாண்டியன் அணை பரலயார் ஆற்றில் கட்டியிருக்கும் திருப்புமதகு ஆகும். இதிலிருந்து பாசனத்திற்காக பாண்டியன் காலில் தண்ணீர் செல்கிறது. பாண்டியன் கால் சுருளோடு என்னுமிடத்தில் பழையாற்றில் சேருகிறது இங்குள்ள மக்களின் நாகரிகத்தை விளக்கும் பொறியியல் திறன் உள்ள நினைவுச் சின்னங்கள் அங்கு உள்ளன.

பாண்டியன் அணை சிறிது சிறிதாக வண்டல் நிரம்பியதால் அதன் திறமை பலவீனமடைந்தது. எனவே சுமார் 200 வருடங்களுக்கு முன் சேர மன்னர் ஸ்ரீ மார்த்தாண்டவர்மா புத்தன் அணை என்னும் வேறொரு திருப்புமதகை பரலயார் ஆற்றில் சுமார் இரண்டு பர்லாங் கீழ் பாகத்தில் கட்டி, பத்மனபபுரம் புத்தனார் என்ற கால்வாயை அமைத்தார்.

பாண்டியன் அணையும் புத்தன் அணையும் திருப்பு மதகுளாகும். காலம் செல்ல செல்ல நிரந்தரமான தண்ணீர் விநியோகம் தேவைப்பட்டதால் கோதையாறு (பேச்சிப்பாறை அணை மகாராஜ ஸ்ரீ மூலம் திருநாளின் காலத்தில் கட்டப்பட்டது. அதனல் சுமார் 50,000 ஏக்கர் பரப்பளவு பாசன வசதி பெற்றது. பிறகு பேச்சிப்பாறை அணையின் கீழ் உள்ள பாசனப் பரப்பளவு அதிகரித்ததால் தண்ணீர் கூடுதலாக தேவைப்பட்டது. பரலயாறில் பெருச்சாணி என்னும் அணையைக் கட்டி மொத்தம் சுமார் 64,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசன வசதி கொடுக்கப்பட்டது.

1963-ல் சிற்றுறு 1 மற்றும் சிற்றுறு 2 ஆகிய ஆறுகளில் முறையே சிற்றுறு அணை 1 சிற்றுறு அணை 2 என்னும் இரு அணைகள் கட்டபபட்டன. இதன் கீழ் பாசன பரப்பளவு கன்னியாகுமரி மாவட்டத்தில் 15.000 ஏக்கரும் திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் தூணைவட்டத்தில் 17,000 ஏக்கரும் ஆகும்.

## 1. பேச்சிப்பாறை அணை.

இது 1897 முதல் 1906 வரை ஆங்கிலேயப் பொறியாளர் திரு மின்சென் அவர்களால் கோதையாற்றில் கட்டப்பட்டது. இது கல்லாறு சிற்றும், குட்டியாறு என்னும் மூன்று கிளைகளும் கோதையாற்றில் சேரும் இடத்திலிருந்து ஒரு மைலுக்குக் கீழ் பேச்சிப்பாறை என்னும் இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த இடம் குலசேகரத்துக்கு வடக்கே 7 வது மைலில் நாகர்கோவிலிலே இருந்து 28 மைல் தொலைவில் உள்ளது இது கட்ட ரூ 26.1 லட்சம் செலவிடபபட்டுளளது. இதன் கொள்ளளவு 5.06 மில்லியன் கன அடியாகும்.

## 2. பெருஞ்சாணி அணை.

இந்த அணை 1948 முதல் 1953 வரை திருவிதாங்கூர் கொச்சி மாநிலததால் கட்டப்பட்டது. பரலயாற்றில் பெருஞ்சாணி என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ளது. இது குலசேகரத்தில் இருந்து 6 மைல் கிழக்கிலும் நாகர்கோவிலில் இருந்து சுமார் 26 மைல் மேற்கிலும் உள்ளது இது இரு குன்றுக்கிடையில்கட்டப்பட்டுள்ளது. இது. ரூ. 19.00 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது இதன் கொள்ளளவு 28.90 மில்லியன் கனஅடியாகும்.

## 3. சிற்றுறு அணை 1.

இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 2000 அடி உயரத்திற்கு மேற் கிளாமலை வனத்தின்

எட்டுக்காணிக்கும் வண்டிபிலாவு காணிக்கும் பக்கத்தில் சிற்ருறு 1, கோதையாற்றில் சேருவதற்கு ஒரு மைல் மேல் பாகத்தில் கட்டப்பட்டுள்ளது. இதன்கொள்ளவு 5 10 மில்லியன் கன அடியாகும்.

### 4. சிற்ருறு அணை 2:-

இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 2300 அடிக்கு மேல் கிளாமலை வனத்தில் குறிஞ்சி மலை தென்கிழக்குச் சரிவில் சிற்ருறு 2-ல் கட்டப்பட்டுள்ளது. இதன் கொள்ளளவு 100 மில்லியன் கன அடியாகும்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 பாசன திட்டங்கள் உள்ளன.

1. கோதையாறு திட்டம்
2. நெய்யாறு திட்டம்
3. திற்பரப்பு மதகு திட்டம்
4. அருவிக்கரை மதகு திட்டம்
5. சிற்ருறு பட்டணங்கால் திட்டம்

### 1. கோதையாறு திட்டம்;

இந்த் திட்டத்தில் பேச்சிப்பாறை அணையும் பெருஞ்சாணி அணையும் அதைச்சார்ந்த கால்வாயும் வருகிறது. இத்திட்டத்தில் இம்மாவட்டத்தில் கல்குளம், அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய வட்டரங்களில் உள்ள 58, 28 ஏக்கர் நிலபரப்பு பாசனவசதி பெறுகின்றன இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட பாசனப் பரப்பளவு 64,000 ஏக்கர் ஆகும். இந்த நிலப் பரப்பிற்கு கீழ்வரும் மூன்று கால்வாய்களால் பாசன வசதியளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. தோவாளை கால்வாய் | 12864 | ஏக்கர் |
| 2. அனந்தனர் கால்வாய் | 9,901 | ஏக்கர் |
| 3. பத்மனுபபுரம் புத்தனர் கால்வாய் | 19,702 | ஏக்கர் |
| 4. நாஞ்சில் நாடு புத்தனர் கால்வாய் | 1.5,822 | ஏக்கர் |

பழையாறு உட்பட

இத்திட்டத்தின் கீழ் கால்வாய்களின் நீளம்–

| | | |
|---|---|---|
| 1. பிரதம கால்வாய் | 38 | மைல் |
| 2. கிளை கால்வாய்கள் | 106 | மைல் |
| 3. இயல் கால்வாய்கள் | 104 | மைல் |

எல்லா வருடமும் ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து பெப்ருவரி மாதம் முடிய பாசனத்திற்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது.

### 2. நெய்யாறு திட்டம்:

நெய்யாறு அணை கேரளா மாநிலத்தில் உள்ளது. இரு பக்கங்களிலும் கால்வாய் உள்ளன. மாநிலச் சீரமைப்பால் நெய்யாறு இடது கரை கால்வாயின் கீழ் உள்ளபாசன பரப்பளவில் ஒரு பாகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் நாட்டில் வந்தது. கன்னியாகுமரி கிளை கால்வாய், நெய்யாறு இடது கரை கால்வாய் மைல் 24/2 80-ல் இருந்து தமிழக அரசால் வெட்டப்பட்டது. இது 1959-ல் தொடங்கி 1963-ல் முடிவுற்றது. கேரள அரசு தமிழக அரசு உடன்படிக்கையின்படி கேரளா அரசு கன்னியாகுமரி கிளை கால்வாயில் 150 கன அடி தண்ணீர் விட வேணடும்.

| | | |
|---|---|---|
| நிர்ணயிக்கப்பட்ட பாசனப்பரப்பளவு | 9200 | ஏககர் |
| அமைநத பாசனப்பரப்பளவு | 5800 | ஏக்கா |
| அபிவிருத்தி அடைந்த விஸ்தீர்ணம் | 3404.97 | ஏக்கர் |
| கிளைகால்வாய் நீளம் | மைல் 28/1-480 | |

### 3. திற்பரப்பு மதகு திட்டம்.

இது குலசேகரத்திலிருந்து 5 மைல் வடமேற்கில் கோதையாறு ஆற்றில் கட்டியிருக்கும் மதகாகும். இதற்கு இரு கரையிலும் கால்வாய்கள் உள்ளன. இடது கரை கால்வாய் நீளம் மைல் 11/3–330. அதன் கீழ் பாசன பரப்பளவு 401·47 ஏக்கர்.

வலது கரை கால்வாய் நீளம் மைல் 5/2–330 அதன் கீழ் பாசனப் பரப்பளவு 483.39 ஏக்கர்.

### 4. அருவிக்கரை மதகு திட்டம்:-

இது திருவட்டார் பக்கத்தில் அருவிக்கரை என்னுமிடத்தில் பரளியாற்றில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு வலதுகரையிலும் இடது கரையிலும் கால்வாய்கள் உள்ளன.

அருவிக்கரை இடது கரை கால்வாய் நீளம் மைல் 8/0 00 பாசனப் பரப்பளவு 156.91 ஏக்கரும் ஆகும்.

அருவிக்கரை வலது கரை கால்வாய் நீளம் மைல் 2/5.00 பாசன பரப்பளவு 530.28 ஏக்கர்.

### 5. பட்டணங்கால் திட்டம்.

இத்திட்டத்தின் சிற்ருறு 1, மற்றும் சிற்ருறு 2–ல் இரு மண் அணைகள் கட்டப்பட்டு ஒருகால்வாயால் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பேச்சிப்பாறை அணை மற்றும் பெருஞ்சாணி அணை ஆகியவை 6 அடி உயர்த்தப்பட்டது. சிற்ருறு அணை 1-ல் இருந்து ஊட்டு கால்வாய் கோதையாறு இடதுகரை கால்வாய் மைல் 6 4–200-ல் இருந்து பட்டணங்கால் வெட்டப்பட்டுள்ளது. பட்டணங்கால் பிரதம கால்வாய் நீளம் மைல் 2-6--210 இத்திட்டத்தில் 15,000 ஏக்கர் நிர்ணயிக்கப்பட்ட பாசனப் பரப்பளவாகும். இதனல் விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டங்களிலுள்ள நிலப்பரப்பு பாசன வசதி பெறுகின்றது. இது வரையிலும் 9365.065 ஏக்கர் நிலப்பரப்பு அபிவிருத்தி அடைந்துள்ளது.



பட்டணங்கால் திட்டத்தின் கீழ் ராதாபுரம் கால்வாய் நிலப்பாறை கால்வாய் மைல் 1 / 2–250-ல் இருந்து வெட்மப்பட்டுள்ளது. இது திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் துணைவட்டத்தில் 17,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசன வசதியளிக்க வெட்டப்பட்டுள்ளது, பிரதம கால்வாய் நீளம் 28 கி. மீ., கிளை கால்வாய் நீளம் மைல் 43/2.330. வயல்கால்வாய் நீளம் மைல் 50/1.330. இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி அடைந்த நிலப்பரப்பு 6408 ஏக்கர்

### பாசனப்பராமரிப்பு வேலைகள்:

பாசனப் பிரிவுகளைப்பொறுத்த மட்டில், இம்மாவட்டத்திலுள்ள கோதையாறு, நெய்யாறு, மற்றும் சிற்ருறு பட்டணங்கால் பராமரிப்பு வேலைகளும், சிற்ருறு பட்டணங்கால் திட்டங் கட்டுமான பாக்கிப்பணிகளும இக்கோட்டத்தால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இம்மாவட்ட தண்ணீர் வினியோகமும் நெல்லை மாவட்டத்திற்கு இராதாபுரம் கால்வாய் முலம் தண்ணீர் வினியோகமும் இக்கோட்டத்தால் கண்காணிக்கப்படுகிறது.

### கட்டிடம் பராமரிப்;

கட்டிடப் பிரிவுகளைப் பொறுத்த மட்டில், ரூபாய் ஒரு லட்சம் மதிப்பீட்டிற்கு குறைவான பிற துறைகளைச் சார்ந்த புதிய கட்டிட வேலைகளையும், சீரமைப்பு வேலைகளையும், புதிய பள்ளிக் கட்டிட கட்டுமான வேலைகளையும் இக்கோட்டம் செயல்படுத்திவருகிறது.

## கடலரிப்புத்தடுப்பு

குமரி மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் கடலரிப்பினுல் கடற்கரையும் அதை ஒட்டி இருக்கின்ற குடிசைகளும் பாதிக்கப்பட்டு வருகின்றன. கடலரிப்பைத் தடுக்க நிரந்தரப்பணி செய்யும் பொருட்டு கடலரிப்புத் தடுப்புக் கோட்டம் இம்மாவட்டத்தில் மார்ச் 1977-ல் ஆரம்பிக்கப்பட்டது. இனயம் கடற்கரை ஓரத்தில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை ரூ. 33.20 இலட்சம் செலவில் நவம்பர் 1979-ல் முடிவுற்றது தற்பொழுது கடலரிப்பு ஏதும் இல்லை மேலும் முட்டம் துறை, ராஜாக்கமங்கலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் வேலை ரூபாய் 29.32 இலட்சம் செலவில் தற்போது நடைபெற்று வருகிறது மேற்கொண்டும் பல இடங்களில் கடல் அரிப்புத் தடுப்புச்சுவர் வேலைகள் ஆரம்பிக்கப்படஉள்ளன.

# நெடுஞ்சாலைகள்

குமரி மாவட்டத்தில் தேசீய நெடுஞ்சாலை எண் 47 அதாவது சேலம் கொச்சின் கன்னியா குமரி சாலையில் கி,மீ. 599-ல் இருந்து 655 முடிய 56 கி மீ. நீளமும், தேசீய நெடுஞ்சாலை எண் 1-ல் அதாவது மதுரை, கன்னியாகுமரி சாலையில் கி,மீ. 224/4-ல் இருந்து 231/6 முடிய 7.2 கி.மீ. நீளம் உள்ளது. 1972 வரை தேசீய நெடுஞ்சாலை பராமரிப்பு அபிவிருத்தி வேலைகள் நாகர்கோவில் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை கோட்டம் மூலமாக செய்யப்பட்டு வந்தது. 1972-ம் வருடத்திற்குப் பின்னர் தேசீய நெடுஞ்சாலைத்துறை தனியாக தனியாக இயங்கி வருகிறது. தற்சமயம் குமரி மாவட்டத்தில் திருநெல்வேலி கோட்டத்தின் கீழ் ஒரு உதவிக்கோட்டமும் இரண்டு பிரிவு அலுவலகமும் உள்ளன.

1957-ம் வருடத்திற்குப் பின் சாலை பராமரிப்புடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளும் நடைபெற்றுள்ளன.

1. கி.மீ. 621/2-ல் வள்ளியாற்றில் பழைய பலக்குறைவான பாலத்தை தேசீய நெடுஞ்சாலை தரத்திற்கு புதுப்பித்து கட்டுதல்மதிப்பீடு ரூபாய் 10,200.

2. கி.மீ. 622/6-ல் தூவல் ஆற்றில் பழைய பலக்குறைவான சிறு பாலத்தை புதுப்பித்துக் கட்டுதல். மதிப்பீடு ரூ. 1,09,000.

3. கி.மீ. 599-ல் இருந்து 655 வரை 89 கலுங்குகள் (Culverts) புதுப்பித்துக் கட்டுதல் மதிப்பீடு ரூ. 7,30,000.

4. தேசீய நெடுஞ்சாலை எண். 7-ல் 224/6-ல் உள்ள சிறு பாலம் புதுப்பித்துக் கட்டுதல். மதிப்பிடு ரூ. 41, 400.

5. கி.மீ. 224/4-ல் இருந்து 231/6 முடிய உள்ள 26 கலுங்குகள் (Culverts) புதுப்பித்துக் கட்டுதல். மதிப்பீடு ரூ. 6,80,000.

6. கி. மீ. 224/2-ல் இருந்து 231/6 வரை 7.2 கி. மீ. நீளத்தை 3.6 மீட்டர் அகலத்தல் இருந்து 7 மீட்டர் அகலததிற்கு விரிவுபடுத்தி பலப்படுத்தப்பட்டுள்ளது. மதிப்பீடு ரூபாய் 12,00.000.

கீழ்க்கண்ட வேலைகள் ஆரம்பிக்க தேவையான ஏற்பபாடுகள் நடைபெற்று வருகிறது.

1. தேசீய நெடுஞ்சாலை எண். 47-ல் கி. மீ, 599-ல் இருந்து 631/2 வரை (களியக்காவிளை நாகர் கோவில் வரை) பலப்படுத்தும் வேலைக்கு ரூபாய் 95,46,300,-க்கு அனுமதி வழங்கப்பட்டு வேலை ஒப்பந்தக்காரரகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. களியக்காவிளை கன்னியாகுமரி சாலையில் 1978-ல் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட இடங்களைச் செப்பனிட 6,35,800 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### வெள்ள நிவாரணப் பணிகள்

1 வெள்ளச் சேதப் பழுது பார்த்தல்: அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் வடக்கு தாமரைகுளம் பழையார் சாலை கி. மீ. 0/4-ல் உள்ள சப்பாத்து (Causeway) திரும்பக் கட்டுதல்.

இதன் மதிப்பீடு ரூ. 8,00,000 ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. வெள்ளச்சேதப் பழுது பார்த்தல் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் தலக்குளம் சாலை கி. மீ. 3,2-ல் சப்பாத்து (Causeway) கட்டுதல்.

மதிப்பீடு ரூ. 1.36 இலட்சத்திற்கு தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது.

மதிப்பீடு அங்கீகாரம் செய்யப்பட்டு, ஒபபந்தம் முடிந்தபிறகு வேலை தொடங்கவுள்ளது.

### நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை

கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலைகள் பராமரிப்பிற்கென தனியாக நெடுஞ்சாலை இலாகா 2—7—57-ல் தான் அமைக்கப்பட்டது இதற்கு முன்னர் சாலைகள் பராமரிப்பு பொதுப்பணித்துறையுடன் இணைக்கப்பட்டிருந்தது. 1—7—57க்குப் பின்னர் ஐந்தாண்டுத் திட்டங்கள். தேசிய அபிவிருத்தி, திட்டங்கள் உள்ளூர் வளர்ச்சிப் பணித்திட்டங்கள் மற்றும் பல அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலும் வீடுகள் சாலைகளையொட்டி தொடர்ச்சியாக அமைந்துள்ளதாலும், (கிராமச் சாலைகளில் வாகனப் போக்கு வரத்து மிக அதிக அளவில் அதிகரித்துள்ளன பல்வேறு திட்டங்களில் மூலம் சாலைகளின் தரத்தை மேம்படுத்தவும். புதிய பாலங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு பெற்று செய்து முடிக்கப்பட்ட வேலைகள் கீழ் வருவனவாகும்.



| பாலத்தின் பெயர் | செலவு | கட்டி அமைத்த வருடம் |
|---|---|---|
| 1. வலியாற்றுமுகம் பாலம்: | ரூ. 1,27,800 | 1961 |
| 2. களியல் பாலம்: | ரூ 3,30,000 | 1964 |
| 3. தேமானூர் பாலம் | ரூ. 5.84.000 | 1965 |
| 4. ஒழுகிணசேரி பாலம் | ரூ. 5,25,000 | 1965 |
| 5. சுருளக்கோடு பாலம் | ரூ. 1,75;000 | 1965 |
| 6. பள்ளம் பாலம் | ரூ. 5,5,0000 | 1977 |
| 7. நேசமணி பாலம் | ரூ. 24.50000 | 1978 |

உழைப்பிதற்கு உணவு. வேலை வாய்ப்பு மற்றும்தன்னிறைவுத்திட்டங்களின் கீழும்ஏராளமான வேலைகள் துவங்கப்பட்டு சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச சாலைகளை அபிவிருத்தி செய்து அரசுசாலை பராமரிப்பில் எடுத்துக் கொள்ள 1979-80 1980-81 ஆண்டுகளில் 177/8 கி. மீ. நீளமுள்ள சரலைகளை அபிவிருத்திச் செய்ய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. 1979-80-ம் ஆண்டுக்கு 30/06 இலட்சமும், 1980-81 ஆண்டிற்கு 22 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் வருடா வருடம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

இவை தவிர, இம்மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெற்று வரும் சாலைகள், கட்டிட வேலைகள்; கிணறு வேலைகள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், போன்று பலவேறு வேலைகள் இவ்விலாகாவின் மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்டு வருகின்றன.

# ஊரகச்சாலைகள் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் வசதிகளைப் பெருக்கி கிராம மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளித்து பசுமைப் புரட்சி ஏற்படுத்த தமிழக அரசு ஒர் ஐந்தாண்டு திட்டம் தீட்டியது அத்திட்டத்தின் கீழ் உதயமானதுதான் கிராமச்சாலைகள் திட்டம் ஆகும்

கிராமச்சாலைகள் திட்டம். 19—6—1972ம் நாள்முதல் தமிழ் நாட்டில்உள்ள 1500-ம்அதற்கு மேலும் மக்கள் தொகை, உள்ள, சாலை வசதியில்லாத எல்லாக் கிராமங்களுக்கும் புதுச் சாலைகள் அமைத்து முக்கியமான அரசுச் சாலைகளோடு இணைக்கவும் பழைய சாலைகளை மேம்பாடு செய்யவும் வழிவகை செய்கிறது. கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரிமாவட்டத்தில் 18 புதுச்சாலைகள் அமைக்கவும் 6 சாலைகளை மேம்பாடு செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டது.

மேலும் எவ்வித சாலையும் இல்லாத கிராமங்களுக்கு ஒரு விரைவுத் திட்டத்தின் மூலம் சாதாரண பருவ கால நிலைக்கேற்ற சாலைகள் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் இரண்டு புதுச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 5 மக்கள் தொகை 3577 சாலைகளின் நீளம் 1.80 கி.மி. சாலைகளுக்கு செலவான தொகை 0.12 இலட்சம் ரூபாய்.

1980-81ல் கிராமச் சாலைகள் திட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு சாலை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனல் 2 கிராமங்கள் பயனடையும், 360கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதிதாக அமைக்கப்படும். ரூபாய் 8.30 இலட்சம் செலவிடப்படும். இதன் முலம் பயன் அடையும் மக்கள் தொகை 1540 ஆகும்.

மேலும் கிராமச்சாலைகள் திட்டத்தில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் 1981-82-ல் 8 கிராமங்களில் சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# கதர் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழக அரசால் முதல் முதலில் அரசு கதர் இலாகாவினரால் செப்டம்பர் திங்கள் 1957 ம் வருடம் ஒரு மைய கதர் அலுவலகமும், ஒரு கதர் விற்பனை நிலையமும (காதி கிராப்ட்) துவக்கப்பட்டது. அதன் பின் கதர் உற்பத்தி நிலையங்களும் கதர் அங்காடிகளும் படிபபடியாக துவக்கப்பட்டன. அரசு இலாகாவாக இயங்கவந்த கதர் இலாகா 1.-9-.0 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் என்ற அரசு சார்புடைய வாரியமாக அரசால் ஆரம்பிக்கப்பட்டு அதன் கீழ் செயல் பட்டு வருகிறது. தற்போது கனனியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 11 கதர் உப கிளைகளும் 4 கதர் கிராப்ட்டுகளும், 33 கிராமிய நூற்பு நிலையங்களும், ஒரு கிராமிய நெசவியல் நிலையமும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் இருப்பு வைப்பதற்கான ஒரு மாவட்ட கதர் கிடங்கும் செயல் பட்டுவருகிறது.

இயங்கிவரும் 33 கிராமிய நூற்பு நிலையங்கள் மூலமாக ஏழை மற்றும் படித்த பட்டதாரி பெண்டிர் உட்பட சுமார் 1056 பெண்கள் கிராமங்களில் பயன்பெற்று வருவதோடு மாநிலத்திலேயே இம்மாவட்டத்தில தான் ஒவ்வொரு கிராமிய நூற்பு நிலையங்கள் மூலமாகவும் அதிகப்படியான நூல் சிட்டங்கள் உற்பத்தியாகிறது என்பது இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பதாகும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் நூற்போர் மற்றும் நெசவாளர்களின் கூலியில் ⅓ சதவீதம் நலநிதியாக பிடித்தம் செய்யப்பட்டு, அந்தத் தொகைக்கு தக்கவாறு வாரியமும் நெசவாளருக்கு சமமான நிதியை தனது நிதியிலிருந்து நல நிதியாக வழங்கி வருகிறது. கிராமிய நூற்பு நிலைய நூற்பாளர்களிடமும் ஒரு சிட்டத்தின் கூலியில் ஒரு பைசா வீதம் நலநிதியாக பிடித்தம் செய்து, அதே அளவு தொகையை வாரியம் தனது நிதியிலிருந்து நல நிதியாக வழங்கிவருகிறது.

நெசவாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு நெசவு செய்ய தேவைப்படும் அச்சு மற்றும் விழுதுகள் பாதி விலையில் வழங்குவதோடு மீதமுள்ள பாதி தொகையை வாரியமே மான்யமாக வழங்கி வருகிறது

வேட்டி ரகங்களில், ஆடவர் விரும்பி அணியும் குப்பாடம் வேட்டி இம்மாட்டத்தில்தான் உற்பத்தியாகிறது. இது இம்மாவட்டத்திற்கு பெருமை தரக்கூடியதாகும்.

தமிழகத்திலேயே கன்னியாகுமரி மாவட்டம் அதன் பரப்பளவிற்கு தக்கவாறு கதர்த் தொழிலில் 2-வது இடத்தை வகித்துவருவதோடு, ஆண்டுதோறும் வாரியத்தால் நிர்ணயிக்கும் கதர் விற்பனைக் குறியளவையும் நிறைவு செய்து நற்பெயரை பெற்று வருகிறது.

# குடும்ப நலம் மற்றும் தாய்சேய் நலத் திட்டம்

இந்த மாவட்டத்தில் குடும்பநலத்திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கண்காணிப்பின் கீழ் மாவட்டக் குடும்பநலத்திட்ட தாய்சேய் நல அலுவலரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் குடும்பநலததிட்டத்தில் தனியார் மருந்துவ மனைகள் அதிகமாக ஈடுபடுத்தப் பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. மக்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சைகள் மற்றும் லூப் பொருத்துதல், நிரோத் வினியோகித்தல் ஆகியவை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கிவரும் ஒன்பது குடும்பநலத்திட்ட பிரிவுகள், ஒன்பது அரசினர் மருத்துவ மனைகள் நாகர்கோயில் நகராட்சியின் கீழ் இயங்கும் ஒரு நகரியல் நிலையம் மற்றும் பதினொன்று அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகள் மூலமாக நிறைவேற்றப் பட்டு வருகிறது. குடும்பநலத்திட்டத்தின் ஒரு பகுதியாக வேண்டாத கருவினைக் கலைப்பதற்கான வசதிகள் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், இரண்டு அரசினர் மருத்துவ மனைகளிலும், இரண்டு தனியார் மருத்துவ மனைகளிலும் செய்யப்பட்டுள்ளது.



# மாவட்ட தொழில் வளர்ச்சி பணிகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1-11-1956 முதல் தொழில் வணிகத்துறை உதவி இயக்குனர் அலுவலகம் பல தொழில் வளர்ச்சிப் பணிகள் செய்து வந்துள்ளது. மாநிலத் தொழில் கடன் சட்டத்தின் கீழ் சிறு தொழில் செய் செய்வோருக்கு ரூ. 5,000/– வரை கடனுதவி வழங்கி வருவதனறி தொழில் நுட்ப அறிவுரை மற்றும் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்கள் பெற வசதி செய்து கொடுத்தல் சிறு தொழில் பதிவு செய்தல், இறக்குமதிப் பொருள்களுக்கு சிபாரிசு செய்தல் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு கடனுதவி வழங்குதல் முதலிய வளர்ச்சி பணிகளை இம்மையம் செய்து வந்துள்ளது. 1963 முதல் உதவி இயக்குநர் அலுவலகம் திருநெல்வேலி மண்டல துணை இயக்குனர் அவர்களின் மேற்பார்வையில் வந்துள்ளது.

1–8–1978 முதல் உதவி இயக்குனர் அலுவலகம் இம்மாவட்டத்தில் மாவட்டத்தொழில் மையமாக செயல்பட்டு வருகிறது. புதிதாக தொழில் தொடங்குவதற்கும், தொடர்ந்து தொழிலில் ஈடுபட்டு வருவோருக்கும் தேவைப் படும் அனைத்து அடிப்படை வசதிகளையும், செய்துகொடுப்பதே இம்மையத்தின் நோக்கமாகும். தொழில் முனைவோர்களுக்குத் தேவையான மின் இணைப்பு, பஞ்சாயத்து உரிமம், குவோரேட்டு மற்றும் இரசாயனப்பொருட்கள் பெறுவதற்கான உரிமம், தொழில் நுட்ப அறிவுரை, உற்பத்திக்குத்தேவையான மூலப் பொருடகள் பெற வசதி செய்து கொடுத்தல், வங்கிகள்மூலம் கடன்பெறச் சிபார்சு செய்தல் ஆகிய பல பணிகளையும் மாவட்ட தொழில் மையம் மேற்கொண்டுள்ளது.

# அரசு தலைமை மருத்துவமனை. நாகர்கோவில்.

1956-ம் ஆண்டு 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருந்த இம்மருத்துவ மனை 1962-ல் 140 படுக்கைகள் கொண்டதாக விரிவு பெற்றது. பிறகு குடும்ப நல சிகிச்சைப் பிரிவிற்குக்கட்டப்பட்ட 20 படுக்கைகள் கொண்ட பகுதியைச்சேர்ந்து 160 படுக்கைகளாக விரிவு பெற்றது.

அரசு தலைமை மருத்துமனை, நாகர் கோவில் மையத்தில் 4.5 ஏக்கர் நிலபரப்பில் அமைந்துள்ளது

முழுநேர குடும்பநலச்செயல் நிலையம் (Crash programme)-ன் படி 18-1-65-ல் ஒரு பயிற்சி பெற்ற உதவி மருததுவ அலுவலரைக் கொண்டு துவக்கப்பட்டது

தேசீய காசநோய் தடுப்பு சட்டம் இந்த மருத்துவ மனையில் மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் செப்டெம்பர் 1965 முதல் செயல்படத் துவங்கியது. அத்திட்டத்தின் அடிப் படையில் Unicef அதிகாரிகள் இரு மோட்டார் ஊர்திகளையும் எக்ஸ்ரே கருவியையும் மற்றும் ஆய்வுக்கூட சாதனங்களையும் வினியோகம் செய்தனர்.

என். ஜி ஓ மருந்தகம் புதிதாக அரசு அலுவலருக்காக 1971-ஆம ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது,

தற்போது கீழ்குறிப்பிட்டுள்ள மருத்துவ வசதிக்கான கட்டிடங்கள் நாகர்கோவில் அரசு மருத்துவ மனை காலி மனையில் கட்டப்பட்டு வருகின்றன

**1. எலும்பு முறிவு சிகிச்சைபிரிவு:**

ரூ. 30,000 செலவில் அரசு ஆணை 326 எபி நாள் 29-3-80 இன் படி அனுமதி வழங்கப்பெற்று கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

**2. புறநோயாளிகளின் பகுதி:**

ரூ. 6 லட்சம் செலவில் புறநோயாளிகள் பகுதி ஒனறு அரசு கடிதம் எண். 16556/ஜே2-ன் ப்ரகாரம் அனுமதி வழங்கப்பெற்று கட்டப்பட்டு வருகிறது.

**3. மகப்பேறு பகுதி**

ரூ. 8.65 லட்ச ரூபாய் செலவில் மகப்பெறு பகுதி ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**4, தான் இயங்கி இயந்திரப்பகுதி**

இம்மருத்துவ மனையில் எப்போதும் மின் சாரம் தயார் செய்ய தானியங்கி இயந்திரம் (ஜெனரேட்டர்) ஒன்றை நிறுவ உள்ள இடம் ரூ. 1,12.750 லட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்தப் பட்டுள்ளது,

**5. விபத்துக்கள் மற்றும் நெருக்கடி நிலை பிரிவு**

விபத்துக்கள் மற்றும் நெருக்கடி நிலையைச் சமாளிக்க 10 படுக்கைகள் கொண்ட பகுதி ஒனறு ரூ. 4.7 லட்ச ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்டம் அரசணை எண். 1949-ஏக் நாள் 5-11-79-ன் படி அமுலுக்கு வந்துள்ளது முதன்மைப் பொறியாளர் சென்னை அவர்களிடமிருந்து மாதிரி வரைபடம் கிடைக்கப்பெற்றதும் இவ்வேலை துவக்கப்படும்.

# பொது சுகாதாரம்

### ஆதார நல நிலையங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட உடல் நல அலுவலரின் மேல்பார்வையில், ஒன்பது (9) ஆதார நல நிலையங்கள், மக்கள் நல்வாழ்விற்காகப் பணிபுரிந்து வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், ஒரு ஆதார நல நிலையமும், 8 முதல் 13 துணை நிலையங்களும் இயங்கி வருகின்றன.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியங்கள் | சுகாதார நல நிலையங்கள் | துணை ஆதார நல நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தோவாளை | செண்பகராமன்புதூர் | 8 |
| 2. | அகஸ்தீஸ்வரம் | அகஸ்தீஸ்வரம் | 9 |
| 3. | ராஜாக்காமங்கலம் | இராஜாக்கமங்கல்ம்-துறை | 10 |
| 4. | குருந்தன்கோடு | முட்டம் | 13 |
| 5. | தக்கலை | கோதநல்லூர் | 13 |
| 6. | திருவட்டார் | குட்டக்குழி | 12 |
| 7. | மேல்புறம் | இடைக்கோடு | 12 |
| 8. | முஞ்சிறைற் | ஆறுதேசம் | 13 |
| 9. | கிள்ளியூர் | கருங்கல் | 11 |

இவைகளில், 6 ஆதாா நல நிலையங்கள் 1936 வரை இயங்கி வந்தன. மேலும, கீழே குறிப்பிடப்படும் 3 ஆதார நல நிலையங்கள் 1967-ல் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து இயங்கி வருகின்றன.

1. கோதநல்லூர்
2. குட்டக்குழி
3. செண்பகரரமன்புதூர்

மேலே குறிக்கப்பட்ட அனைத்து ஆதார நல நிலையங்கள் (9) வாயிலாக அனைத்து சுகாதார பணிகளும், மருத்துவ பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

### சிறு சுகாதார நிலையங்கள்

தமிழ்நாடு அரசு ஆணை எண். 1|81 நாள் 30-5-77ன் படி இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படதொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டததிலும் சிறு சுகாதார நிலையங்கள் செயல்படத்தொடங்கியது. இத்திட்டத்தின் விபரங்க்ள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பொது இலக்கங்கள் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட சிறுசுகாதார நிலையங்கள் | இயங்கும் சிறு சுகாத்ார நிலையங்கள் | இதுவரையிலுள்ள செலவுத் தொகை (அரசு மான்யம் 50%) |
|---|---|---|---|
| 14 | 60 | 45 | 231203.30 |



### நடமாடும் மருத்துவக் குழு திட்டம்

நடமாடும் மருத்துவக் குழுத்திட்டம் 1977-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் முதலில் 5 சுகாதார நிலையங்களில் செயல் படத்தொடங்கியது. அடுத்து 1980ஆம் ஆண்டில் மேலும் 2 சுகாதார நிலையங்களில் இத்திட்ட்ம் செயல்படத் தொடங்கி மொத்தம் 7 ஆதார நல நிலையங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

### மலேரியா ஒழிப்புத் திட்டம்

இம்மாவட்டத்தில் 223 காய்ச்சல் சிகிற்சை நிலையங்களும் 1015 மருந்து வழங்கும் நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு மலேரியாநோயினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

# கல்வி

நாகர்கோவில் மாவட்டக் கல்வி அலுவலகம், 25-8-1963-ம் நாள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கூடுதலாக தக்கலையில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் திறக்கப்பட்டது. பின்னர் 16-5-73-ம் நாள் கூடுதலாக குழித்துறையில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் திறக்கப்பட்டது.

*5-9-1974* அன்று குமரி மாவட்டத்திலுள்ள மூன்று மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு மேலாக ஒரு முதன்மைக் கல்வி அலுவலகம் நாகர்கோவிலில் திறக்கப்பட்டது. இதினிடையில் கருங்கல், புஞ்சிறை, குளச்சல், இராஜாக்கமங்கலம், திருவட்டார் என்ற இடங்களில் பள்ளித்துணை ஆய்வர்கள் அலுவலகங்கள் திறக்கப்பட்டு இம்மாவட்டத்திலுள்ள மொத்தம் பள்ளித்துணை ஆய்வர்கள் அலுவலகங்கள் ஒன்பதாக உயர்த்தப்பட்டன. திருவட்டார் பள்ளித்துணை ஆய்வர் அலுவலகம் திறக்கப்பட்டபோது பூதப்பாண்டி பள்ளித்துணை ஆய்வர் அலுவலகம் மூடப்பட்டது.

### கட்டிடங்கள்

1-12-1956-ல் துவக்க, நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் அநேகமாக ஒலக்கூறை வேய்ந்த தற்காலிகக் கட்டிடங்களில்தான் நடத்தப்பட்டு வந்தன. ஒரு சில பள்ளிகளுக்கே நிரந்தர கட்டிடங்கள் இருந்தன, ஆனால் இன்று பல துவக்கப் பள்ளிகளுக்குக் கூட ஒரு நிலை, இருநிலை கட்டிடங்கள் வரையிலும் கட்டப்பட்டுள்ளன. பொதுவாக ஒரு சில பள்ளிகள் தவிர அனைத்து பள்ளிகளுக்கும் நிரந்தர கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. நிரந்தர கட்டிங்கள் இல்லாத ஒரு சில பள்ளிகளுக்கு தற்போது அரசின் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிரந்தர கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. மேல்நிலை பள்ளிகள் பலவற்றிற்கு அறிவியல்கூட கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளன.

### தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு பள்ளிக் கட்டிடங்கள் கட்ட 45 அரசு பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 31 பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டிடம் கட்டுவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 பள்ளிகளுக்கு 23 லட்சம் ரூபாய் அரசால் இவ்வருடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த 23 பள்ளிக் கட்டிடங்களில் வேலை துவங்கப்பட்டு 1981 மார்ச் 31-ம் தேதிக்குள் முடிக்கவிருக்கிறது,

# சமூக நலத்துறை திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமூக நலத்துறை திட்டத்தின் கீழ் காது கேளாத பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசமாக காது கேட்கும் கருவிகளும், கணவனை இழந்த விதவைகள் மறுமணத்திட்டத்தின் கீழ் பரிசு உடல் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

# கால்நடை பராமரிப்பு

## கேந்திர கிராமத் திட்டம்

இனவிருத்தி, தீவனம், பராமரிப்பு மற்றும் நோய்த்தடுப்பு வழிகளில் நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கால்நடைகளின் தரத்தையும் உற்பத்தித் திறமையும் உயர்த்துவதே கேந்திர கிராம திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் இப்பணி செயல்முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. நாகர்கோவில், குழித்துறை, கொட்டாரம், திங்கள்சந்தை ஆகிய இடங்களிலுள்ள 4 கேந்திர கிராம நிலையங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன ஒவ்வொரு கேந்திர கிராம நிலையத்தில் கட்டுப்பாட்டிலும் 10 கேந்திர கிராம கிளை நிலையங்கள் உள்ளன.

# பால் விநியோக கூட்டுறவு ஒன்றியம்

**ஆரம்பம்:**

நாகர்கோவில் நகரில் 1949-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாள் பால் உற்பத்தி செய்பவர்கள் நாஞ்சில் நாடு பால் விநியோக கூட்டுறவு சங்கம் எண்; 2946 என்ற அமைப்பை உருவாக்கினர். 1950-ம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 7-ம் நாள் பணியைத தொடங்கிய அந்தக் கூட்டுறவு நிறுவனம் சென்ற 30 ஆண்டு காலமாக நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது

**பணிக்களம்:**

கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும், நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி தாலுகாவையும் பணிக்களமாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

**பங்குத் தொகையும் உறுப்பினர்களும்:**

24 உறுப்பினர்களுடன் ரூ.1620 பங்குத் தொகையுடன் வேலை செய்யத தொடங்கியது. அதன் பின்னர் பல பால் சங்கங்களையும் பிற சங்கங்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்து உள்ளது.

**பால் உற்பத்தி:**

ஒன்றியமானது பால் விநியோக மற்றும் உற்பத்தியாளர் சங்கங்களிடம் இருந்தும் தனி நபர் உறுப்பினர்களிடம் இருந்தும் லிட்டர் 1க்கு முறையே ரூ. 1 85. ரூ. 1.75 வீதம் பால் கொள் முதல் செய்து வருகிறது.

தற்போது 55 கூட்டுறவு பால் சங்கங்களும் 4 தனி நபர் உறுப்பினர்களும் ஒன்றியத்திற்குப் பால் வழங்கி வருகிறாகள். ஒன்றியத்தில் ஒரு நாளைய சராசரி உற்பத்தி 10,000 லிட்டர் ஆகும். பின்வரும் மூன்று வழித்தடங்களில் இருந்தும் மோட்டார் வண்டிமூலம் பால் சேகரிக்கப்படுகிறது. 1) டோணாவூர் 2) தெரிசனங்கோப்பு 3) தொடுவட்டி

**விநியோகம்:**

ஒன்றியம் உள்ளூரில் பால் விற்பனை செய்வதுடன் அரசு மருத்துவமனைகளுக்கும், சிறைச்சாலை, பயணிகள் விடுதி ஆகிய ஸ்தாபனங்களுக்கும் பால வழங்கி வருகிறது. அண்டை மாநிலமான கேரளத்திலும் ஒன்றியம் பால் விற்பனை செய்கிறது. ஒன்றியத்தின் உபரிப்



பாலை தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கும், கேரளா மில்மாவிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் லிட்டர் 1க்கு விலை ரூ. 2.25 கேரள மாநிலத்தில் ரூ. 2.40க்கும் விநியோகம் செய்யப்படுகிறது.

நாகர்கோவில் நகரப் பேருந்து நிலையத்தின் அருகிலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்தின அருகிலும் இவ்வொன்றியத்தின் மில்க்பார்கள் இயங்கிவருகின்றன.

**சிறப்புச் செயல்கள்:**

பதன நிலையத்தின் திறனளவுக்கு மேல் உற்பத்தி செய்து பாலைப் பக்குவப்படுத்திய வகையில் 1969-70-ம் ஆண்டில் தமிகத்தில் முதலிடத்தையும் இந்தியாவில் இரண்டாவது இடத்தையம் இவ்வொன்றியம் வகித்துள்ளது.

1978-79-ம் ஆண்டுக்கு தமிழகத்தில் சிறந்த பால் விநியோகக் கூட்டுறவு ஒன்றியமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக கேடயம் பரிசு பெற்றுள்ளது.

மிகக்குறைந்த அளவு லாப வரம்புடன் (மார்ஜின் ஆப் பிராபிட்) இந்தியாவில் சிறப்பான பணி செய்யும் ஒன்றியங்களில் இவ்வொன்றியமும் ஒன்று என்பதில் குமரிமாவட்ட மக்கள் பெருமை கொள்ளலாம்.

# கூட்டுறவுத்துறை

இம்மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த போது ஒருசில பிரதம கூட்டுறவு சங்கங்களே செயல்பட்டு வந்தன. பின்னர் ஒவ்வொரு பிரிவிலும் இவ்வியக்கம விரிந்து, படர்ந்து வளர்ந்தோங்கியுள்ளது.

கன்னியாகுமரி கூட்டுறவு மத்திய வங்கி 5--9—1957-ல் பதிவு செய்யப்பட்டு 14-9-'57 ல் 3-வது பணியைத் தொடங்கியது. ஆரம்பத்தில் 41 தனிநபர்களும் 196 கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினர்களாகி ரூ. 03.29 லட்சம் பங்குத்தொகை செலுத்தியிருந்தனர் தற்பொழுது 11 170 தனிநபர்களும் 366 கூட்டுறவு சங்கங்களும் அங்கத்தினர்களாக உள்ளனர்.

# பதிவுத்துறை

கன்னியாகுமரி பதிவுமாவட்டத்தில் பூதப்பாண்டி, குளச்சல், இடலாக்குடி, இரணியல கொட்டாரம், மணவாளக்குறிச்சி, பள்ளியாடி, ராஜாக்கமங்கலம். தக்கலை, நாகர்கோவில் ஆகிய பத்து சார் பதிவகங்களும், மார்த்தாண்டம் மாவட்டத்தில் அருமனை, கருங்கல், கொல்லங்கோடு, முஞ்சிறை. பளுகல் திருவட்டார். வேர்க்கிளம்பி, மார்த்தாண்டம், மார்த்தாண்டம் 2 இணை சார் பதிவகம் ஆகிய 9 சார் பதிவகங்களும் உள்னன இப்பாகங்களில் நெடுநாளைய ஆவலை பூர்த்தி செய்யும் வகையில் தமிழக அரசு 15—9—80 முதல் கன்னியாகுமரி பதிவு மாவட்டத்தில் மேலும் ஒரு புதிய சார் பதிவகமாக வடசேரி சார் பதிவகம் தொடங்கப் பெற்றது,

1975 ல் ரூ. 62,000 செலவில் பூதப்பாண்டி சார் பதிவகம் கட்டப்பட்டது. மேலும் விலைமதிப்பற்றதும் நிரந்தரமாக காப்பாற்றப்பட வேண்டிய பழமையான ஆவணங்களையும் பதிவேடுகளையும் பேணி பாதுகாககும் மத்திய காப்பறைகள் கட்டுவதற்காக நகர மையத்தில் 50 செண்ட் உள்ள நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இதன் ரூ 17 லட்சம் செலவில் நானகு மாடி கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கொட்டாரம் சார் பதிவகத்துக்கு புதிய கட்டிடம் சுமார் ரூ 1.5 லட்சம் செலவில கட்டுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பொது மக்களின் நலனைக் கருதி முத்திரைதாள்கள் நாகர்கோவில் தலைமை அலுவலகத்திலும், கிராமப்புறங்களில் நீதிமன்ற வில்லைகள் வாங்குவதிலும் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டு அனைத்து சார் பதிவகங்களிலும் விற்பனை செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு அப்பணியும் செவ்வனே நடைபெற்றுவருகிறது.

# மீன் துறை

## படகு பிரிவு

### நாட்டு படகுகளை இயந்திரமாக்கல் (விசைபடகுகளாக மாற்றுதல்)

இயற்கையன்னை அருளிய வற்றாத செல்வமாம் கடலிலிருந்து நாம் பெறக்கூடிய உணவு பொருளாம் மீன் வளத்தினை மிகுதியாகப் பெருக்கிடவும், மீனவப் பெருங்குடி மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்திடவும் சுலப தவணை முறையில் மான்ய விலையில் விசைப்படகுகளும் வலை பின்னிட நைலான் நூலும் மீனவர்களுக்கு அரசின் சார்பில் வழங்கிடும் திட்டம் 1956 முதல் அமுல் படுத்தப்பட்டன.

நமது நாட்டில் மீன் பிடிப்பிலனை நவீனமாக்குதலும் மீன்பிடி கருவிகளை இயந்திரமயமாக்குதலும், தேவை எனக்கண்டு படிப்படியாக விசைப்படகு வழங்கும் திட்டமும், நைலான் வலை வழங்கும் திட்டமும் தமிழக அரசால் அமுல்படுத்தப்பட்டன.

1974–ம் ஆண்டு வரை 462 விசைப்பபகுகள் கன்னியகுமரி மாவட்டத்தில் தவணை முறையில் அரசு மீன் துறையால் வழங்கப்பட்டுள்ளன.

1978–ம் வருடம் நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக நான்கு இயந்திரங்கள் மட்டும் நாட்டுப் படகுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வருடம் தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகம் மூலமாக இம்மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்களுக்கு 50 விழுக்காடு மான்ய விலையில் 18 கண்ணாடி நூலிழைப் படகுகள் வழங்கப் பட்டுள்ளன.

### சிறப்புப் பணிகள்;

இந்நிலைய விசைப் படகுகள் நாளதுவரை பலமுறை கடலில் தவறிய கட்டுமரங்கள், விசைப் படகுகள் மற்றும் அதில் தொழில் புரியச்சென்ற மீனவர்களையும் தேடிச்சென்று கரை சேர்கக பெரிதும் பயன்படுத்தப்பட்டது.

2. வீரபாண்டியப் பட்டினம், இராமேஸ்வரம், மூக்கையூர். உவரி, இராமன் துறை, கன்னியாகுமரிப் பகுதிகளில் ஏற்றட்ட மீனவர்களின் மீன்பிடி எல்லைத் தகராறு சம்பந்தமாக சுமுக நிலை ஏற்படுத்த சோந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டன,

3. வெளிநாட்டுக் கப்பல்கள் நமது கடல் பகுதிகளில் தொழில் புரிந்து நமது கடல் செல்வங்களை அள்ளிச் செல்வதைத் தடுக்கவும் மீனவர்களின் வலைகள் மற்றும் கட்டுமரங்கள் சேதமுறுவதைத் தடுக்கவும் கடல் காவல் படை அவ்வப்போது தமிழக அரசுக்குத் தகவல் கொடுத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டது.



# முன்னாள் படைவீரர் நலத் துறை பணிகள்

முன்னாள் படைவீரர் நல அலுவலகம் இம்மாவட்டத்தில் 17-11-1960 நாள் துவங்கப் பட்டு செயல்பட்டு வருகிறது இவ்வலுவலகம் முன்னாள் படைவீரர்களின் நலன்களைக் காப்பதுடன் அவர்தம் குடும்பத்தினரையும் போரில் வீர மரணம் எய்தியவர்களின் குடும்பத்தினரையும், ஊனமடைந்தோரின் நலனையும் கண்காணித்து அவர்தம் மேம்பாட்டிற்கான திட்டங்களையும் செயலபடுத்திவருகிறது.

## திட்டங்கள்

### 1. தையல் பயிற்சிப்பள்ளி

முன்னாள் இராணுவ வீரர்களின் பெண் குழந்தைகளுக்கு தையல் பயிற்சி கொடுக்கும் பொருட்டு 1-1-75 முதல் தையல் பயிற்சிப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தேர்ச்சி பெற்ற ஆசிரியையால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை இப்பள்ளியினால் பயனடைந்த மாணவிகளின் எண்ணிக்கை 180.

### 2. தட்டெழுத்து பயிற்ச்சிப்பள்ளி

முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கென 1-6-1979 முதல் தட்டெழுதது. சுருக்கெழுத்து பயிற்சிப்பள்ளி ஒன்றும் நடத்தப் பட்டு வருகிறது. இதன்மூலம் பயனடைந்த மாணவ மாணவியர் 72

### 3. ஜெய் ஜவான் கடைகள்

முன்னாள் இராணுவ வீரர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் 12 ஜெய் ஜவான் கடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4. முதியோர் ஒய்வூதியம்:

முதுமைப்பருவம் அடைந்த மற்றும ஆதரவற்ற முன்னாள் படை வீரர்களுககு மாதம் ரூ. 30 வீதம் ஆயுள் வரைக்கும் முதியோர் ஒய்வூதியம் வழங்க, அரசு ஆணையிட்டுள்ளது.

### 5. முன்னாள் படைவீரர் மனைவிமார்களுக்கு உதவித்தொகை:

நடைமுறை விதிகளின் படி 1-1-64 க்கு முன்பு இராணுவத்திலிருந்து விடுதலை ஆகி ஓய்வூதியம் பெற்று வந்து பின் இறந்திருந்தால் அவர்களின் மனைவிமார்களுக்கு குடும்ப ஒய்வூதியம் வழங்குவதில்லை. அவர்களுக்கு ஒய்வூதியம் போன்று பண உதவி தொகுப்பு நிதியிலிருந்து வழங்க தற்போது வகைசெய்யப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 5 விதவைகள் இப்பண உதவி பெறவிருக்கிறார்கள்.

### 6. பணியில் இறந்துவிட்ட படைவீரர்களின் மனைவிமார்களுக்கு ஒய்வூதியம் வழங்குதல்:

முப்படையில் பணிபுரியும் போது இறந்துவிட்ட வீரர்களின் மனைவிமார்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க தொகுப்பு நிதி முன்வந்துள்ளது. இம்மாவட்டத்தில் 21 விதவைகள் குடும்ப ஓய்வூதியம் பெறவிருக்கிறார்கள்.

### 7. வங்கியிலிருந்து கடனுதவி பெறுவோருக்கு வட்டிச்சலுகை.

முன்னாள் படைவீரர் சிறு தொழில் செய்வதற்கு வங்கியிலிருந்து கடன் பெற்றால் அவர்களுக்கு வட்டிச் சதவிகிதத்தில் பாதி தொகை தொகுப்பு நிதி வழங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் அநேக முன்னாள்படைவீரர்கள் இப்பயனைப் பெற்று வருகிறார்கள்.

# மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம். நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்ட வேலை வாப்ப்பு அலுவலகம் 21-2-1958 முதல் நாகர்கோவிலில் செயல்ட்டு வருகிறது. வேலை வேண்டி பதிவு செய்யும் விண்ணப்பதார்களின் தகுதி படிப் படையில் வேலை வாய்ப்பு அளித்தல். பணிநாடு வோர்க்குப் பயிற்சி மற்றும் மேல் படிப்பு, உப காரச்சம்பளம் போன்ற விவரங்களைச் சேகரித்து வழிகாட்டும் பணிசெய்தல். தனியார்துறை மற்றும் பொதுத்துறையில் வேலை நிலவரத் தகவலுகளைச் சேகரித்து திட்டக்கமிஷன் போன்றவற்றிற்கு புள்ளிவிவரங்கள் வழங்குதல் மற்றும் 1959-ம்ஆண்டு மத்திய அரசால் இயற்றப் பட்ட காலியிடங்களின் கட்டரய அறிவிப்பு சட்டம் மற்றும் அது சார்ந்த 1940-ம் ஆண்டு விதிமுறைப்படி நிறுவனங்களிடம் காலாண்டுக் கொருமுறை வேலையாட்களின் விவரம், காலி யிடங்கள் விவரங்களைச் சேகரித்தல், மற்றும் இச்சட்டத்தின்படி வேலையளிப்போர் நாடும் தகுதிகொண்ட விண்ணப்பதாரர்களைப் பரிந் துறை செய்தல் பேன்றவற்றை இவ்வலுவலகம் தலையான பணிகளாக்கி கொண்டுஇயங்குகிறது இதனடிப்படையில் இவ்வலுவலகம் இப்பணி களை பொது, இளைஞர் வேலை வாய்ப்பு பகுதி மற்றும் வேலை நிலவர தகவல் பிரிவு என மூன்று பிரிவுகளாக்கிக்கொண்டு செயலாற்றி வருகிறது. இளைஞர் வேலை வாய்ப்புப் பகுதி சிறப்பு பயிற்சிப்பெற்று ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவளரின் கீழு, வேலை நிலவரத் தகவல் பிரிவு இளநிலை வேலைவாய்ப்பு அலு வலர்கள்கீழும், அலுவலகத்நின் மொத்தநிர்வாக மும் ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவல ராலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.



# தமிழ் நாடு மின்சார வாரியம்

## கன்னியாகுமரி மின் திட்டம்

### மாவட்டத்தின் மின் வளர்ச்சி

1.11.56கன்னியாகுமரி மாவட்டம் ஆரம்பித்த வேளையில் நாகர்கோவில் கோட்டம் பாபநாசம் மின் திட்டத்தின் கீழ் செயல்பட்டது தக்கலையில் அமைந்திருந்த 66/11 கே வி உப மின் நிலையம் (Sule-Station) ஒன்று தான் குமரி மாவட்டம் முழுவதும் மின் விநியோகத்நிற்காக செயல்பட்டது.

பின்னர்தான் நாகர்கோவில் கோட்டம் திருநெல்வேலிமின் திட்டம்அரம்பித்த பிறகு1971-ல் அதன் கீழ் செயல்பட்டு வந்தது 1962-ல நர்கர் கோவிலில் 66/11 கெ. விஉபமின் நிலையம்ஒன்றும் 1966-ல் பேச்சிப்பாறையில் ஒரு 66/11 கே.வி உப மின்நிலையமும்நிறுவப்பட்டன1971-ல்கோதையாறு நீர் மின் உற்பத்தி நிலைக்ம் 100 mwமின் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

1971-ல் குமரி மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் வசதி வழங்கப்பட்டது.

நாளடைவில் மின்வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசபுதிய மின்திட்டங்களைக் கூடுதலாக நிறுவ ஆர்ம்பித்தது. அதன் விளைவாக 1.4 74 அன்று குமரி மாவட்டத்தை எல்லையாகக் கொண்டு கன்னியாகுமரி மின்திட்டம் ஆரம்பிக்கபட் டது. இம்மின் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது குமரிமாவட்டத்திலுள்ள மின் இணைப்புகளில் புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| 1 | பெரிய தொழில்கள் | 5 |
| 2 | சிறு தொழில்கள் | 1640 |
| 3 | விவசயம் மின் விசை பாம்புகள் | 890 |
| 4 | வீடுகடை முதலானவை | 61,000 |
| 5 | குடிநீர்த்தொட்டிகள் | 41 |
| 6 | தெரு விளக்குகள் | 22 850 |
| 7 | மொத்த மின் மாற்றிகள் | 342 |
| 8 | உயர் மின் அழுத்த லைன்களின் நீளம் | 592 கி.மீ |
| 9 | குறைந்த மின் அழுத்த லைன்களின் நீளம் | 1139 கி மீ |
| 10 | 1974 75 75-ம் வருடமொத்த வருவாய் | ரு 121 லட்சம் |

### 2. நடப்பு ஆண்டு திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும்

சமூகத்திலுள்ள குடிசைவாழ் ஏழை எளிய மக் களும் மின் வசதி பெற, தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டம் வகுத்தது 1979-லிருந்து கிராமப் பஞ்சாயத் துக்களிலுள்ள குடிசைகளுக்கு மின்வசதி வழங்கப் பட்டது குமரி மின் திட்டத்தில் 1-11-80 வரை 848 குடிசை வாசிகள் இதனல் பலனடைந்துள்ளனர் இவ்வாண்டில் கொடுக்கப்பட வேண்டிய விவசாய மின் இணைப்புகள் 120 இதுவரை கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள் 106 ஏனைய மின் இணைப்பு களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| 1 | பெரிய தொழில்கள் | 21 |
| 2 | சிறு தொழில்கள் | 8053 |
| 3 | விவசாயம் (பம்புசெட்) | 1788 |
| 4 | வீடு கடை முதலானவை | 86341 |
| 5 | குடிநீர்த் தொட்டிகள் | 88 |
| 6 | தெரு விளக்குகள் | 31234 |
| 7 | மின் மாற்றிகள் | 460 |
| 8 | உயர் மின் அழுத்த லைன்களின் நீளம் ( | 693 கி மீ. |
| 9 | குறைந்த மின் அழுத்த லைன்களின் நீளம் ( | 2385 கி.மீ. |
| 10 | 1979- 80 வருட மொத்த வருவாய் | ரு 226லட்சம் |

மேலும் குமரி மின் திட்டத்தில் நாகர்கோவில் தக்கலை பேச்சிப்பாறை ஆகியஇடங்களில் அமைந் துள்ள 66/11 கே. வி உப மின் நிலையங்களை 110/11 கே. வி உப மின் நிலையங்களாக மாற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன குழித்துறையில் ஒரு 66/11 கே வி Line tap உப மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருகின்றன.

## இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்கள்

### வரலாறும் வளர்ச்சியும்

**தோற்றம்:**

கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை பகுதியும் திருவிதாங்கூர் அரசர்களால் ஆளப்பட்டு வந்த காலத்தில் 1811-ம் ஆண்டு (அதாவது 165 வருடங்களுக்கு முன்னரே), இங்குள்ள கோவில்கள் எல்லாம் அரசாங்கக் கோவில்களாக, அரசு வருவாய்த் துறையினரால (Revenue Department) நேரிடையாக நிர்வாகிக்கப்பட்டு வந்த பின்னர், 1922-ம் ஆண்டு ஷை கோவில்கள் நிர்வாகத்திற்காக அரசால் நியமிக்கப்பட்ட தேவஸ்வம் இலாகா (Devaswom Detpartment) என்ற தனியாக இலாகா ஏற்பட்டு நிர்வாகம் நடைபெற்று வந்தது

அதன்பின் மன்னராட்சி மாறி மக்கள் ஆட்சி மலர்ந்த காலத்தில் 1949-ல் திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு (வாரியம்) என்று தன்னுரிமை கொண்ட அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

1956-ல் மொழிவாரி மாநிலப்பிரிவு ஏற்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை பகுதியும், தமிழகத்துடன் இணைந்த பிறகு இப்பகுதியிலுள்ள கோவில்களின் நிர்வாகத்திற்காக "கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு' (வாரியம்) என்ற அமைப்பு அரசால் அமைக்கப்பட்டு இந்துமத அறநிலைய ஆணையரால் (ஏரங்க தேவஸ்வம் போர்டாக) நேரிடையாக 1960 மார்ச் மாதம் வரையிலும் நிர்வாகிக்கப்பட்டு வந்தது

பின்னர் 1960 ஏப்ரல் மாதம் முதல் "தமிழ்நாடு இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாதது மான தேவஸ்வங்கள் சட்டம் 30/1959-ல் (Act 30/1959) கீழ் "கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு" என்ற அமைப்பு தமிழக அரசால் அமைக்கப்பட்டு, அதன்படி தேவசம் வாரிய உறுப்பினர்களால 1974 டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை நிர்வகிக்கப்பட்டு வந்தது

அதன்பின் சட்டம் 30/1959 ரத்துசெய்யப்பட்டு இந்து அறநிலைய சட்டம் 22/1959 ன்படி சட்டம் 50 1974 விஸ்தரிக்கப்பட்டது

அதன்படி நிர்வாகம் தற்போது இந்து அறநிலைய உதவி ஆணையர் ஒருவரது மேற்பார்வையில் இருந்து வருகிறது

**மாற்றம்:**

தேவஸ்வம் நிர்வாகங்களுக்கு என திருவிதாங்கூர் அரசால் முன்னர் மான்யம் வழங்கப்பட்டன பின்னர் மத்திய அரசின் மான்யம் நிதியாக தமிழக அரசால் வருடத்திற்கு தற்போது 13½ லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது ஷை நிர்வாகத்தை குமரிமாவட்டம் பிரிந்த பின்பு இந்து அறநிலைய ஆணையர் ஒரு நபர் குழுவாக இயங்கியுள்ளார் அதன்பின் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் நியமிக்கப்பட்டு பின்பு தமிழக அரசால் இரு பிரதிநிதிகளும் ஒரு நபர் திருவிதாங்கூர் மகாராஜாவாலும் நியமிக்கப்பட்டு வந்தனர். 1-1-1975 முதல் இந்துசமய அறநிலைய சட்டப்படி அறங்காவலர் குழு அரசால் அமைக்கப்பட்டு ஐந்து நபர்கள் அடங்கிய குழுவின் பொறுப்பிலும் இந்த அறநிலைய உதவி ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர் ஒருவர் நியமனம் செய்து செயல்பட்டு வருகிறது

**வளர்ச்சி:**

கன்னியாகுமரி மாவட்டம் செங்கோட்டை பிரிவுகளில் தனித்தனியாக அமைந்த வரவு செலவுகளை நிர்வாக அதிகாரி பொறுப்பில் கீழ் இணைக்கப்பட்ட இணைக்கப்படாத கோவில்களில் நிதி என்ற அமைப்பில் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டது. மொத்த வரவு செலவுகள் சுசீந்திரம் மத்திய அலுவலகத்தின் மூலம் நடத்தப்படுகிறது

தேவஸ்வம் வாரியமுறையிலிருந்து கணக்குகள் மாற்றம் செய்யப்பட்டு இந்து அறநிலைய சட்டங்களின்படி எழுதப்படுகின்றது. இந்த அமைப்பில்கீழ் 490 ஆலயங்கள் உள்ளன

சென்ற பசலியில் இக்கோயில்களின் மொத்த வருமானம் ரூ. 3142028-21 ஆகும். மொத்த செலவு சென்ற பசலியில் ரூ. 29,49,911-44 ஆகும்.

இந்த இணைப்பிலுள்ள இணைக்கப்பட்ட ஆலயங்களின் நிர்வாகத்திற்காக ஆண்டுதோறும் 13,60000 ரூபாய் இந்திய அரசியல் சட்டப்பிரிவு 390-எ பிரிவின்படி அரசு மான்யமாக வழங்கப்பட்டு வருகிறது. இம் மான்யத் தொகை 1956-ல் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்களின் 131 நிர்வாக பணியாளர்களும், 1646 ஆலய ஊழியர்களும் உள்ளனர். இவர்களில் நிர்வாகப்பணியாளர்களான 131 ஊழியர்கள் அரசு ஊழியர்களாக அரசு ஆணை எண் 1645. வணிக வரி மற்றும் அறநிலையத்துறை இலாகா தேதி 15-10-1978-ன்படி அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு உள்ளனர். அரசு ஊழியர்கள் ஆக்கப்பட்ட 131 பணியாளர்களின் சம்பளம் முதலில் அரசின் பொது நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு பின்னர் தேவஸ்வம் நிதியிலிருந்தும் அறநிலையத்துறை நிதியிலிருந்தும் ஈடாக்கப்படவேண்டியுள்ளது.



## நாகர்கோவில் நகராட்சி

**1 நகராட்சியின் தரம்:**

1956ல் நாகர்கோவில் நகராட்சி தமிழகத்துடன் இணைந்ததும், முதல் நிலை நகராட்சியிலிருந்து இரண்டாம்நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டிருந்து (தமிழகத்தில் முதல் நிலை நகராட்சிக்கான தகுதியை அப்போது இந்நகராட்சி பெறாமையால் இரண்டாம் நிலைக்கு மாற்றப்பட்டது)1-4-61-ல் மீண்டும் முதல் நிலை நகராட்சியாக மாற்றப்பட்டு இந்நகராட்சியின் வருமானம் மற்றும் மக்கட்தொகை அதிகரிப்பைத் தொடர்ந்து, 12-10-78 முதல் தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**2 நகராட்சியின் பரப்பு:**

24.27 சதுர கிலோ மீட்டர்கள்
(9.37 சதுர மைல்கள்)

**3 மக்கட் தொகை:**

1951-ம் வருட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, மக்கட்தொகை 79.259 ஆக இருந்தது 1971-ம் வருட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 1,41,288 ஆக உயர்ந்துள்ளது 1980 மத்திய வருட மதிப்பீட்டின்படி, மக்கட்தொகை 1,83,800 ஆக உயர்ந்துள்ளது.

**4 தொகுதிகளும், உறுப்பினர்களும்:**

இந்நகராட்சி தமிழகத்துடன் இணையும்போது 31 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 32 மன்ற உறுப்பினர்களைக்கொண்டிருந்தது. இப்போது 34 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 36 மன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது

**5 வருமானம்:**

1956-57-ல் இந்த நகர்மன்றத்தின் மொத்த வருமானம் ரூ 4,50,637 மொத்த செலவு ரூ. 3,90,179/- 1979-80ல் மொத்த வரவு ரூ 88, 19, 610 மொத்தசெலவு ரூ,89,80,534/-ஆக உயர்ந்துள்ளது

**6 மின் விளக்குகள்:**

1956-57-ல் நகராட்சி சார்பில் போடப்பட்டிருந்த மின் விளக்குகள் 964 ஆகும் செலவு ரூ. 18,270/- 1979-80-ல் நகராட்சி சார்பில் போடப்பட்டிருந்த மின் விளக்குகள் 3929 செலவு ரூ. 5,67,887/-

**7 மராமத்து வேலைகள்:**

1956-57-ல் மராமத்து வேலைகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ 73, 179/- ஆகும். 1979-80-ல் ஷை வேலைகளுக்காக செலவிடப்பட்டத் தொகை ரூ. 17, 24, 596-ஆக அதிகரித்துள்ளது.

**8 கல்வி:**

தமிழகத்துடன் இணையும் போது இரண்டு கல்லூரிகள் மட்டுமே இந்நகராட்சி எல்லைக்குள் இருந்தன. தற்போது ஐந்து கல்லூரிகளும், பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரி ஒன்றும், அரசு தொழிற்பயிலகம் ஒன்றும், தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றும் உள்ளன.

**9 பேருந்து நிலையம்:**

நகராட்சி அண்ணா பேருந்து நிலையம் 26-1-68-ல் திறக்கப்பட்டது. பேருந்து ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் ஒன்று வீதம் வசூல்செய்யப்படுகிறது.

**10 அலுவலகக் கட்டிடம்**

அலுவலக உபயோகத்திற்காக கூடுதலாக ஒரு மாடிக்கட்டிடம் ரூ. 2,60,000 – செலவில் கட்டிமுடிக்கப்பட்டு 23-2-68-ல் திறக்கப்பட்டது.

**11 பலன்தரும் முயற்சிகள்:**

வடசேரி கனகமூலம் சந்தையில். கடைகளும், தங்கும் விடுதியும் ரூ. 1, 67, 700/- செலவில் கட்டி முடிக்கப்பட்டு 23–2–69-ல் திறக்கப்பட்டது.

நகராட்சி அண்ணா பேருந்து நிலையம் சுமார் ரூ 10, 28, 118 – செலவில் ஐந்து மாடி கட்டிடமாகக் கட்டப்பட்டு 27–5–77-ல் திறக்கப்பட்டது. அதில் உள்ள எல்லா அறைகளும் கூட்டுறவு மற்றும் மத்திய மாநில இலாகாக்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**12 குடிநீர் வசதி:**

நகரிலிருந்து 14 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள முக்கடலில் உள்ள மலைகளுக்கு இடையே கட்டப்பட்டிருக்கும் அணைக்கட்டில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் 16" குழாய் மூலம் நகரிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்படுகிறது. முக்கடலிலிருந்து குழாய் வரும்பாதையில் இருக்கும் பூதப்பாண்டி, துவரங்காடு, விளாங்காடு

ஈசாந்திமங்கலம், இறச்சகுளம், புத்தேரி ஆகிய ஊராட்சிப்பகுதிகளுக்குத்தண்ணீர்வழங்கப்படுகிறது 19 கிலோ மீட்டரில உள்ள சுசீந்திரம் பேரூராட்சிக்கும் இத்திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்கப் படுகிறது.

ஷை தண்ணீர் விளியோகம் 15-5-59-ல் அரசிடமிருந்து இந்நகராட்சிக்கு கொடுக்கப்பட்டது 1959-60ல் குடிநீர் வசதிக்காக ரூ 1,29,984 செலவு செய்யப்பட்டது. தினம் ஒன்றுக்கு 10 35 லட்சம் கியாலன் தண்ணீர் விளியோகம் செய்யப்பட்டது. 448 பொதுக் குழாய்கள் இயங்கின. நகரில் மொத்தம் 1364 குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன

விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்குப் (Extended area தண்ணீர் வழங்க ரூ 8,67,017 செலவில் மூன்றாவது நீர் சுத்திகரிப்புப் படுக்கையும் தண்ணீர் விளியோக குழாய்களும் 24-7-61ல் அமைக்கப்பட்டன மேலும் இரண்டாவது மேல்நிலைத் தொட்டி ரூ 3,28,000/- செலவில் 1968-ம் வருடம் ஜூலை மாதம் கட்டி முடிக்கப்பட்டது.

நகரில் குடிநீர் வசதியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு "நாகர்கோவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்" தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் செயல்படுத்தப்பட்டு, 7-7-79ல ஆரம்பிக்கப்பட்டன இத்திட்டத்தின் கீழ் (1) முக்கடலில் அணையில் நீர்த்தேக்கப் பகுதியில் தண்ணீர் கொள்ளளவை அதிகரித்தல் (2) முக்கடலிலிருந்து நாகர்கோவில் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கூடுதலாக மெயின் அமைத்தல் (3) கூடுதலாக நீர்சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல் (4) கூடுதலாக நீரேற்று குழாய் மற்றும் உயர்நிலை தாங்கி அமைத்தல முதலான அடங்கும் அதற்காககீழ்க்கண்ட விபரங்களின்படி, நகராட்சியில் படி, நகராட்சியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அரசு கடன் | ரூ 23-09 லட்சம் |
| ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் | ரூ. 38-34 ,, |
| நகராட்சி நிதி | ரூ 41-81 ,, |
| மொத்தம் | ரூ. 103-24 ,, |

முக்கடல் அணைக்கட்டிலிருந்து கொண்டு வரப்படும் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, சுகாதார முறையில் சுத்திகரிக்க பட்டு, பாசிகை கலவையுடன் ஒரு கீழ்நிலை நீர்த் தொட்டி, இரு மேல்நிலை நீர் தொட்டி வழியாக நகருக்கு தண்ணீர் விளியோகம் செய்யப்படுகிறது. இந்நீர்தாங்கிக்கு நீரேற்றுவதற்கு இரண்டு 40 பரியாற்றலும் 30 பரியாற்றலுமகொண்ட மின் உந்துகள் அமைக்கப்பட்டிருக்கின்றன நகரில் 101 கிலோமீட்டர் நீளமுள்ள பகிர்மானக்குழாய்களின் மூலம் மொத்தம் 620 பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு நகர் மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. நகரில் மொத்தம் 8356 குழாய இணைப்புகள கொடுக்கப்பட்டுள்ளன. நாள் ஒன்றுக்கு 35 லட்சம் கியாலன் தண்ணீர் வழங்கப்படுகிறது குடிநீர் வசதிக்காக 1979—80-ல் ரூ. 24,53,327 செலவிடப்பட்டது.

## பிற குறிப்புகள்

| | விபரம் | தமிழகத்துடன் இணையும் போது | தற்போது உள்ளவை |
|---|---|---|---|
| 1 | நகராட்சி தாய் சேய் நல நிலையங்கள் | 6 | 10 |
| 2 | நகராட்சி பூங்காக்கள் | 5 | 8 |
| 3 | நகராட்சி எல்லைக்குள் உள்ள வீடுகள் | 14,620 | 2[illegible],823 |
| 4 | சினிமா கொட்டகைகள் | 6 | 8 |
| 5 | நகராட்சி அம்மைக் குத்துபவர்கள் | 4 | 7 |
| 6 | அரசு மருத்துவமனை | — | 1 |
| 7 | நகராட்சி மருந்தகம் | — | 1 |

# கன்னியாகுமரி நகரியம்

நீலத்திரை கடற்கரை ஓரத்தில் அமைந்திருக்கும் கன்னியாகுமரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி பிராந்தியத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். இப்பகுதி பாரத நாட்டின் தென்பகுதியில் மூன்று கடல்கள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் இத்தலத்தை பார்வையிட வந்து கொண்டிருக்கின்றனர் குமரியில் அமைந்திருக்கும் கன்னிதேவி பகவதியின் பெயரில் தான் இவ் நகரின் பெயர் அமைந்துள்ளது முன்னால் இப்பகுதி திருவிதாங்கூர் மன்னரின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது, பின் திருகொச்சி மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது இன்று தமிழகத்துடன் இணைந்த பகுதியாக விளங்குகிறது இப்பகுதியில் வாழும் மக்கள் பெரும்பாலும் விவசாயம், மீன்பிடி தொழில், கூலிவேலை, வியாபாரம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

குமரியின் சிறப்பு:

பாரதத்தின் தென்கோடியில் அமைந்திருக்கும் இத்திருத்தலம் பல் வேறுதனிச் சிறப்புகளை பெற்றுத்திகழ்கிறது

1 கன்னியாகுமரி கோவில்

கன்னியாகுமரி கோவில் கலை சிறப்புடையதாக உள்ளது கோவிலில் உறையும் தெய்வம் கன்னித்தேவியாகையால் இத்தலத்திற்கு கன்னியாகுமரி எனப்பெயர் வந்தது தேவியின் உருவம் சிறு குழந்தையின் உருவ அமைபடம் ஓடிவரும் தன்மையுடையதாகவும் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புடையதாகும் எனவே பல்லாயிரக்கணக்கான மக்கள் நாளேர்சோறும் தேவியின் தரிசனம் பெற்றுச்செல்கின்றனர்

2 விவேகானந்தா நினைவு மண்டபம்

குமரி முனையின் கிழக்கே சுமார் ½ மைல் தொலைவில் கடலின் உட்பகுதியில அமைந்துள்ள சுமார் மூன்று ஏக்கர் பரப்பும் கடல மட்டத்தில இருந்து 55 அடி உயரத்தில் அமைந்துள்ள பாறையில் விவேகானந்தா நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது சுவாமிவிவேகானந்தர் 1892-ல் இமயத்தில் இருந்து தொடங்கிய தமது இந்திய சுற்றுப் பயணத்தின் போது கன்னியாகுமரிக்கு வந்து சேர்ந்தார் குமரி தேவியை வணங்கிவிட்டு கடலில் நீந்தி சென்று அந்தப் பாறையில் அமர்ந்து தியானம் செய்தார் அவருடைய பெயரை நினைவு கூறும் வகையில் இந்த மண்டபம் சிறப்புறக் கட்டப்பட்டு 1970 செப்டம்பர் 2-ம் தேதி இந்திய ஜனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது இந்தக் கட்டடத்தின் வடிவமும் அமைப்பும் அதற்குள் அமைந்திருக்கும் விவேகானந்தர் சிலை தியான மண்டபம் ஆகியவையும் தினமும் ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்கின்றன நினைவுப்பாறைக்கு சென்று அதன் அழகினைக் கண்டுகளிக்க படகு போக்குவரத்து வசதியும் விவேகானந்தர் நினைவுக் குழு கமிட்டியினரால் செய்யப்பட்டுள்ளது

3 காந்தி மண்டபம்:

மகாத்மாகாந்தியின் மறைவிற்குப் ஏஏஏபின் அவரது அஸ்தி 1948 பெப்ருவரி மாதம் 12-ம் நாள் அன்று குமரிக்கடலில் கரைக்கப்பட்டது ஷை அஸ்தி கடலில் கரைப்பதற்கு முன் வைக்கப்பட்டிருந்த இடத்தில் காந்தியடிகளின் நினைவு மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது ஏறத்தாழ மூன்று லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இவ் மண்டபம் 1956 அக்டோபர் மாதம் முடிவடைந்தது இந் நினைவு மண்டபத்தின் உள் உள்ள பீடத்திற்கு மெலே உள்ள துவாரம் வழியாக காந்தியடிகளின் பிறந்த நாளாகிய அக்டோபர் 2-ம் தேதி கதிரவனின் ஒளி பீடத்தின் மீது விழும்படியாக இவ் மண்டபத்தின் கட்டிடக்கலை அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இவ் மண்டபத்தினை பார்வையிட்டுச் செல்கின்றனர்

4 கதிரவனின் உதயமும் மறையும்

குமரியின் மற்றொரு சிறப்பு என்னவென்றால் காலையில் கடலின் உட்பகுதியில் தகந்தகாயமாக உதயமாகும் கதிரவனைக்கண்டு களிக்கலாம் மாலையில் அவன் கடலில் அழகாக மறைவதையும்கண்டு களிக்கலாம் மற்றும் முழுமதி நாளன்று கிழக்குக்கடலில் சந்திரன் உதயமாவதும் அதே சமயத்தில் மேற்குக்கடலில் சூரியன் மறைவதும் கண்கொள்ளாக் காட்சியாகும் இந்தக் கவின்மிகு காட்சியை பல்வேறு இடங்களில் இருந்து வரும் உல்லாச பயணிகள் கண்டுகளிக்கின்றனர்

5 முக்கடல்

குமரி கிழக்கே வங்கக்கடலும், தெற்கே இந்தியப் பெருங்கடலும், மேற்கே அரபிக்கடலும் கூடு முக்கடல் இடமாகும், கடற்கரை பல நிற மணலையும் பலவகைப்பட்ட கடற்படு பொருட்களையும் உள்ளதாக இருக்கிறது இது உல்லாசப் பயணிகளைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது

மணல் குன்று: கடற்கரையை ஒட்டி கடற்காற்றினால் மணல் குற்றுகள் ஆங்காங்கே தோன்றி உல்லாச பயணிகளின் உள்ளங்களைத் தொட்டுக்கிறது என்றால் அது மிகையாகாது

| | | |
|---|---|---|
| 1 | நகரியம் அமைக்கப்பட்ட நாள் | 1-10-1965 |
| 2 | பரப்பளவு | 2.5 ச.கி.மீ. |
| 3 | மக்கள்தொகை (1971 கணக்குப்படி) | 11214 |
| 4 | தினமும்வரும் சுற்றுலா பயணிகளின் சராசரி வருகை | 7500 |

| | | |
|---|---|---|
| 5 | நகரிய சாலைகள் .. | 8 கி. மீ |
| 6 | பொது குடிநீர்குழாய்கள் எண்ணிக்கை | 65 |
| 7 | வீட்டு இணைப்பு குழாய்கள் எண்ணிக்கை | . 295 |
| 8 | தெருவிளக்கு : 1 ஆவிவிளக்கு | 77 |
| | 2 குழல்விளக்கு | 160 |
| | 3 சாதாரண | 126 |
| 9 | கல்வி நிலையங்கள் .. | |
| | தனியார் உயர் நிலை பள்ளி .. | 1 |
| | தனியார் நடுநிலை பள்ளி .. | 1 |
| | தனியார் ஆரம்ப பள்ளி .. | 2 |
| | அரசு நடுத்தர பள்ளி .. | 1 |
| | அரசு ஆரம்ப பள்ளி .. | 2 |
| 10 | அரசு மருந்துவமனை .. | 1 |
| | தனியார் மருத்துவமனை .. | 1 |
| 11 | கிராம அலுவலகம் .. | 1 |
| 12 | சுகாதார அலுவலகம் .. | 1 |
| 13 | காவல் நிலையம் .. | 1 |
| 14 | தபால் தந்தி அலுவலகம் .. | 1 |
| 15 | புகைவண்டி நிலையம் .. | 1 |
| 16 | பேருந்து நிலையம் .. | 1 |
| 17 | துறைமுக அலுவலகம் .. | 1 |
| 18 | மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் | 1 |
| 19 | மீன் தொழில்நுட்பவியல் அலுவலம் | 1 |
| 20 | அண்மை கடல் ஆராச்சி நிலையம் | 1 |
| 21 | இளநிலை பொறியாளர் (தேசிய நெடுஞ் சாலை) | 1 |
| 22 | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் (பொ . ப . து) | 1 |
| 23 | கலங்கரை விளக்கம் .. | 1 |
| 24 | அரசு பழப்பண்ணை .. | 1 |
| 25 | சுற்றுலா அலுவலகம் .. | 1 |
| 26 | சுற்றுலா விடுதி | |
| | தமிழ்நாடு அரசு .. | 1 |
| | கேரள அரசு .. | 1 |
| | சுற்றுலா வாரியம் .. | 2 |
| | தனியார் தற்கும் .. | 40 |
| | நகரியத்தின் சாரசரி வரவு .. | ரூ 5, 77, 700-00 |
| | ஷை செலவு .. | ரூ 4, 06, 600-00 |

138671

குடிநீர் வசதி

கன்னியாகுமரி நகரியப்பகுதி ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா பகுதியாகவும், புண்ணியஸ்தலமாகவும் இருப்பதால் நாள்தோறும் வரும் உல்லாச பிராணிகளுக்கும், யாத்திரிகர்களுக்கும் குடிநீர்வசதி செய்யப்பட்டுள்ளது, குடிநீர் பிரச்சனைக்குத் தீர்வு காண சுத்தரிக்கப்பட்ட குடிநீர், நாகர்கோவில் மார்த்தாண்டவர்மா தண்ணீர் விநியோகப்பிரிவில் இருந்து தண்ணீர் தினசரி 620000 லிட்டர்கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதவிர இவ்நகரியமே இரண்டு மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள் கட்டி கிணற்று நீரை விநியோகம் செய்துவருகிறது பொதுவாக நகரியப்பகுதிகளில் 90% சதவிகிதம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இவநகரியப்பகுதியில் பொதுக்குழாய்கள் 65 ஏற்படுத்தப்பட்டுள்ளது இவைபோக 295 வீட்டு இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது மேலும் குடிநீர்த்திட்டத்தை தன் நிறைவு திட்டமாக்க ரூ 7.27 லட்ச ரூபாய் செலவில் நாகர்கோவில் இருந்து சுத்தரிக்கப்பட்ட குடி தண்ணீர் கொண்டுவந்து அதற்காக தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி 85, 400 லிட்டர் கொள்ளளவில் கட்டப்பட்டு தினமும் 12,65,000 லிட்டர் தண்ணீர் கிடைக்கூடிய அளவுக்கு திட்டம் தீட்டப்பட்டு அரசு கடனும்- ஆயுள் காப்பீட்டுக்கழக கடனும் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுகாதாரம் :

மக்களின் அடிப்படை தேவையான சுகாதார வசதிகள் செய்வதற்காக இவ்நகரியத்தில் இருந்து 10 சுகாதார ஊழியர்களை வைத்து கடைக்கால்கள், சாலைகள் தெருக்கள் முதலியவை சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதுபோல் சுகாதார இலாகாவின் கீழ் இயங்கிவரும் பிறப்பு இறப்பு அலுவலகத்தில் பணிபுரியும் 5 சுகாதார ஊழியர்கள் நகரியபகுதியில் உள்ள முக்கிய தெருக்களை சுத்தம் செய்துவருகின்றனர். இதுபோக அரசால் நடத்தப்படும் அரசு மருத்துவ மனை ஒன்றும், தனியார் நடத்தும் மருத்துவமனைகள் இரண்டும் செயல்பட்டு வருகிறது.

போக்குவரத்து :

கன்னியாகுமரி தென்கோடியில் இருப்பதால் நாட்டின் பலபாகங்களில் இருந்தும் கன்னியாகுமரிக்கு வருகைதருவதற்காக ரயில்வே போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது இது தவிர்த்து கன்னியாகுமரியில் இருந்து பலவேறு இடங்களுக்கு பேருந்துகள் வழி செல்வதற்கு வசதியாக கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகக் கிளையும் விரைவு வண்டி போக்குவரத்துக் கழகமான திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக கிளையும் கன்னியாகுமரியில் செயல்படுகிறது. தினமும் இவ் கிளைகளில் இருந்தும் 29 பேருந்துகளும் 24 விரைவு வண்டிகளும் சென்று வருகிறது.

நகரமைப்புத்திட்டம் :

கன்னியாகுமரி ஒரு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாலும் பல ஆயிரக்கணக்கான உல்லாசப்பயணிகள் பல்வேறு இடங்களில் இருந்து வருவதாலும், வளர்ந்துவரும் நகரியத்தின் அடிப்படையில் வசதி செய்வதற்கும் நகரியப்பகுதியை அழகுபடுத்தவும் வேண்டி நகர ஊரமைப்புத்துறையினரால் நகரமைப்பு திட்டம் கொண்டுவரப்பட்டு, நகரியப்பகுதியை 7 பகுதிகளாகப்பிரிவு செய்து ஒவ்வொரு பிரிவும் தனித்தனி திட்டத்தின் கீழ்கொண்டு வரப்பட்டுள்ளது தற்போது மூன்று திட்ட பிரிவுகள் தயார் செய்யப்பட்டு அரசு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

கன்னற்

"பொருள் தரும் தமிழே நீயோர்
பூக்காடு! நானோர் தும்பி!"



பயோனியர் முத்து பிரிண்டிங் ஹவுஸ், நாகர்கோவில்-629001.